# சமதர்ம உருவாக்கலில் மீளவும் ஓர் பின்னடைவு

# சமதர்ம உருவாக்கலில் மீளவும் ஓர் பின்னடைவு

பொது சன நூலகம்
உட்படுதவும்
27 OCT 1992
யாழ்ப்பாணம்

தேசிய நூலகப் பி...
மாநகர நூலக சே...
யாழ்ப்பாணம்.

அ. கௌரிகாந்தன்

PUBLIC LIBRARY.
JAFFNA.

86414

தமிழ்த்தாய் பதிப்பக

42C

# சமதர்ம உருவாக்கலில் மீளவும் ஓர் பின்னடைவு

(கட்டுரைகள்)

335.43

தொகுப்பாசிரியர் :-

அ. கௌரிகாந்தன்

முதற்பதிப்பு

சனவரி 1992

வெளியீடு :-

தமிழ்த்தாய் பதிப்பகம்

தமிழீழம்

அச்சுப்பதிப்பு :-

மாறன் பதிப்பகம்,

664, மருத்துவமனை வீதி,

யாழ்ப்பாணம்

விலை:- 50/-

## உள்ளடக்கம்

86414

லெனினின் மேற்கோள் ........... I

மா சே-துங்கின் மேற்கோள் ........ II

பதிப்புரை ................ IV

முன்னுரை ................ V

1. ஸ்ராலின் சகாப்த சோவியத் பொருளாதாரம்- 01
 - மார்ஷல் ஐ. கோல்ட்மன்

2. பிரஷ்நோவ் கால சோவியத் ஒன்றியம் - சில சமூக பொருளாதார வெளிப் பாடுகள் 9
 - மார்ஷல் ஐ. கோல்ட்மன்

3. பாஸிஸமும் பொதுவுடமையும் ஒரு ஒப்புநோக்கு?!! 15
 - யு. செல்லேவ்

4. சோவியத் பொருளாதாரம் சில தகவல்கள் [80களில்] 21
 - தொகுத்தவர்:- அ. கௌரிகாந்தன்

5. ருஷ்ய சமதர்மம் ஒருவகை நவகாலனியலிஸமா? 25
 - அ. கௌரிகாந்தன்

6. கம்யூனிஸத்தின் தோல்விக்கான அடிக்கட்டுமாண காரணங்கள் 31
 - சில்லியு புறுகன்

7. லெனின் மீளவும் போல்ஷ்விக் ஆவாரா? 37
 - அ. கௌரிகாந்தன்

8. சீனாவின் அரசியல் நிலைமை பற்றி - சிலீபெங் 52

9. சீன நிலைப்பாடு பற்றி - லிபெங் 57

10. அட்டவணை 64

11. பின்னிணைப்பு 67

2. பிழை திருத்தம் 71

# பாராளுமன்றம் பற்றி லெனின்

பாராளுமன்றவாதத்திற்கு புறம்பானபாதை என்பது. நிச்சயமாக பிரதிநிதித்துவ நிறுவனங்களையும் தேர்தல் கோட்பாடுகளையும் அழிப்பதென்பதாகாது. மாறாக பேச்சு மண்டபங்களாக இருக்கும் பிரதிநிதித்துவ நிறுவனங்களை "செயற்படும்" அங்கங்களாக மாற்றுவது என்பதேயாகும். "கொம்யூன் என்பது ஒரு பாராளுமன்ற அங்கமாக இருக்கக் கூடாது. மாறாக ஒரு செயற்படும் அங்கமாக இருக்க வேண்டும். இச் செயற்பாடு ஒரே நேரத்தில் நிறைவேற்றுத் தன்மை மிக்கதாகவும் சட்டவாக்கத் தன்மை மிக்கதாகவும் இருக்க வேண்டும்."

"ஒரு பாராளுமன்ற அங்கமாக இருக்கக் கூடாது மாறாக ஒரு செயற்படு அங்கமாக இருக்க வேண்டும்" என்பது இன்றைய நாள் பாராளுமன்ற வாதிகளினதும் சோஷல் ஜனநாயகத்தின் பாராளுமன்ற "வளர்ப்பு நாய்களினதும்" நெற்றிப் பொட்டில் ஆணி அடித்த மாதிரியே உள்ளன.

அமெரிக்காவில் இருந்து சுவிற்சலாந்து வரை. பிரான்சில் இருந்து லண்டன் வரை. நோர்வேயையும் இவை போன்ற ஏனைய சகல பாராளுமன்ற நாடுகளையும் எடுத்துப் பாருங்கள் - இந்த நாடுகளில் அரசின் உண்மையான அலுவல்கள் திரைக்குப் பின்னாலேயே நடைபெறுகின்றன. இவைகள் இலாகாக்களாலும், உயர் அதிகாரிகளாலும், பொது உத்தியோகஸ்தர்களாலும் நிறைவேற்றப்படுகின்றன. "சாதாரண மக்களை" ஏமாற்றுவது என்ற விசேட நடவடிக்கைக்காக பேசிக் களிக்கும் இடமாக பாராளுமன்றம் விடப்பட்டுள்ளது.

( வி. ஐ. லெனின் - "அரசும் புரட்சியும்
பீக்கிங் பிரசுரம் பக்கம் 55 )
( மொ - ர் - ஏஜிகே )

# இருகட்சி அமைப்புப் பற்றி மா - ஓ

" மேற்கத்தைய பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் அதிக ஜனநாயகம் இருப்பதாகவும் எமது மக்கள் ஜனநாயகத்தின் கீழ் குறைந்தளவு ஜனநாயகமே இருப்பதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். ஒரு கட்சி செயலகத்திலும் மற்றைய கட்சி செயலகத்துக்கு வெளியிலும் இருக்கும் மேற்கத்தைய நாடுகளைப் போன்ற இரு கட்சி அமைப்பையே அவர்கள் எதிர் பார்க்கிறார்கள்.

ஆனால் இந்த இரு கட்சி அமைப்பென்று சொல்லப்படுவேது முதலாளித்துவ சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தி வைப்பதற்கான ஒரு வழிவகையே தவிர வேறொன்றுமில்லை ; இதனால் என்றைக்குமே உழைக்கும் மக்களின் ஜனநாயகத்திற்கு உத்தரவாதம் தரவியலாது.

ஒரு மறுக்க முடியாத உண்மை என்னவென்றால் ஜனநாயகமும் சுதந்திரமும் என்றுமே திண்ணியமானதாக( Abstract ) இருக்காது, அவை பூடகமானதாக மாத்திரமே ( Concreate ) இருக்கும் வர்க்கப் போராட்டத்தால் நிரப்பப்பட்டுள்ள ஒரு சமூகத்தில், சுரண்டும். வர்க்கங்களுக்கு உழைக்கும் மக்களை சுரண்டுவதற்கான சுதந்திரம் இருக்குமானால், உழைக்கும் மக்களுக்கு சுரண்டப்படாமல் இருப்பதற்கான சுதந்திரம் இருக்கமாட்டாது. அதேபோல் பூர்ஷ்வாகளுக்கு ஜனநாயகம் இருக்குமானால், பாட்டாளிவர்க்கத்துக்கும் ஏனைய உழைக்கும் மக்களுக்கும் ஜனநாயகம் இருக்க மாட்டாது.

சில முதலாளித்துவ நாடுகளில் பொதுவுடமைக் கட்சியில் சட்டரீதியான இருத்தல் சகித்துக் கொள்ளப்படுகிறது, ஆனால் பூர்ஷ்வாக்களின் அடிப்படை நலன்களை பயமுறுத்துவதாக அமையாமல் இருக்கும் வரை மாத்திரமே இது பொறுத்துக் கொள்ளப்படுகிறது. அதற்கும் அப்பால் இக்கட்சியின் இருத்தல் பொறுத்துக் கொள்ளப் படுவேதில்லை.

ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் ஒரு சூக்கிலமாக கோருபவர்கள் ஜனநாயகத்தை ஒரு முடிவாக கருதுகிறார்களே தவிர அதை ஒரு வழிவகையாக அல்லது மார்க்கமாகக் கருதவில்லை ஜனநாயகம் மேற்கட்டுமாணத்தின் பகுதி எனவும் அது அரசியல் வகையறாக்களுள் அடங்குகிறது எனவுமே எமது மாக்ஸியம் கற்றுத்தருகிறது.



விளக்கமாய் சொல்வதானால், இறுதி ஆய்வில் இது பொருளாதார அடிக்கட்டுமாணத்திற்கு சேவை செய்வதொன்றேயாகும். சுதந்திரத்தைப் பொறுத்த வரையிலுங்கூட இதுவே உண்மையாகும். ஜனநாயகமும், சுதந்திரமும் ஒன்றுடன் ஒன்று சார்ந்துள்ளவைதான் இவை இரண்டுமே சுக்கிலமானவையல்ல, தனித்துவ வரலாற்று நிலைமைகளில் தான் அவை தோற்றம் பெற்று அபிவிருத்தியடைகின்றன.

மக்களின் அணியினுள், ஜனநாயகம் மத்தியத்துவத்துடன் கூட்டிணைந்தது. அதேபோன்றே சுதந்திரம் ஜனநாயகத்துடன் கூட்டிணைந்தது. அவை ஒரு தனி முழுமையின் இரு எதிர் பக்கங்களாகும், ஐக்கியப்பட்டிருக்கும் அதேவேளையில் முரண்பட்டு நிற்பனவாகும். ஆகவே நாம் ஒன்றை மறுப்பதற்காக மற்றொன்றிற்கு அழுத்தம் கொடுக்கக் கூடாது.

மக்கள் மத்தியில், நாம் சுதந்திரம் இல்லாமலும் செயற்பட முடியாது; ஜனநாயகம் இல்லாமலும் செயற்பட முடியாது மத்தியத்துவம் இல்லாமலும் செயற்பட முடியாது. ஜனநாயகத்தினதும் மத்தியத்துவத்தினதும் ஐக்கியம், சுதந்திரத்தினதும் ஒழுங்குக் கட்டுபாட்டினதும் ஐக்கியம் ஆகியவற்றின் இணைவுதான் எமது ஜனநாயக மத்தியத்துவமாகும். இந்த அமைப்பின் கீழ் மக்கள் எல்லையற்ற ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் அனுபவிப்பர், ஆனால் அதே நேரத்தில் அவர்கள்சமதர்ம ஒழுங்கு கட்டுப்பாட்டிற்குள் தம்மை நிறுத்திக்கொள்ள வேண்டியதும் அவசியமாகின்றது. இவை சகலதும் மக்களின் பரந்த வெகுஜனங்களால் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது."

( மா. சே. துங், மக்கள் மத்தியில் உள்ள
முரண்பாடுகளை சரியாக கையாள்தல்
பற்றி பீக்கிங் பிரசுரம் -1977 பக்கம் 85 - 86
மொ - ர் . ஏஜிகே. )

UBLIC LIBRARY,
JAFFNA.

# பதிப்புரை

சோஷலிஸ சமுக அமைப்பை நிர்மாணிப்பது பற்றிய விடயத்
தில் சோவியத் யூனியனது அனுபவம் ஒரு நல்ல படிப்பினையா
கும். இந்த வகையில் சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை நிர்
மாணிப்பது சம்பந்தமான தவறுகள் எங்கு, எப்போ, யாரால், எப்
படி விடப்பட்டன என்பது பற்றிய உண்மைகளை இந்நூலாசிரியர்
கண்டறிய முற்படுகிறார். இதற்கேற்ற வகையில் பொருத்தமான
சில கட்டுரைகளையும், பேட்டிகளையும் மொழிபெயர்ப்புச்
செய்து சொந்தமாகத் தான் எழுதிய கட்டுரைகளையும் இணைத்து
ஆசிரியர் இதனை ஒரு நூல்வடிவாக்கியுள்ளார்.

இந்நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் தமிழ்த்தாய்ப்
பதிப்பகத்தின் கருத்துக்கள் அல்ல. இவை ஆசிரியரின் தனிப்
பட்ட கருத்து நோக்கைக் கொண்டவைகளே. சோஷலிஸம்
சம்பந்தமான பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களையும், விமர்
சனங்களையும் மக்கள்முன் சமர்ப்பிப்பது ஒரு பயனுள்ள விடய
மாய் அமையுமென, தமிழ்த்தாய்ப் பதிப்பகம் கருதுகின்றது. அந்த
வகையில் இது ஒருவரின் கருத்துமட்டுமே,

ஒரு சமூகம் முன்னேற வேண்டுமாயின் அது பல முன்னனுபவங்களைக் கற்றறிவதும், பொருத்தமானவற்றை உள்வாங்கிக் கொள்வதும் அவசியமாகும், இந்த வகையில் சோவியத் யூனியனினது அனுபவங்களை ஆசிரியர் பரிசீலிக்கின்றார். இந்தவகையில் இன்று உலகில் முன்னணியில் நிற்கின்ற பல்வேறு நாடுகளினது அனுபவங்களினையும், அவற்றின் சரி பிழைகளையும் நாம் கற்றறிந்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

சோஷலிஸ அமைப்பு சோவியத் யூனியனில் சரிந்துள்ளது. அதற்காக அமெரிக்கத் தலைமையிலான முதலாளித்துவ - ஏகாதிபத்திய அமைப்பு சிறப்பானது என்றாகிவிடாது. சோவியத்தில் சோஷலிஸம் நெருக்கடிக்குள்ளாகியதுபோலவே அமெரிக்கத் தலைமையிலான முதலாளித்துவமும் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளது. அதிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் முழுமைப்படுத்தி ஆராய வேண்டியது அவசியம். எனவே எமது சமூக முன்னேற்றத்திற்குப் பொருத்தமான சிந்தனைகளையும், நடைமுறைகளையும் உருவாக்கிக் கொள்ளும் வகையில் நல்நோக்கில் அமைந்த பல்வேறு ஆய்வுகளையும், நோக்குகளையும் தமிழ்த்தாய் பதிப்பகம் வரவேற்கின்றது. அவ்வாறான நூல்களின் வரிசையில் இந்நூலும் ஒன்றாகும், இந்நூலை ஆக்கித் தந்த ஆசிரியருக்கு நன்றி கூறுவதுடன். இந்நூலை வெளியிடுவதில் தமிழ்த்தாய் பதிப்பகம் மகிழ்ச்சியும் அடைகிறது.

**தமிழ்த்தாய் பதிப்பகம்**
**யாழ்ப்பாணம்**
**12-2-1992**

# முன்னுரை

சமதர்மத்தையும், பொதுவுடமையையும் இழிவு படுத்துவது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு புதிய ஒரு விடயமல்ல. கார்ல் மார்க்ஸிற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே அவர்கள் இக் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். சோவியத் ஒன்றியம் குலைந்ததும், இவ்விதம் குலைவுற்ற பல நாடுகளில் சமதர்ம சமூக அமைப்பு சரிந்து போனதும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு பெரும் உவப்பான செய்தியேயாகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோவியத் ஒன்றியத்திலும் ஏற்பட்ட இந்த வீழ்ச்சியையிட்டு தொடர்ந்தும் பல்வேறு விதமான எதிர்பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகிறார்கள். சமதர்மமும், பொதுவுடமையும் நடைமுறைச் சாத்தியமற்ற வெற்று கற்பனைகளேயாகும் என்ற ஓர் எண்ணத்தை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும்.

சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சமதர்ம சமூக பொருளாதார அமைப்பு வீழ்ந்து விட்டது உண்மை. பொதுவுடமைவாதிகள் ஆட்சி அதிகாரத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டுவிட்டதும் உண்மை. சமதர்ம சமூக, பொருளாதார கட்டிவளர்ப்பு தொடர்பான ருஷ்ய வகைமாதிரி (Model) தோல்வி கண்டு விட்டது. இத் தோல்வியால் இவ் வகைமாதிரியைப் பின்பற்றிய ஏனைய நாடுகளிலும் சமதர்மம் தோல்வி கண்டுவிட்டது.

பொதுவுடமை சமூக அமைப்புக்கும் தனி உடமை சமூக அமைப்புக்கும் — குறிப்பாக முதலாளித்துவ சமூக அமைப்பு — இடையேயான மாறறுநிலை (Transition) சமூக வடிவமே சமதர்ம சமூக உருவாக்கமாகும். இம்மாற்று நிலை சமூக அமைப்பு எத்தனை வருடங்கள் நீடிக்கும் என்பதோ, என்னென்ன விதமான ஏற்ற இறக்கங்களுக்கு எத்தனை தடவைகள் முகங்கொடுக்கும் என்பதோ முன்கூட்டியே அனுமானிக்க முடியாது. ருஷ்யாவும் அதைச் சூழஉள்ள நாடுகளும் 70 வருடத்திற்குப் பின் முதலாவது பாரிய இறக்கத்திற்கு முகங்கொடுத்துள்ளது.

உலக வரலாற்றை பின்நோக்கி பார்க்கும் போது ஒரு சமூக அமைப்பு இன்னோர் சமூக அமைப்பாக மாறுவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் எடுத்துள்ளதையும், அவை பற்பல ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாகி இருந்ததையும் காணக் கூடியதாய் உள்ளது.

குறிஞ்சி, முல்லை ஆகிய நிலங்களில் ஆயிரக் கணக்கான வருடங்கள் செழித்து வளர்ந்திருந்த தமிழரின் ஆதி பொதுவுடமை சமூக அமைப்பு இந்திய பாணி அடிமை சமூக அமைப்பாக — மருதநிலை சமூக அமைப்பு - மாறுவதற்கு சுமார் 300 வருடங்கள் எடுத்துள்ளன. சங்ககாலமே இந்த மாற்றுநிலை காலமாக கணிக்கப்படுகிறது (Transition Period) அதேபோல் பெரும்வணிகரின் ஆதிக்கத்தில் இருந்த இந்த அடிமை சமூக அமைப்பு நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பாக மாற்றமுற சுமார் 400 வருடங்கள் எடுத்துள்ளன. நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் பக்திப் பேரியக்ககாலமே இந்த மாற்றுநிலை காலமாக கணிக்கப்படுகிறது.

பொதுவுடமைவாதிகள் ருஷ்ய சமதர்ம மாற்றுநிலை காலகட்டத்தில் அதிகாரத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டதுதான் இங்குள்ள பாரிய இறக்கமாகவுள்ளது. அப்படியிருந்த போதிலுங் கூட மீண்டும் ஒரு ஏற்றம் ஏற்படவே செய்யும்

இப் பாரிய இறக்கத்திற்கான காரணங்களை புரியவைக்க உதவுவதும், சமதர்ம சமூக — பொருளாதார அமைப்பை உருவாக்குவதில் விடப்பட்ட தவறுகள் என்னென்ன என்பதை சுட்டிக்காட்டுவதுமே இந் நூலின் நோக்கமாகும் ஒரு சிறுநூலில் முழு விடயத்தையும் சுட்டிக் காட்டவோ அல்லது சுட்டிக்காட்டப்பட்ட விடயத்தை அனைத்துப் பரிமாணங்களிலும் வைத்து தரிசிக்கவோ முடியாது என்பதை அனைவரும் அறிவர்.

PUBLIC LIBRARY,
JAFFNA,



சீனாவில் சமதர்ம சமூக — பொருளாதார உருவாக்கம் மிக நேர்த்தியாகவும் அனைத்து வழியிலும் நம்பிக்கை தரக் கூடியதாகவும் உள்ளது என்று நான் கருதவில்லை. அந்நிய மூலதனத்தின் உள்நுழைவு சீனாவின் சமதர்ம அடிக்கட்டுமாணத்தில் பல வேண்டத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது உண்மை. இது சீன சமதர்ம பண்பாட்டிலும் கூட தீய விளைவுகளை ஏற்படுத்தியே உள்ளது. ஆனால் புரட்சியின் அடிப்படை விவகாரமான அரசியல் அதிகாரம் சம்பந்தப்பட்ட விடயத்தில் சீன பொதுவுடமைவாதிகள் மிக தெளிவாக இருக்கிறார்கள். அரசியலதிகாரத்தை தமது கைகளில் வைத்திருப்பதில் வெற்றியும் கண்டுள்ளார்கள். ஆகவே சமதர்ம உருவாக்கத்தில் ஏற்படும் இறக்கங்களை வெற்றி கொள்வதற்கான பிரதான நிபந்தனையை (அரசியல் அதிகாரம்) அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். இதில்தான் ருஷ்ய பொதுவுடமைவாதிகள் பாரிய தவறிழைத்து விட்டார்கள். இந்த நிலமையை சுட்டிக்காட்டுவதற்காக இரு சீன கட்டுரைகளும் இதில் பிரசுரமாகின்றது.

இலங்கைத் தீவில் நடைபெறும் இரு பெரும் போராட்டங்களான தமிழீழ விடுதலைப் போராட்டமும், ஜே. வி. பி யை பிரதானமாகக் கொண்டு நடைபெறும் ஜனநாயகத்திற்கான போராட்டமும் சமதர்ம அபிலாசைகளைக் கொண்டுள்ளன என்பது யாவரும் அறிந்ததேயாகும். சமதர்மத்தின் சரிவால் ஏற்படும் அவநம்பிக்கை இவ் அபிலாசைகளில் பாரிய ஏமாற்றத்தை ஏற்படுத்துவது இயல்பானதேதான். இவ் அவநம்பிக்கையைப் போக்குவதற்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்நூல் தயாரிக்கப்பட்டது.

சோவியத் ஒன்றியத்தில் சமதர்மம் சரிவடைந்த இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஐரோப்பிய பாணியிலான பலகட்சி ஆட்சிமுறையை உலகெங்கும் பிரச்சாரப்படுத்தும் பணியில் ஏகாதிபத்திய சார்பு அரசியல் வாதிகள் ஈடுபட்டுள்ளார்கள். பாராளுமன்ற ஜனநாயகத்தையும், பல கட்சி ஆட்சி முறையையும் பற்றிய தர்க்கம் உலகின் பல நாடுகளிலும் நடைபெறத் தொடங்கியுள்ளன. எமது நாட்டிலும் அது நடைபெற வேண்டியது அவசியமானதாய் உள்ளது. சீனா ஒரு புதிய வகைமாதிரியை முன்வைக்கின்றது. இதுபற்றிய தர்க்கங்கள் எமது நாட்டிலும் மலர்வது அவசியமானது. இந்நூலின் மூலம் இவ்வித தர்க்கத்தை அறிமுகப்படுத்த முயற்சித்துள்ளேன்.

இந் நூலை வெளிக் கொணர ஆர்வமூட்டிய நண்பர்களுக்கும் இந் நூலைப் பதிப்பித்த தமிழ்த்தாய் பதிப்பகத்தாருக்கும், அட்டையை தயாரித்து உதவிய நண்பன் விவேக்கிற்கும், கையெழுத்துப் பிரதியை திருத்த உதவிய நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகள் பற்றிய விவகாரங்களையும், எதிர்புரட்சிக்குப் பின்னர் சர்வதேச அரங்கிலும், சோவியத் ஒன்றிய குடியரசுகளிலும் ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெற்றுள்ள மாற்றங்களையும் பாகம் II ல் வெளிக் கொணர எண்ணியுள்ளேன். ஏற்கனவே ஒத்துழைப்பு வழங்கியவர்களினதும் வாசகர்களினதும் ஊக்குவிப்பும், ஒத்துழைப்பும் கிடைக்கும் என எதிர் பார்க்கிறேன்.

நன்றி.

அ. கௌரிகாந்தன்

# ஸ்ராலின் சகாப்த சோவியத் பொருளாதாரம்- ஒரு நோக்கு

ஒரு கோணத்தில் பார்த்தால் சோவியத் பொருளாதாரம் மறுசீரமைப்பை வேண்டி நிற்பது ஏன் அவசியமாயிற்று என்பது ஆச்சரியமானதாகவே உள்ளது. 1930களின் ஆரம்பத்தில் தமது நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியானது வருடத்திற்கு 20% மாக வளர்ந்து வருகிறது என சோவியத்துக்கள் கூறின, இதுதான் உலகின் அதி உச்ச வளர்ச்சியாகவும் இருந்தது. மேற்கத்தைய தரத்திற்கும் எண்ணக் கருவிற்கும் ஏற்ற முறையில் மீள் கணக்குப்போட்டுப் பார்த்த போதிலுங்கூட சோவியத் பொருளாதாரம் பெரும்பான்மையான உலகப் பொருளாதாரங்களை பெருமைப்படச் செய்வதாகவே அமைந்திருந்தது. 1930 களிலேயே வளர்ச்சியானது மிகக் கவர்ச்சி மிக்கதாய் அமைந்திருந்தது. ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் தமது சொந்த நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பாலும் வங்குரோத்து ஆகிவிட்ட தொழிற்சாலைகளின் அதிகரிப்பாலும் தொல்லைப் பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையில் சோவியத் பொருளாதாரமானது தனது சொந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதிலும் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதிலும் துரிதமாக முன்னேறின.

பிரித்தானிய சோஷலிஸ்ட்களான பியர்றீலும், சிட்னி வெப்பும் ருஷ்யாவுக்கு விஜயம் செய்தபோது வியாபார சுற்று வட்டத்தில் அடிக்கடி ஏற்படும் தேக்க நிலையை சோவியத்துக்கள் தீர்த்துவிட்டார்கள் என அபிப்பிராயம் கூறினர். ஒப்பு நோக்கில் மிகச் சாதாரண அளவான மேற்கத்தைய தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வதன் மூலமே சோவியத்துக்களால் மதிப்பு மிக்க அளவான அடிக்கட்டுமாணத்தை உருவாக்கக் கூடியதாய் இருந்துள்ளது. புரட்சிக்கு முன்னைய ருஷ்யா கைத்தொழில் ரீதியில் ஒரு பின்தங்கிய, வறுமைப்பட்ட நாடாகவே இருந்தது. 2வது உலக யுத்தத்தின் போது அது சக்திமிக்கதொரு இராணுவ கட்டுமாணத்தை உள்ளதாய் பரிணமித்திருந்தது.

ஸ்ராலினின் மரணத்திற்கு பின்பான சில வருடங்களுக்கு சோவியத் வளர்ச்சி வியத்தகு வேகத்துடன் தொடர்ந்தது. 1930களின் அபூர்வமான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது படிப்படியான ஒரு வீழ்ச்சி தென்பட்டாலுங்கூட 1950களின் வளர்ச்சி மிக உயர்வானதாகவே இருந்தது. இதனால் 1959ல் ஐக்கிய அமெரிக்காவுக்கு விஜயஞ்செய்த நிக்கிற்றா குருஷ்ஷேவ், சோவியத் யூனியன் 1970 அல்லது 1980 களில் அமெரிக்காவை முந்திச் செல்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு என்று கூறி அமெரிக்காவில் பெருமைப்பட்டுக் கொண்டார். 1950களின் கடைசிப் பிற்பகுதியில் சோவியத் வளர்ச்சியின் புள்ளிவிபரத்தை அவதானித்த அமெரிக்கா குருஷ்ஷேவின் பயமுறுத்தலை பாரதூரமானதாக கருதிக் கொண்டது. (அட்டவணை 1ஐப் பார்க்கவும்)

விவசாயத் துறைசார்ந்த உற்பத்தி கைத்தொழில் துறையிலான வெற்றிக்கு சமாந்தரமானதாகவே அமைந்திருந்தது. குருஷ்ஷேவின் தலைமையின் கீழ் சோவியத் விவசாயிகள் சோவியத் வரலாற்றிலேயே அதி உயர்ந்த விவசாய அறுவடையை மேற்கொண்டார்கள். தற்போது பயிர் செய்யப்படும் நிலங்களில் உள்ள சோவியத் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புகள் வழங்கவும், தானிய உற்பத்தியினை கன்னி நிலங்களுக்கு விஸ்தரிக்க பெருமளவு பணத்தை ஒதுக்கவும் குருஷ்ஷேவ் தீர்மானித்தார். அவரின் முயற்சி கைமேல் பலனளித்தது. எதிர்கால தானிய விளைச்சல் மேலும் நம்பிக்கை ஊட்டுவதாக அமையும் என எதிர்பார்ப்பதற்கான சூழலே அப்போது நிலவியது. இதனுடன் சேர்ந்து. சோவியத் விவசாயிகள் கைத்தொழில் பயிர்களான பருத்தி போன்றவற்றின் விளைச்சலிலும் புதிய சாதனைகளைப் படைத்தார்கள்.



அதிகரித்த விளைச்சலானது, அதிலும் குறிப்பாக விவசாய துறையிலான அதிகரிப்பானது, நுகர்வோருக்கு அதிகளவு பொருட்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியது. இது ஒரு பிரதான வளர்ச்சியாகும். ஸ்ராலினின் மரணம்வரை சோவியத் நுகர்வோன் மிக மோசமாகவே கவனிக்கப்பட்டான். 2 வது உலக யுத்தத்தின் போதான இழப்புகள் ஸ்ராலினின் கடமையை இலகுவானதாக ஆக்கவில்லை, ஆனால் அவர் சோவியத் நுகர்வோர்களுக்கு உதவுவது பற்றி அதிகமாக கவனம் செலுத்தவில்லை. அவர் சோவியத் கனரகத் தொழிலை வளர்ப்பதிலேயே அதிக அழுத்தம் செலுத்தினார். இந்த சூழ்நிலைகளின் கீழ், 1952 லேயே சோவியத் வாழ்க்கைத்தரம் மீண்டும் 1939 ன் மட்டத்தை அடைந்தது. 1939ன் வாழ்க்கைத்தரம் அவ்வளவு உயர்வானதல்ல என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

குருஷ்ஷேவ் வாழ்க்கைத் தரமட்டத்தின் உயர்வுக்கு அதிக ஆர்வம் காட்டினார். அவரின் தலைமையின் கீழ், உணவு விற்பனவு மாத்திரமல்ல, ஏனைய நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியும் அதிகரித்தன. குடியிருப்பு வசதிகளை உருவாக்கும் முயற்சியையும் அவர் ஊக்குவித்தார். ஆனாலும் வாழ்க்கைத்தர உயர்வு விவகாரத்தில் மேற்கு ஐரோப்பாவுடனும் அமெரிக்காவுடனும் ஒப்பிடும்போது சோவியத்தின் இவ் அடைவுகள் அவ்வளவு கவனத்துக்குரிய தொன்றல்ல. ஆனால் 1950 களின் ஆரம்பத்துடன் ஒப்பிடும் போது சோவியத் மக்கள் இந்த நிலைக்கு நிரம்பவும் நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள், வருங்காலம் மேலும் பிரகாசமானதாக தெரிந்தது. 1959 லும் 1960 லும் சோவியத்துக்குள்ளும், சோவியத்துக்கு வெளியிலும் உள்ள சோவியத் பிரஜைகளுடன் உரையாடியபோது, அவர்கள் தமது அரசாங்கத்தின் அடைவுகளையிட்டு மிகவும் பெருமைப்படுபவர்களாகவும், எதிர் காலம் பற்றிய குருஷேவின் கணிப்பீடுகள் மிகைப்படுத்தப்பட்ட தொன்றல்ல என்ற நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தார்கள்.

சோவியத் பொருளாதாரத்தின் கவர்ச்சிகரமான அடைவுகள் மாத்திரமல்ல, விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் சோவி

யத்யூனியன் காட்டிவரும் மதிநுட்பமும் குருஷ்ஷேவின் சவால் சாத்தியமானதுதான் என்ற அபிப்பிராயத்தை வெளியாரிடையே ஏற்படுத்தியது. சோவியத் யூனியனின் அறிவியல் அடைவுகள் ஒன்றன் பின் ஒன்றாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பத்தில் சமாளிப்புகளாக தெரிந்தவை பின்பு நம்பகரமானவையாக வளர்ச்சி பெற்றன.

சோவியத் யூனியனின் சில ஆரம்பகால வெற்றிகள் அமெரிக்காவின் தொழில் நுட்பங்களை கடன்வாங்காமலோ அல்லது ஒற்றர்கள் மூலம் கவராமலோ சாத்தியப்பட்டிருக்க மாட்டாது என்பது முதலில் நிலவிய பொதுவான அபிப்பிராயமாக இருந்தது. உதாரணத்திற்கு, இவ்விதமான இரகசியங்கள் இல்லாமல், சோவியத்துக்கள் அணுகுண்டையும், பெட்ரோ- இரசாயனப் பொருட்கள், தானியங்கி வாகனங்கள் உட்பட பல கைத்தொழில் பொருட்களையும் உற்பத்தி செய்வதில் அதிகம் சிரமப்பட்டிருக்கும். சோவியத் யூனியன் வெளியாரின் உதவியில்லாமல் ஐதரசன் குண்டுகளையும் நுட்பமிக்க இராணுவ தளபாடங்களையும், விமானங்களையும் செய்யத் தொடங்கியதன் பின் இந்த கணிப்பீடுகள் அனைத்தும் சரிந்து விழத் தொடங்கின. மனிதர்களை ஏற்றியும் மனிதர்கள் இல்லாமலும் சென்ற சோவியத் விண்கலங்கள், 1957ம் ஆண்டு ஒக்டோபர் 4ல் முதலாவதாக ஏவப்பட்ட விண்கலன் கடந்த கால ஊகங்கள் அனைத்தையும் மீள நோக்கவைத்தன, அமெரிக்காவில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தின. அமெரிக்கா விண்வெளியைப் பொறுத்தவரை சோவியத்திற்கு இரண்டாவதாக வந்துவிட்டதாக கணிக்கப்பட்டது; மிக விரைவில் தரையிலும் இரண்டாவது நிலைக்கு வந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் சில சந்தேகவாதிகள் சோவியத்தின் இந்த அறிவிப்புகள் எல்லாம் உண்மைதானா எனவும் சந்தேகிக்கத் தொடங்கினாரிகள். அதேநேரத்தில் ஏனையோர் சோவியத் மொத்ததேசிய உற்பத்தி எமது தேசிய உற்பத்தியை முந்திச் செல்ல எத்தனை வருடம் எடுக்கும் என கணக்குப் பார்க்க ஆரம்பித்திருந்தார்கள். சோவியத்தின் விண் வெளி வெற்றிகள் அமெரிக்க தொழில் நுட்பம்பற்றிய பாரிய சந்தேகங்களைத் தூண்டிவிட்டது, சோவியத் வெற்றிகளுடன் ஈடுசெய்யக் கூடிய முறையிலான துரித திட்டங்கள் வரையப்பட்டன, அமெரிக்க கல்வித் திட்டத்திலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

சோவியத் பொருளியலாளர்களும் அதிகார அடுக்குகளும் சோவியத் அமைப்பில் உள்ள குறைபாடுகளையிட்டு முறைப்பாடுகள் செய்தாலும் அதன் வெற்றிகளை நிராகரிப்பது கடின



மானதாய் இருந்தது. சோவியத்தின் கைத்தொழில் வெற்றியானது சோவியத் யூனியனை விட்டு நிரம்பி வழிந்து மிகவிரைவில் உலகச்சந்தையை வந்தடையும் என பல வெளிநாட்டு நிபுணர்கள் கட்டியங் கூறினார்கள். எச்சரிக்கையடைந்த சில மேற்கத்தைய எண்ணை நிபுணர்கள் மேற்கத்தைய எண்ணைச் சந்தையில் சோவியத்தின் வளர்ச்சி தடுத்து நிறுத்தப்படாது விட்டால், சோவியத்துக்கள் நேட்டோவை சீரழிப்பதுடன் மேற்குலகின் கூட்டமைப்பையும் அழித்துவிடும் என எச்சரித்தார்கள். சோவியத் எண்ணை உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்தது. குருஷேவ் சரியாகவே முன்கூட்டியே கூறியதைப் போல் 1974ல் சோவியத் யூனியன், சவுதி அரேபியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைவிட அதிக எண்ணையை உற்பத்தி செய்தது. இதன் மூலம் உலகிலேயே அதிகளவு பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடாக மாறியது. 1974ல் சோவியத் யூனியனே உலகில் அதிகளவு உருக்கு உற்பத்தி செய்யும் நாடாகவும் இருந்தது. அதேபோல் 1983 -ல் அதிகளவு இயற்கை வாயு உற்பத்தி செய்யும் நாடாகவும் இருந்தது. 1970-ல், அமெரிக்காவில் செய்யப்படும் ஒவ்வொரு இயந்திர கருவிகளின் இடத்தில் சோவியத் யூனியன் இரண்டிற்கும் மேற்பட்ட கருவிகளை உற்பத்திசெய்தது. இந்த இயந்திர கருவிகள் சில வேளைகளில் தரப்படுத்தப்பட வேண்டியதாகவோ அன்றில் நுட்பத் தன்மையற்றதாகவோ இருக்கலாம். ஆனால் சில அமெரிக்க பொறியியலாளர்களின்கணிப்பின்படி இது காலம் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகவே இருந்தது. சில சோவியத் யந்திர கருவிகள் அமெரிக்காவில் குவிக்கப்பட்டு அமெரிக்க இயந்திர கருவிகளின் உற்பத்தியை வங்குரோத்தானதாக்கியும் விட இடமுண்டு எனவும் அவர்கள் கருதினார்கள். அமெரிக்க கடற்கரைக்கு அப்பால் சோவியத் யூனியனால் மேற்கொள்ளப்பட்ட பாரிய மீன்பிடி நடவடிக்கையால் அமெரிக்க மீன்பிடியாளர்கள் தமது நடவடிக்கைகளையே கைவிட வேண்டிஏற்பட்டது. பாரிய தாய்க் கப்பல்களால் பராமரிக்கப்பட்ட சோவியத் இழுவைப் படகுகளால் அமெரிக்கர்களினது தனிநபர்களுக்கு சொந்தமான, ஒன்றுடன் ஒன்று இணைவாக தொடர்புபட்டிராத இழுவைக் கப்பல்களை விட கணிசமானளவு அதிக மீன்களைப் பிடிக்க கூடியதாக இருந்தது. பெருமளவிலான அவதானிகள் இதை எதிர்காலத்துக்கான ஒரு குறியீடாகவே கருதினார்கள்.

பாரிய உற்பத்தி என்பதை சாதகமாய்க்கொண்டு. சோவியத்துகள் ஒப்பு நோக்கில் நுட்பத்தன்மையற்ற தொழில் நுட்பத்தைத் தேர்ந்தும், நெறிப்படுத்தியும் தனி உடமையாக இருந்த

கைத்தொழில் உற்பத்தியையும் விட அதிகளவான உற்பத்தியை நடத்திக்காட்டினார்கள். சோவியத் தமது உற்பத்தியின் அடிமட்ட லாபங்கள் பற்றிய பிரச்சனைக்கு அதிக அழுத்தம் எதுவும் கொடுக்காத படியால், சோவியத்துகள், அமெரிக்க மற்றும் மேற்கத்தைய உற்பத்தியாளர்களை உற்பத்தி நடவடிக்கைகளில் இருந்தே துரத்தி விடுவார்களோ என்ற பயம் நிலவியது நியாயமானதாகவே இருந்தது. செயற்கை கோள்களை செய்வதற்குரிய தொழில் நுட்பத்தைக் கையாள்வதில் சோவியத்துகள் கைதேர்ந்து விடுவார்களானால், இதே நுட்பத்திறன் மிக்க தொழில் நுட்பத்தை அவர்கள் தமது வெகுஜனபாவனைப்பண்ட உற்பத்தி தொழிலிலும் பயன்படுத்துவதன் மூலம் கைத்தொழில் துறையில் போட்டியிடும் தமது ஆற்றலை வளர்த்துக் கொள்வார்கள் என்றோர் பயம் அமெரிக்காவில் மிக அதிகமாக நிலவியது. இன்றைய பொழுதின் தொழில் நுட்பத்தை கையாள்வதில் தாம் விற்பன்னர்கள் என்பதையும், தம்மால் துரித வேகத்தில் வளரமுடியும் என்பதையும் சோவியத்துகள் செயற்படுத்தி காட்டிவிட்டன.

இந்த காலகட்டத்தில் குறிப்பாக 1930 களில், உலகின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சிக்கு பாதகமாக குழப்பங்கள் நிலவிய போது, சோவியத் மட்டும் இதற்கு விதி விலக்காக இருந்ததற்கான காரணங்கள் என்ன? இதற்கான பெருமைகளில் அனேகமானவை ஸ்ராலினையே சாரும். அவர் துரித கைத்தொழில் வளர்ச்சிக்கு அதிக அழுத்தம் கொடுத்து வந்தார். புரட்சிக்கு முன்னைய பொருளாதார வடிவமைப்பில் அடிப்படை மாற்றம் எதையும் செய்யாது சோவியத் யூனியனை பொருளாதார ரீதியில் பின் தங்கிய நாடுகளின் மட்டத்தில் இருந்து தூக்கி அப்புறப்படுத்த முடியாது என்பதை அவர் உறுதியாக நம்பினார். ஸ்ராலினின் பார்வையில் சோவியத் யூனியன் மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க போட்டியாளர்களிடம் இருந்து அதிகளவு தூரம் பின்தங்கியே இருந்தது. கனரக கைத்தொழிலையும், இராணுவ பலத்தையும் வளர்ப்பதே தாம், செய்யவேண்டிய பிரதான கடமையென்று ஸ்ராலினும் அவரது ஆதரவாளர்களும் கருதினார்கள். பாரம்பரியமாக நிலவிவரும் இலாப - நட்ட ஊக்குவிப்பு வடிவமைப்பும், தனி உடமைமுறையும் இதற்கு ஒத்துவராது என்றும் அவர்கள் நம்பினார்கள். ஒரு தொழிற்சாலையின் முகாமையாளரின் நோக்கம் இலாபம் சம்பாதிப்பது என்பதாகவே இருக்குமானால் அவர் கைத்தொழிலுக்கான அடிப்படைகளை உற்பத்தி செய்வதைக் காட்டிலும் நுகர்வுபண்டங்களுக்கே அதிக அழுத்தம் கொடுப்பார்கள்.



1930களில், 1940களில், 1950களில் சோவியத்துகள் வளரக்கூடியதாய் இருந்ததானது, மேற்படையில் நோக்கும்போது ஸ்ராலின் சரியாக இருந்திருக்க கூடுமோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

நிகோலாய் புகாரினால் தலைமைதாங்கப்பட்ட சில சோவியத் உத்தியோகஸ்தர்கள், ஸ்ராலினின் நடவடிக்கை தவறானது என்றே கருதினார்கள். தனியார் விவசாயமும், வர்த்தகமும், இலாப - நட்ட செயல்வடிவமும் ஸ்ராலின் எதிர்பார்த்த கைத்தொழிலை சோவியத் ருஷ்யாவிற்கு வழங்கியிருக்கும் என்பதே அவர்களின் அபிப்பிராயமாக இருந்தது. 1920 களில் ஏற்பட்ட மிக கவர்ச்சிகரமான வளர்ச்சியை இதற்கான உதாரணமாக எடுத்துக் காட்டினார்கள். 1921ல் உள்நாட்டு யுத்தத்தின் முடிவுடன், லெனினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதார கொள்கையின் (NEP) நிறைவாக்கத்துடன் பொருளாதாரம் துரிதமாக மீள புனரமைக்கப்பட்டது. பொருளாதாரத்தின் மீது ஆணைசெலுத்தும் உயர்ந்த கைத்தொழில்களின்மேல் அரச கட்டுப்பாடு இருக்கவேண்டும், ஆனால் விவசாயிகளும் சிறு - உற்பத்தியாளர்களும் இலாப - நட்ட செயல் வடிவத்தில் செயற்பட அனுமதிக்கப்படவேண்டும் என்பதே இவர்களின் கருத்தாக இருந்தது. அப்போதுதான் இந்த சிறு உற்பத்தியாளர்களும் விவசாயிகளும் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கையிலும் நுகர்வோரின் நல் வாழ்வுக்கான பொருட்களைப் படைக்கும் முயற்சியிலும் தொடர்ச்சியாக ஈடுபடுவார்கள் என புகாரினும் அவரின் ஆதரவாளர்களும் கருதினார்கள்.

ஸ்ராலின் இவ்விதமான விவாதங்களுக்கு செவிமடுக்கவில்லை. தனிநபர் உடமை முறையுடனும், இலாப - நட்ட செயல்வடிவத்துடனும் அவர் முற்றுமுழுதாகவே முரண்பட்டார். அவரின் கருத்துப்படி 1920களில் ஏற்பட்ட துரித வளர்ச்சி வழமைக்கு மாறானதொன்றாகும்.......

ஸ்ராலின் தொடரவிருக்கும் தசாப்தங்களுக்கு தனது கவனத்தைச் செலுத்தினார். புனரமைப்பு முடிவடைந்தவுடன், சோவியத் யூனியன் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேற வேண்டும். அதுதான் புதிய தொழில் துறையின் உருவாக்கமாகும்...... புதிய உருக்கு ஆலைகளும், இயந்திர சாதன கருவிகளும் தான் ஸ்ராலினின் உயர் முக்கியத்துவம் பெற்ற கைத்தொழில்களாக இருந்தன. இவை குறிப்பிட கூடியளவு பெரும் மூலதன முதலீட்டை வேண்டி நின்றன, ஸ்ராலினுக்கு, நிலவும் வழி முறைகள் அவரது இலட்சியத்தை அடைவதற்கு போதாதனவாக இருந்தன

தனக்குத் தேவையான அந்த மூலதனத்தை உருவாக்கிக் கொள்வதற்காக, தேசத்தின் மூலவளங்கள் திட்டவட்டமான முறையில் உபயோகப்படுத்திக் கொள்வதையும் அவை சிதறுண்ணாமல் இருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் ஸ்ராலினுக்கு இருந்தது. ஆகவே அப்போது நிலவிய சோவியத் பொருளாதார வாழ்வு முறையை ஸ்ராலின் பிடுங்கி எறிந்தார். கைத்தொழில், சேவைத்துறை நடவடிக்கைகளின் அனைத்து வடிவங்களும் தேசியமயமாக்கப்பட்டன. அனைத்து சோவியத் விவசாயிகளும் தமது நிலத்தையும், கால்நடைகளையும், உபகரணங்களையும் இழக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுப் பண்ணை ஊழியர்களானார்கள். உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் அரசின் கைகளில் ஸ்திரமானதாக இருந்ததனால், ஸ்ராலின் தான் எது பொருந்துவது என்று எண்ணினாரோ அதை நோக்கி முதலீட்டுத் தொகையையும் மூலவளங்களையும் திருப்பிவிடக் கூடியதாய் இருந்தது. உத்தரவாதம் செய்யப்பட்டதற்கிணங்க கனரக கைத்தொழிலுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதேவேளை தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் உண்மை வருமானம் மோசமடைந்தது.

......ஸ்ராலின் அரசு உடமைக்கும் அப்பால் சென்றார். சந்தையானது நடுநலனக திட்டத்தால் மாற்றீடு செய்யப்பட்டது. முகாமையாளர்கள் பயன்படுத்தவேண்டிய உள்ளீடுகள் எவை? அவை எங்கிருந்து பெறப்படவேண்டும்: அவர்கள் என்ன பொருட்களை வெளிக்கொணர வேண்டும்? யாருக்காக வெளிக்கொணர வேண்டும் என்பன போன்ற ஆணைகள் முன்கூட்டியே அவர்களுக்கு வழங்கப்பட்டன. அங்குகூட விலைகளும், இலாபங்களும் நட்டங்களும் உற்பத்திச் செலவுகளும் இருக்கும், ஆனால் அவைகள் திட்டமிடப்பட்ட ஆணைகளுக்கு கீழ்ப்படிந்தனவாகவும் அவற்றால் நீர்மானிக்கப்பட்டனவாகவும் இருந்தன. கொஸ்பளான் ( Gosplan ) புதிய அரசு திட்டமிடல் அமைப்பு, நிறுவனங்களுக்கும் குடியரசுகளுக்கும், நாடு முழுமைக்குமான வருடாவருட, ஐந்து வருட திட்டங்களைத் தீட்டியது.

மார்ஷல் ஐ கோல்டனின்
" கொர்பச்சேவ் சவாலின் சிலபகுதிகள்
( மொ-ர் ஏறிகே )



# பிரஷ்நோல் கால சோவியத் ஒன்றியம்-
## சில சமூக - பொருளாதார ,வெளிப்பாடுகள்

*''கொர்பச்சேவ்வின் சவால்'' என்ற பெயரில் மார்ஷல் ஐ. கோல்ட்மன் அவர்களால் எழுதப்பட்ட நூலில் இருந்து ஓர் சிறுபகுதி.*

" சோவியத் பொருளாதாரமானது மதிக்கத்தக்க வேகத்துடன் வளர்வது தொடரும் வரையும், சோவியத் பொருளாதார வளர்ச்சி பற்றியும், தொழில் நுட்ப வளர்ச்சிபற்றியும் பாரதூரமாக கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இடையிடையே, ஆழ்ந்த தன்மையுள்ள சீர்திருத்தங்கள் பிரேரிக்கப்படும், ஆனால் தீவிரத் தன்மை பெற்றதாக எதுவும் [செய்யப்படாத விடத்து எவரும் இவற்றையிட்டு அதிகம் விழிப்புக் கொள்ளவில்லை. பொருளாதாரம் அநேகமாக முன்பிருந்ததைப் போலவே தொடர்ந்தது. ஆனால், பிரஷ்நோலின் வாழ்வின் கடைசி நாலுவருட ஆட்சியின் போது தொனியில் மாற்றம் ஏற்பட்டது. பிரஷ்நோலின் உடல் நிலை மோசமடைந்ததுடன் அவரால் கட்சியினதும், அரசாங்கத்தினதும் விவகாரங்களில் தொடர்ந்தும் கவனஞ் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இரம்லினில் உள்ள அணைவரும் பிரஷ்நோலால் இனியும் திறன்

மிக்க தலைமையைக் கொடுக்கமுடியாது என்பதைத் தெரிந்திருந்தும், அவரை ஓய்வெடுக்கச் செய்வதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. திறன் மிக்க கட்டுப்பாடின்மையால், நாட்டின் அறவொழுக்க நெறியும், பொருளாதார உத்வேகமும் சரியத் தொடங்கின. கொர்பச்சேவின் கூற்றுப்படி சோவியத் சமூகம் '' குறிப்பிடத்தக்க நெருக்கடி '' ஒன்றினால் தாக்கப்பட்டிருந்தது. துரித கதியில் நடைபெற்றுவரும் தொழில்நுட்ப மாற்றங்களிற்கும் சக்தி தட்டுப்பாடு என்ற புதிய சூழலுக்கும் தகுந்த முறையில் தம்மை தகவமைத்துக் கொள்ளும் முயற்சியில் உலகின் ஏனைய பகுதிகள் ஈடுபட்டிருந்த வேளையில், சோவியத் யூனியனோ தனக்குத் தானே இட்டுக்கொண்ட தனிமைப்படுத்தில் சிக்கியிருந்தது. அர்த்தமுள்ள மாற்றங்களில் பங்குகொள்ளத் தவறியது மாத்திரமல்ல, காரியங்களைச் சாதிக்கும் தனது பழைய வழிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு இயலாத நிலையைக் கூட வெளிப்படுத்துவதாய் இருந்தது.

1979ம் ஆண்டு தானிய அறுவடை 5.8 கோடி தொன்னால் வீழ்ச்சியுற்றது. இதுதான் சோவியத் வரலாற்றிலேயே ஆகக்கூடிய வீழ்ச்சியாகும். ( அட்டவணை 1 ஐயும், 2 ஐயும் பார்க்கவும். ) திகில் கொள்வதற்கோ விவசாயத்தில் தீவிர சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான காரணங்கள் இருந்தது போல் தெரியவில்லை. காலக்கிரமமாக ஏற்பட்டுவரும் அறுவடை வீழ்ச்சியை சமாளிப்பதற்கான செயற்பாடுகள் ஏற்கனவே இருந்தது போலவே தென்பட்டது. தானிய அறுவடை இதற்கு முன்னமும் வீழ்ச்சி கண்டிருந்தது, உதாரணத்திற்கு 1977லும், 1975லுமாகும். இந்த வீழ்ச்சி 1979ல் பாரியளவினதாக இருந்தது ஆனாலும் அடுத்த வருடம் தானிய அறுவடை மீள எழுந்துவிடும் என்று அனைவரும் நம்பினார்கள். இறுதியாக, அடுத்தடுத்து வந்த இருவருடங்களிலும் தானிய அறுவடை வீழ்ச்சியடையவில்லை. 1980 ல் வீழ்ச்சி தொடரா விட்டாலும், எதிர்பார்த்த மீள் எழுச்சி நடைபெறவில்லை. மீண்டும் பெருமளவு தானியத்தை இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டது. 1981 ல், தானிய அறுவடை மீண்டும் வீழ்ச்சியுற்றது. இது 15.8 கோடி தொன்னாகும். 1975 ஐ விட்டுப் பார்த்தால் 1981லான தானிய அறுவடைதான் 1967 ன் பின் மிகக் குறைந்த அறுவடையாகும். 1983 ல் ஒரு சிறு அபிவிருத்தி ஏற்பட்டது, 1984 ல் மீண்டும் வீழ்ச்சி. மிகக் குறைந்த காலத்தில் சோவியத் யூனியன் ஆகக் குறைந்தது ஆறு மோசமான அறுவடைகளைச் சந்தித்துள்ளது. ஒவ்வொரு தடவையும், அறுவடையானது சோவியத் யூனியனின் இலக்கான 23.5 கோடி



தொன்னிற்கு மிகக் கீழாகவே இருந்துள்ளது. விவசாய இறக்குமதியானது சில வீழ்ச்சிகளை ஓரளவிற்கு சமாளித்தாலும், உணவு நிலைமை, குறிப்பாக இறைச்சி வினியோகம்மிகதுரிதமாக மோசமடைந்தது. இதனால் 1981லும்,1982 லும் சீர்முறையான பங்கீட்டு முறையை குறைந்தது 12 பிரதான நகரங்களிலா வது மீள அறிமுகப்படுத்துவது அவசியமானது.

1979 ன் பொருளாதார வீழ்ச்சி தானிய அறுவடையின் வீழ்ச்சியை மாத்திரம் கொண்டதல்ல. 2 வது உலக யுத்தத்தின் பின் முதன் முதலாக உருக்கு உற்பத்தியும் உலோகம் வெட்டும் யந்திர கருவிகளின் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. 1979க்கும்-1982க்கும் இடைப்பட்ட நாலு வருட காலப்பகுதியில், வெவ்வேறு காலங்களில் நிலக்கரியினதும், தானியங்கி வாகனங்களினதும் உற்பத்தியும் இதே போல் பாதிக்கப்பட்டுள்ளது. ( அட்டவணை 3 ஐப் பார்க்கவும். ) உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படாவிட்டாலும் கூட, 1982 ம் ஆண்டு எண்ணை உற்பத்தியிலான அதிகரிப்பு 40 லட்சம் தொன்கள் மாத்திரமேயாகும். 1978 ம் ஆண்டு இது 2.6 கோடி தொன்களாக இருந்தது. விவசாயப் பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் போலன்றி, இந்த பல்வேறு பொருட்களின் உற்பத்தியிலான வீழ்ச்சி பெருமளவானதொன்றல்ல சோவியத் யூனியனின் அடிப்படை நுகர்வு பொருட்களின் உற்பத்தி வருடாவருடம் அதிகரித்து வருவதாக பெருமைப்பட்டுக் கொள்ளும் சோவியத் திட்டமிடலாளர்கள் இந்த வீழ்ச்சிகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள். உயர் தொழில் நுட்பத்தையும் புதிய ஆக்கங்களையும் பொறுத்து அதுவும் குறிப்பாக வெகுஜன பாவனைப்பண்ட உற்பத்தித் துறையில் சோவியத் யூனியன் தோல்வைப்படலாம், ஆனால் அடிப்படை கனரக உற்பத்திகளைப் பொறுத்த வரையில் சோவியத் யூனியன் எப்போதுமே முன்னணியில் இருந்து வந்துள்ளது.

குறிப்பிட்டளவு தூரத்திற்கு இந்த வீழ்ச்சிக்கான இயற்கை காரணங்களும் உண்டு, மிக வளமானதும் அப்படியே பயன்படுத்தக் கூடியதுமான மூலவளங்களில் சில குறைந்துள்ளன, ஆனால், இயற்கை மூலவளக் குறைவு அனைத்தையும் விளக்குவதற்கு போதாது, சில விமர்சகர்கள், தாம் கண்ணுற்ற மனோபோக்கிலும் அறவொழுக்கத்திலும் ஏற்பட்ட சீரழிவுகளைப் பற்றி மிக கவனம் செலுத்துபவர்களாக மாறியுள்ளார்கள். வரலாற்று ரீதியாகவே ருஷ்சியாவின் பிரச்சினைகளில் ஒன்றாக இருந்து வரும் மதுப்பழக்கம், மிக மோசமான நிலையை

அடைந்துள்ளது. போதையேறிய தொழிலாளர்களை வேலைக்கு வராமல் தடுப்பதற்கு உதவுவதற்கான தொழிலாளர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. அயல் அகன்பீகெயின் என்ற பொருளியலாளர் பின்வரும் முறைப்பாட்டை முன்வைத்துள்ளார். "தொழிற் களத்தில் மதுபோதையில் நிற்கும் பழக்கம் முன்பைவிட தற்போது அடிக்கடி நிகழும் ஒரு நிகழ்வாகியுள்ளது என்பதைஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சிலநிறுவனங்களில் குடியை நிறுத்துவதற்காகவும், விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக குடிகாரர்களை இயந்திர கருவிகளில் இருந்து விலத்திவைப்பதற்காகவுமான விசேடபடைப்பிரிவுகள் கூட அமைக்கப்பட்டுள்ளன." பெரும் தொழிற்சாலைக்கு வெளியேயான உற்பத்தி தொழிற்சாலைகளில் நடைபெறும் உற்பத்தியைவிட அதிகளவானதாகவே உள்ளது.

ஒழுக்கக்கேடும் ஊழலும் இதே போன்றதோர் பிரச்சினையாக மாறிவிட்டது. ஸ்ராலினது காலத்தில் கூட, ஒழுக்கக்கேடு ஒரு இரகசிய ஓட்டமாக இருக்கவே செய்தது. எப்படியாயினும் மொஸ்கோவில் இருந்து இயக்கவும் வழிநடத்தவும்படும் அரசு மத்தியத்துவ கட்டுப்பாட்டு அமைப்பில் திட்டங்கள் அனைத்தும் ஒரு வருடத்திற்கும் முன்னதாகவே முன் கூட்டியேவரையப்பட்டு விடுகிறது, இதனால் உள்ளூர் நிலைமைக்கும் எதிர்பார நிலைமைக்கும் ஏற்றமுறையில் மாற்றங்களைச் செய்து கொள்வதற்கான சில பொறி முறைகள் அவசியமானவைகளாக உள்ளன. இவ்விதமான வளைந்து கொடுத்தலை சாதியப்படுத்தக் கூடிய நிறுவனமயப்படுத்தப்பட்ட பொறிமுறைகள் இல்லாதிருந்தது. இதனால் ஒழுங்கு முறை சாராத பொறிமுறைகள் அவசியப்படுகின்றன. அமைப்புக்கு வழங்குவதற்கு ஏதாவதொரு ஒழுங்கு இருக்கும் பட்சத்தில் அமைப்பிலிருந்து எடுப்பதற்கும் ஏதாவதொரு வழிமுறை இருக்கும்வழமையானது இயல்பானதாகின்றது.

1970களில் ஒழுக்கக்கேடும் ஊழலும் கையைவிட்டு நழுவிச் சென்றுவிட்டன, இதையிட்டு எவருமே அக்கறைப்பட்டதாகவும் தெரியவில்லை. ஒன்றரை சகாப்த கால ஆட்சிக்கு பின்னர் பிரஷ்நோல் "வாழ் - வாழவிடு" என்ற கோட்பாட்டை தேர்ந்தெடுத்திருந்தார். அவரும் அவருடைய கீழ்ப்படிவாளர்களும் மிக அருமையாகவே தமது கீழ்ப்படிவாளர்களை வேலைநீக்கம் செய்தார்கள். ஒருமுறை நியமிக்கப்பட்டவர்கள், அவர்களின் மரணம் வரை அல்லது இயலாமை நிலையை அடையும்வரை தமது பதவிகளில் இருப்பார்கள் என்பதே பொதுவழமையானது இந்தநிலைமைகளில், பெருமளவான உத்தியோகஸ்தர்கள் தமதுஅமைச்சு,



தமது காரியாலயம், அல்லது தமது பிராந்திய அரசாங்கங்கள் வெறுமனே தமது தனிப்பட்ட உடமைகள் என்றமுறையில்செயற்பட்டார்கள். சில கட்சி அங்கத்தவர்களுக்கு என்றுமாத்திரம் தமது கதவுகளைத் திறந்திருந்த வேறு இடங்களில் பெற்றுக்கொள்ள முடியாதபொருட்களை தாங்கியிருந்த விசேடகடைகளின் இருத்தல்பற்றி மிகச்சிலரே கேள்வி எழுப்பினார்கள். இவ்விதமான கடைகளில் பொருட்கள் வாங்கும் உரிமை சலுகைகள் பெற்றவர்களுக்கும் நொமன் Klatura - கட்சி அங்கத்தவர்கள் - வர்க்கத்தினருக்கும் மாத்திரம் உரிய "இயற்கை உரிமைகள்" என்றே கருதப்பட்டது. எப்போதாவது இருந்திட்டு ஒரு தடவை காணப்படும் பத்திரிகை விமர்சனங்களைத்தவிர, அநேகமான சந்தர்ப்பங்களில் இது பற்றி பலனுள்ள முறையில் முறைப்பாடுகள் செய்வதற்கான நீதி மன்றங்கள் எதுவுமே இருக்கவில்லை. தமது தனிச்சிறப்புரிமைகள் பாதிக்கப்படுமோ என்ற பயத்தில், உயர்மட்ட அதிகாரிகள் தமது கீழ் அதிகாரிகளை பாதுகாத்து அலர்களுடன் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள், இதனால் அதிகாரமும் துஸ்பிரயோகமும் வளர்ச்சியுற்றது.

பிரஷ்நோலின் காலத்தின் போதான ஒழுக்கக்கேடுகளையும் ஊழலையும் குறித்துக்காட்டுவதென்பது அவருக்கு முன்னைய சமூகங்களிலேயோ ஏனைய சோவியத்துக்களிலோ ஊழல் இல்லை என்று அர்த்தட்படமாட்டாது, ஆனால் பிரஷ்நோல் காலத்திலான இவ்விவகாரங்கள் பிரமாண்டமானவையும் துரித வளர்ச்சி பெற்றனவாயும் இருந்தன என்பதே இங்குள்ள விடயமாகும். யதார்த்தத்திற்கும் வெளிப்படையாக நிலவும் கணிப்பீட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளே உண்மை அர்த்தமுள்ளவையாகும். அதிலும் குறிப்பாக தனது சமூகத்தின் சிறந்த குணவியல்புகளைப் பற்றிப்பெருமைப்படும் அதே வேளை முதலாளித்துவத்தினதும் அன்னிய சமூகங்களினதும் அறநெறிக் குப்பை கூழங்களையும் விட தமது சமூகம் அறநெறி வகையில் மேலானது என்றும் கூறும் ஒரு சமூகமானது சொல்லுக்கும் செயலுக்கும் இடையேயான இவ்வேறுபாட்டையிட்டு மிகக்கவனமாக இருக்க வேண்டும் தமது பிள்ளைகளை பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதில் முந்தியடித்து வெற்றிபெறும் பெற்றோர்கள்; மொத்தவியாபார முகாமையாளர்களுக்குகைஊட்டுக்கொடுத்த கிட்டங்கி முகாமையாளர்கள்; கிட்டங்கி முகாமையாளர்களை தம்பக்கம் வென்றுவிட்ட வாடிக்கையாளர்கள்; சுங்க இலாகா அதிகாரிகளையும் உள்நுழைவு அதிகாரிகளையும் கைஊட்டால் வென்றுவிட்ட உள்நுழைவாளர்கள்; அரசநிதியை போக்குவரத்துக்கும், விசேட

சலுகைகளுக்கும், சில நேரங்களில் சொந்தவீடு கட்டுவதற்கும் கூட பயன்படுத்திய கட்சி உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் பற்றிய தகவல்கள் சோவியத் செய்தி ஏடுகளில் வெளிவருவது வரவர அதிகரித்து வருகின்றது. பிரஷ்நோலின் முன்னைய நெருங்கிய நண்பர்கள் தமது நெருக்கமான உறவைப் பயன்படுத்தி தமது பிராந்திய அரசாங்கங்களிற்கு அப்பால் குட்டி ராஜ்ஜியங்களையே அமைத்துள்ளார்கள்.

மூன்றாம் உலக நாடுகளில் வழமையாக நடைபெறுவதைப் போன்று தலைவர்களின் சொந்த குடும்ப அங்கத்தவர்கள் தமது அந்தஸ்தினை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். உதாரணத்திற்கு, பிரஷ்நோலின் மகள் பிரபல்யமான வைர கடத்தல்காரனான ஒரு சாகஸ விளையாட்டு (சேர்க்கஸ்) மன்னனுடன் காதல் தொடர்பு கொண்டிருந்தாள். பிரஷ்நோலின் இதே மகள் தேசிய பொலிஸின் பிரதித் தலைவரை மணந்தபின்பும் இத்தொடர்பு நீடித்தது. நீண்டகாலமாகுமுன்னரே, முறைகேட்டிற்கும் ஊழலுக்கும் அப்பால் இருந்த ஓரே தேசிய நிறுவனமான சோவியத் இராணுவத்தின் உத்தியோகஸ்தர்கள் கூட, தமது சொந்த பொருளாதார நல்நிலையை உயர்த்திக்கொள்ள இராணுவ சலுகைகளை பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். கீழ்மட்ட இராணுவ துருப்புகள் மேல்மட்ட இராணுவ உத்தியோகஸ்தர்களின் சொந்த வீடுகளைக் கட்டப் பணிக்கப்பட்டார்கள்.

எதுவுமே விட்டுவைக்கப்பட்டதாய் தெரியவில்லை. 1970கள் வரை பொறியியலாளர் துறை மிகவும் மதிப்புமிக்க அறிஞர்களுக்கான துறைகளில் ஒன்றாக இருந்தது. ஆனால் 1970களில் முன்னையதைப் போல் இல்லாமல், தமது மிகத் திறமையான மாணவர்கள் கூட பொறியியலாளர்களாக வருவதற்குப் பதிலாக விற்பனவு லிகிதர்களாக வருவதையே விரும்பினார்கள் என ஆசிரியர்கள் மனவருத்தத்துடன் புகார் செய்யத் தொடங்கியுள்ளார்கள். இதற்கான காரணத்தை ஆராய்ந்ததில் பின் வரும் முடிவு வெளியானது. லிகிதருக்கான உத்தியோகபூர்வ சம்பளம் குறைவானதாக இருந்தாலும், லிகிதர் என்ற நிலையில் இருந்தவண்ணம் ஆக்கபூர்வமான வர்த்தகத்தை நடத்துவதில் இருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கும் நிதி வருமானங்கள் ஒரு பொறியியலாளனுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைவிட அதிகமானதாகவுள்ளது."

[மொர் - ஏஜிகே]



# பாஸிஸமும் பொதுவுடமையும்
## ஒரு ஒப்பு நோக்கு?!!

பல்கேரிய குடியரசின் இன்நாள் ஜனாதிபதிசெல்வி யு. செல்லெவ் அவர்கள் பல்கேரியாவில் தலைமறைவாக இருந்த போது எழுதப்பட்ட நூலின் சிலவாக்கியங்கள் தரப்படுகின்றன. நூலின் பெயர் 'பாஸிஸம்'. பெறிஸ்ரோறிக்காவையிட்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சோவியத் யூனியனிலும், புதிதாக தோன்றியுள்ள பாஸ்டிக் நாடுகளிலும் நிலவும் கண்ணோட்டங்களில் இதுவும் ஒன்றாகும். அங்குள்ள நிலைமைகளை புரிந்து கொள்ள இது உதவும் என எதிர்பார்க்கிறோம்.

கொர்பச்சேவின் பெறிஸ்ரோறிக்கா இராணுவ சர்வாதிகாரத்திற்கு ஒரு மாற்றீடாகத் தென்படுகிறது. பெறிஸ்ரோறிக்காவானது இந்தச் செயற்பாட்டில் இராணுவ சர்வாதிகாரத்தின் பாத்திரத்தை ஏற்கப்போவது நிச்சயமானது. இன்னும் அதிகமானது என்னவென்றால் அது அந்தப்பாத்திரத்தை சமாதானமாகவும், மனிதநேயத்துடனும், பலாத்காரம் அற்ற முறையிலும், இரத்தஞ்சிந்தாமலும், ஜனநாயக பூர்வமாகவும், வகிக்கப் போகிறது. முற்றுமுழு அதிகாரத்துவத்தில் (Toraliraian) இருந்து ஜனநாயகத்திற்கு மாறும் ஒரு நாகரிக மாற்றத்தை நிறைவேற்றப் போகிறது."

" இது தேசத்தின் அரசியல் பண்பாட்டிலும், அதன் ஒழுக்கவியல் நியமத்திலுமே அதிகம் தங்கியுள்ளது. மக்களின் அரசியல் பண்பாடு உயர்ந்ததாய் இருந்தால், தரப்பட்ட நாடு இராணுவ சர்வாதிகாரத்தை தவிர்த்து அதற்குப்பதிலாக பெறிஸ்ரோறிக்கா பாதையை எடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமானதாய் இருக்கும். இவ்விரு வழிவகைகளினதும் பலவெவ்வேறு அளவான கலப்புகள் சாத்தியமே, பெறிஸ்ரோறிக்காவை நடைமுறைப் படுத்தும் போது அந்த நாட்டின் அரசியல் பண்பாடு குறைபாடுடையதாகஇருந்தால் அல்லது மிகப் பாதகமான அரசியல் சூழலில் இருந்தால் இதன் விளைவாக அந்த நாடு பல உள் முரண்பாடுகளால் புண்படவும், இராணுவ சர்வாதிகாரம் ஒன்றுக்கு வழிவிடவும் இடமுண்டு. இவ்விதமானதொரு நிலைமை சோவியத் ஒன்றியத்தில் ஏற்படாது என்று மறுப்பதற்கில்லை, ஏற்படக்கூடும் என நான் அஞ்சுகிறேன். சோவியத் ஒன்றியத்தில் ஒரு பல்தேசிய அரசாகும். இதை ஆக்கும் இனவழி குழுமங்கள் தமது பண்பாட்டு நியமத்தில் வேறுபடுகின்றன. இங்கு மிகத் தடித்த ஒரு அதிகாரத்துவ மேற்படையொன்று உண்டு.இது தனது பேரரசுக்குரிய பழக்க வழக்கத்தையும், பாரம்பரியத்தையும் தொடர்புகளையும் பாதுகாத்து வருகின்றது. கடைசியாக ஆனாலும் குறைந்ததல்லாத, பேருருக் கொண்ட ஒரு இராணுவ இயந்திரமும் உண்டு. நிலைமைகள் நெருக்கடிக்கு உள்ளாகுமானால், இவ் இயந்திரம் இந்த "வழியற்ற குடிமக்களிடமிருந்து" அதிகாரத்தை எடுத்துக் கொள்வதில் தயக்கம் காட்டமாட்டாது.

பழைய முற்றுமுழு அதிகாரத்துவ அமைப்புகளை பாதுகாக்கவும், நிலைநிறுத்திவைக்கவும் எவ்வளவு கடுமையான முயற்சிகள் எடுத்தாலும் ( போலந்தின் நிலைமையைப் போன்று ) இராணுவ சர்வாதிகாரத்தால் முற்றுமுழு அதிகாரத்துவத்தில் இருந்து ஜனநாயகத்துக்கு மாற்றமுறுவதை தடுத்து நிறுத்த முடியாது. மாறாக இந்த மாற்றத்தை இது துரிதப்படுத்தவே செய்யும்.

உண்மையான வாழ்க்கை எப்போதுமே எந்தத் தத்துவத்தையும் விட செழுமையானதும் மிகவும் வெவ்வேறுபட்டதுமாகும் இதனால் தான் தத்துவார்த்த கருத்துப் பாங்குகளின் கட்டுப்பாட்டிற்குள் அடைபட்டு இருத்தலை எதிர்த்து உண்மை வாழ்க்கை அடிக்கடி கிளர்ச்சி செய்கிறது. இன்று எம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத, பல புதிய இயல்பு மீறிய விடயங்களையும், அரசியல் யதார்த்தத்தின் மூலக்கூறுகளின் வியக்கத்தகு சேர்க்கைகளையும் நாம் முகங்கொடுக்கப் போவது நிச்சயமானது பாஸிஸ காலகட்டத்தை முழுமையற்ற ஒரு முற்று



முழு அதிகாரத்துவ ராச்சியமாக, குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் உள்வாங்கிக் கொள்வதற்காக நாம் எமது சொந்த பொதுவுடமைப் பாணியிலான முற்றுமுழு ஆதிக்கவாதத்தின் போர்வையை அகற்றினோம் என்பதை யாரும் நம்புவரர்களா? நல்ல நோக்கத்துக்காக இருந்தாலுங்கூட நாம் இதைச் செய்தோம் என்பதை யாரும் நம்பமாட்டார்கள்.

குறைந்தளவு வளர்ச்சியேயுடைய அல்லது இப்போதுதான் அரசியல் பக்குவமடைந்துள்ள ஒரு அரசியல் மூளைக்குக்கூட இது அதிர்ச்சியும், முன்பின் முரணானதுமான ஒரு தாக்குதலாக தோன்றலாம். எவ்விதமானாலும், அரசியல் மருட்சியும், மனக்கிளர்ச்சியும், முற்சாய்வுகளும் வேறுவிடயம், அரசியல் யதார்த்தமும் அரசியலை இயக்கும் மாறும் இயல்பற்ற விதிகள் என்பதும் வேறு விடயம்.

முற்று முழுஆதிக்கவாத அரசியல் அமைப்பு முறையை அழித்தொழிக்காது முற்றுமுழு ஆதிக்கவாதத்தில் இருந்து ஜனநாயகத்துக்குமாறுவதற்கான மாற்றுவழி எதுவுமேயில்லை. இவ்வித அமைப்பை முன்னேற்றுவதன் மூலம் ஜனநாயகத்தை நிறைவேற்ற முடியும் என்ற வகையான சத்தியவாக்குகள் எல்லாம் மலிவான கட்சி சொற்பொழிவுகளேயாகும்.

வரலாற்றில் மாக்ஸிஸ்டுகளாகிய நாம் தான் முதன்முதலில் முற்றுமுழு ஆதிக்கவாத ராச்சியத்தை அமைத்தவர்களாவோம். ஏனைய அரசியற் கட்சிகள் கட்டாயமாக அழித்தொழிக்கப்பட்ட அல்லது கம்யூனிஸ்ட் கட்சிக்கு கீழ்ப்படிவுள்ள வெளுத்துப்போன சம்பிரதாய கட்சிகளாக மதிப்பு இறக்கப்பட்ட ஒரு - கட்சி அரசமைப்பு, இதுவே எமது முற்றுமுழு ஆதிக்கவாத அரசாகும். அரசியல் அரங்கை ஏகபோகம் செய்த நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி இயல்பாகவே அரசுடன் முழுமையாக கலந்து விட்டது கட்சி இயந்திரம் அரசு இயந்திரத்துடன் முழுமையாக கலந்துவிட்டது, கட்சியினதும், அரசினதும் தலைமை ஒரே நபர்களின் கைகளில் குவிந்தது. இவர்கள் தான் " உயரத்தில் இருந்த வண்ணம் " வரையறையற்ற கட்டுப்பாடுகளற்ற அதிகாரத்தைச் செலுத்தினார்கள். இதே விடயந்தான் கட்சியின் கீழ் அடுக்குகளிலும் கட்சி அதிகார அடுக்குகளிலும் நடைபெற்றது.

இந்த அரசியல் அமைப்பு நிரந்தரமானதாகவும், அசைக்க முடியாததாகவும் இருக்கவேண்டுமானால், அரசின் மேல் கட்சி



தேசிய நூலகப் பிரிவு

யால் செலுத்தப்படும் முழுநிறைவான ஏகபோகமானது, அதாவது இன்னும் சரியாக சொல்வதானால் கட்சி அரசானது, சமுதாயத்தின் பொருளாதார அடிக்கட்டுமாணத்துக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். அனைத்தும் அரசு உடமையாக்கப்பட வேண்டும். இதற்காக பெரும் தனியார் சொத்து பறிமுதல் செய்யப்படுகிறது. சிறு உடமைகள் பலாத்காரமான, கொடூரமான ஸ்ராலினிஸ கூட்டுறவுமயமாகின்றது.

அரசு சொத்துக்களை பறிமுதல் செய்து கொள்வதுடன் முற்றுமுழு ஆதிக்கவாத ராஜ்ஜியத்தின் உருவாக்கம் நிறைவுறுகின்றது. இதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் முறையான நிர்வாகம் தோற்றம் பெறுகிறது. இன்றுவரை நிலவுகிற இந்த நிர்வாக முறைதான் சர்வாதிபத்திய ராஜ்ஜியத்தின் மிகநேர்த்தியானதும், முழுமையானதுமான வடிவமாகும். பாஸிஸ்ட் வடிவமும் கம்யூனிஸ்ட் வடிவமும் ஒன்றுக்கொன்று நேர் எதிர் துருவங்கள் என்றே பொதுவாகக் கருதப்படுகிறது. இது தவறான கணிப்பீடாகும். இரண்டுக்குமுள்ள வேறுபாடு பாஸிஸ முறை முழுமைபெறாததும், பொருளாதார அடித்தளத்தை தழுவிக் கொள்ளாததுமாகும்.இதன் விளைவாக பாஸிஸம் ஸ்திரமற்றதும் குறைந்த வினைத்திறனுள்ளதுமாகும்.

சகல தனது ஈனத்தனமான குற்றங்களுக்காகவும், கசாப்புக்கடைக்காரனும் நரமாமிச பட்சணியுமாகிய ஹிட்லர், கசாப்புக்கடைக்காரனாகிய ஸ்ராலினிலும் விட அற்பனாகவே தோன்றுகிறான் என்ற நிதர்சனத்திற்கு நாம் முகங்கொடுத்தேயாகவேண்டும்.

[ ஹிட்லரையும் ஸ்ராலினையும் ஒன்றெனக்காட்ட நிறைய புள்ளி விபரங்களையும் சம்பவங்களையும் குறிப்பிடுகிறார் ].

" பெறிஸ்ரோறிக்காவின்போது, சில நாடுகள் அடிக்கட்டுமாணத்தை குலைப்பதில் கவனம் செலுத்தும் ( சீனா ), வேறு சில நாடுகள் மேற்கட்டுமாணத்தைக் குலைப்பதில் கவனம் செலுத்தும் ( சோவியத் ஒன்றியம் ) இரு நிலைமைகளிலும், முற்றுமுழு ஆதிக்கவாத அமைப்பு நிலையற்ற தன்மைக்குள்ளாகின்றது. ( அமைப்புரீதியான போதாமை என்று இதைக் கூறலாம். ) தன்னை தக்கவைத்துக் கொள்வதற்காக, வெளிப்படையாகவும் அடிக்கடியும் பலாத்காரம், அடக்குமுறை, திகில்



ஊட்டுவாதம் ( Terrorism ) ஆகிய நடைமுறைகளைக் கையாளலாம். சமீபத்திய சீன வளர்ச்சி இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

உதாரணத்திற்கு, சோவியத் ஒன்றியத்தில் பொருளாதார அடிக்கட்டுமாணம் இன்னமும்கைவைக்கப்படாமல் இருக்கின்றது. தேசிய உடமைகளில் அரசின் முழுமையான ஏகபோகம் மாற்றத்துக்குள்ளாகாமல் அப்படியே இருக்கின்றது. ஆனால் மேல் கட்டுமாணத்தில் குலைப்பு நடவடிக்கை அரசியல் பன்முகத்தன்மையை ஒரு வெல்லப்பட்ட நடவடிக்கையாக ஆக்கும் அளவிற்கு வளர்த்துள்ளது. கட்சியை அரசில் இருந்து பிரித்தெடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உத்தியோகப்பற்றற்ற குழுக்களும், இயக்கங்களும், தேசிய முன்னணிகளும் மேடைக்கு வந்துள்ளன. இவைகள் தற்போது அதிகாரத்தில் இருக்கும் பொதுவுடமைக் கட்சியின் ஏகபோகத்திற்கு சவால் விடத் தொடங்கியுள்ளன. வேலைநிறுத்தங்கள் வெடித்துள்ளன. பிரிந்து செல்லவும், குடியரசுகளின் சுதந்திரத்திற்குமான இயக்கங்கள் சக்திபெற்று வருகின்றன. இவைகள் அனைத்தும் முற்றுமுழு ஆதிக்கவாதத்தின் குறைபாடுகளையும் தீமைகளையும் அம்பலப்படுத்துபவையாக அமைந்து வருகின்றன இங்கு நாம் காண்பது, குறிப்பிட்ட அளவிற்கு உள்புறமாக மாறியிருக்கும் 'பாஸிஸத்தை'யேயாகும். அடிக்கட்டுமாணத்தைப் பொறுத்து ஏகபோகமும், மேற்கட்டுமாணத்தைப் பொறுத்தவரை பல்லினத்தன்மையும் காணப்படுகிறது.

இந்தப்பிரச்சினைகள் பலகேரியன்களாகிய எமக்கு ஒன்றும் புதியதல்ல. உண்மையிலேயே நாம் இந்த விவகாரங்களை 60களிலேயே விவாதித்துள்ளோம். இன்றுங்கூட சோவியத் பருவ இதழ்களில் நடைபெறுமாப்போன்ற நடைமுறை அனுபவத்துடன் தொடர்பற்ற மட்டத்தில் வைத்தே விவாதித்தோம். மிக உயர்ந்த கோட்பாட்டு மட்டத்திலேயே இவ் விவாதம் நடைபெற்றது. ( மொ-ர்-ஏஜிகே )

பல்கேரிய அதிபரின் இந்தக் கருத்துக்கள் மாக்ஸிய - லெனினிஸ கருத்துக்களுக்கே எதிரானது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலும், கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் புரையோடிப் போயிருந்த அதிகாரத்துவ போக்கை களைந்தெறிய வேண்டியது மிக அவசியமான தொன்றுதான். தற்போதைய பின்னடைவுக்கான



86414

தலையான மேற்கட்டுமான காரணம் அதுவே தான். ஆனால் மேற்கட்டுமானத்தில் மட்டும் இதற்கான காரணம் தங்கியிருக்கவில்லை. அடிக் கட்டுமானத்திலும் சக்தி மிக்க காரணங்கள் உள் ளன கட்சியின் அதிகாரத்துவப் போக்கை களைந்தெறிய வேண்டும் என்ற போர்வையில் பாட்டாளிவர்க்கத்தின் சர்வாதிகாரத்தையே முற் றாக நிராகரிக்கும் போக்கு பெறிஸ்ரோறிக்கா இயக்கத்துள்வலுமிக்கதாய் வளர்ந்து வந்ததை காணக்கூடியதாய் உள்ளதல்லவா? எவ்விதமும் எதிர் புரட்சிகர அலை ஓங்கியுள்ளது. அது திரும் பவும் வெல்லப்படவேண்டும். வெல்லப்படுமா?



## சோவியத் பொருளாதாரம் -
### சில தகவல்கள் (80 களில்)

*சோவியத் நகர குடித்தொகையில் 20% மானோர் இன்னமும் பொதுக்குடியிருப்புக்களிலேயே வாழ்கிறார் கள். இங்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு அறையே இருந்தது மலசல கூடமும் குசினியும் குடியிருப்புக்களில் வாழும் ஏனைய குடும்பங்களுடன் பங்கிட்டு பயன்படுத்த வேண் டியதாகவே இருந்தது,*

1984 லான தலாவருமானம் பின்வருமாறு அமைந்திருந்தது.

கிழக்கு ஜேர்மனி $9, 800.
செக்கஸ்லோவாக்கிய $8, 250.
ஹங்கேரி $7, 200.
சோவியத் யூனியன் $7, 120.

நுகர்வோர்களுக்காகவும், கைத்தொழிலுக்காகவும் என உற் பத்தி செய்யப்படும் சோவியத் பண்டங்களில் பெரும்பான்மை யானவை அவைகளின் தாழ்வான தரத்திற்காக தொடர்ச்சி யாக விமர்சிக்கப்படுகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் கொர்பச் சேவ் கியுபைசீவில் உள்ள எக்ரன் உற்பத்தி நிறுவனத்தால்

உற்பத்தி செய்யப்படும் தொலைக்காட்சி பெட்டிகளில் 70% மானவை வருடாவருடம் தரக்குறைவானவை என்ற காரணத்தால் நிராகரிக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டார்.

சோவியத் யூனியனின் நீர்பாய்ச்சக் கூடிய நிலத்தில் 3% மான நிலமே விவசாயிகளின் தனியுடமையாக உள்ளது. இந்த மூன்று வீதமான நிலத்தில் சோவியத் யூனியனின் உருளைக் கிழங்கு, தேன் உற்பத்தியில் 60% மானவை உற்பத்தி செய்யப்படுகிறது; பழவகைகளிலும் முட்டையிலும் 40% ம் உற்பத்தி செய்யப்படுகிறது; பால், இறைச்சி,. மரக்கறி வகைகளில் 30% மானவை உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார் நிலங்கள் சோவியத் யூனியனின் 25%மான பயிர்ச்செய்கை உற்பத்திகளை வெளிவிடுகிறது. கூட்டுறவு அடிப்படையிலான பண்ணைகளிலேயே தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. விவசாயிகள் கூட்டுறவு நிலங்களிலும் விட தமது சொந்த நிலத்தினில் உழைப்பதையே அதிகம் விரும்புகின்றனர். தானியத் தட்டுப்பாட்டிற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

1985ம் ஆண்டு, சோவியத் அரசு சோவியத் விவசாயத்திற்காக 5470 கோடி ரூபிள்களை மானியமாக ஒதுக்கியது. இதில், 3510 கோடி ரூபிள்கள் இறைச்சிக்கும் பால் பொருட்களுக்கும் ஒதுக்கப்பட்டன. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதும் உணவின் சில்லறை விலையை உயரவிடாமற் தடுப்பதுமே அரசின் நோக்கமாய் இருந்தது. இதனால் தீய விளைவுகளும் ஏற்பட்டது. விவசாயிகள் கூடிய விலைக்கு தானியங்களை அரசு கொள்வனவு நிறுவனங்களுக்கு விற்று, தமது கால்நடைகளை தானியங்களால் உணவூட்டுவதற்கு பதிலாக பாண் கடைகளில் இருந்து வாங்கப்பட்ட அதிக மானிய கழிவு உள்ள பாணை தமது கால் நடைகளுக்கு தீனியாக கொடுத்தார்கள். பைலோருஷ்யாவிலும் எஸ்ரோனியாவிலும் நான்கு குடும்பங்களில் ஒரு குடும்பம் மனித உணவை கால்நடை வளர்ப்பு தீவனமாக கொள்வனவு செய்தன. ரேக்மெனிஸ்ரன், கிர்கிஷியா ,ருஸ்யகுடியரசு ( R. S.F. S.R ) ஆகியவற்றில் ஏழு குடும்பத்திற்கு ஒன்று இவ்விதம் நடந்து கொள்கிறது. மாமிசத்தின் சில்லறைவிலையும் பெரும் மானியத்திற்கு உள்ளாயிருப்பதால், மூலவளங்களை தவறாக ஒதுக்கீடு செய்வது என்ற விவகாரத்தில் மேலும் ஒருபடி முன்சென்று அரசு கடைகளில் மாமிசத்தைக் கொள்வனவு செய்து அவற்றை



கம்பளிரோமத்துக்காக வளர்க்கும் மிருகங்களுக்கு உணவாக வழங்கினார்கள். இதனால் 1986, ஜலை 1 உடன் இவ்விதமான மிருகங்களை தனியார் வளர்த்தல் என்பது தடை செய்யப்பட்டது. அதேபோல் பாணை மீளவும் விற்றலானது குற்றமாக பிரகடனப்படுத்தப்பட்டு இதற்காக 50 தொடக்கம் 100 ரூபிள்வரை தண்டமாக விதிக்கப்படும் எனவும் அறிவித்தது.

உத்தியோக பூர்வ கூற்றுகளுக்கு இணங்கவும், கொர்பச்சேவின் கூற்றுப்படியும் சோவியத்தின் வருடாந்த தானிய உற்பத்தியிலும், மரக்கறிவகைகள், பழவகைகள் போன்ற உற்பத்தியிலும் அறுவடை, இடம்மாற்றல், சேகரித்தல், பாதுகாத்தல் ஆகியவற்றின்போது மொத்தமாக 1/5 பங்கு வீண் விரயமாக்கப்படுகிறது. உதாரணத்திற்கு, குளிர்கால சேமிப்பின் போது 25% மான உருளைக் கிழங்கும், 20% மான தானியமும், அதே வீதமான சீனி பீட்கிழங்கும், 18% மான பழவகைகளும் நுகர்வோருக்கு பயன்படுத்த முடியாதளவிற்கு முற்றாகவே கெட்டுப்போய்விட்டது. சில வேளைகளில் ஐம்பது வீதமான உருளைக் கிழங்கு நிலத்திலேயே கிடந்து அழுக விடப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

அறுவடைக் காலங்களில், கூட்டுறவு நிலங்களில் அறுவடை செய்வதற்காக பெருமளவு தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். இத் தொழிலாளர்கள் நகரங்களில் இருக்கும் தொழிற்சாலைகளில் இருந்தே பெற்றுக் கொள்ளப் படுகிறார்கள். தொழிறசாலை முகாமையாளர்கள் தொழிலாளர்களை இதற்காக விடுவிக்க வேண்டும். இப்பிரச்சனைகளை கையாள்வதில் ஏற்படும் நிர்வாகப் பிரச்சனையே அறுவடைகால சேதங்களுக்கான காரணங்களில் ஒன்றாக அமைகிறது.

கூட்டுறவு மயப்படுத்தப்பட்டதும் அரசு உடமையானதுமான பண்ணைகளின் விளைபொருட்களைக் கூட சேமித்து வைப்பதற்கு போதிய கிட்டங்கிகள் இல்லை. உதாரணத்திற்கு, சோவியத் யூனியனின் 40% மான பண்ணைகளே கிட்டங்கிகளை உடையனவாகவுள்ளன. இந்தக் கட்டிடங்கள் கூட உணவுகளையல்ல, சிற்றூர்ந்துகளை ( கார்களை ) சேமிக்க பயன்படுத்துவதே வழமையாகவுள்ளது. சோவியத்துகளின் நடுலய திட்டமிடலாளர்கள் பிரமாண்டமான, குறைந்த அளவான கிட்டங்கிகளையும் பதப்படுத்தும் நிலையங்களையும் அமைக்கிறார்கள். இவை 'இக்சன்ரோமானியா' என அழைக்கப்படுகின்றன. பெரும்பான்மையான சோவியத் பண்ணைகள் தானிய

கிட்டங்கிகளில் இருந்து சராசரியாக 200 ல் இருந்து 300மைல்களுக்கு அப்பாலேயே உள்ளன. அதேபோல் மாமிசபதப்படுத்தும் ஆலைகள் 140 ல் இருந்து 150 மைல்களுக்கு அப்பாலேயே உள்ளன. அதே நேரத்தில் ஒரு அறிக்கையின்படி, 200 மாவட்ட நடுவன்களும், 1/2 பங்கிற்கு மேற்பட்ட அரச, கூட்டுறவுப் பண்ணைகளும் வீதித் தொடர்புவசதிகள் அற்றனவாகவே உள்ளன.

சமீப வருடங்களில் நாட்டின் மொத்த முதலீட்டின் 27% மானது விவசாயத்திற்கு என ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் பெருமளவானது நடுலிய நடவடிக்கைகளுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான முதன்மை வழமையாகவே புறக்கணிக்கப்பட்டுள்ளது.

1974 வரை விவசாயிகளுக்கு உள்ளூர் கடவுச் சீட்டு வழங்குவது தடுக்கப்பட்டிருந்தது. 16 வயதுக்கு மேற்பட்ட சோவியத் பிரஜைகள் சோவியத் யூனியனுக்குள் ஓரிரு நாட்களுக்கு மேல் பயணம் செய்யவேண்டுமானால் அவர்கள் உள்ளூர் கடவுச் சீட்டு எடுத்தாக வேண்டும். விவசாயிகளுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டதானது அவர்களை இரண்டாந்தர பிரஜைகளாக்குவதாகவே இருந்தது. இன்று அந்தத்தடை நீக்கப்பட்டாலும் விவசாயிகள் தமது உற்பத்தியை தம்முடன் எடுத்துச் செல்வது தடுக்கப்படுகிறது. தமது பொருட்களை வெளியிடத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதி பெற்றவர்கள் கூட பொலிஸாரின் கடுமையான பொதிகள் பிரிப்புச் சோதனைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள்.



## ருஷ்ய சமதர்மம் ஒரு வகை நவ - காலனியலிஸமா?

1990 ம் ஆண்டு மார்ச் 18 க்கும் ஜுன் 17 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கிழக்கு ஐரோப்பிய நாட்டின் 6 நாடுகளில் மும்முரமாண தேர்தல் நடவடிக்கைகள் நடைபெற்றன. சுமார் 9 கோடி மக்கள் மிக ஆர்வமாக தேர்தல்களில் பங்குபற்றினார்கள். இது 50 வருடங்களுக்குப் பின்னர் நடந்த சுதந்திரத் தேர்தலாகும். சில நாடுகளில் இது தான் முதற் தேர்தலாகும்.

கிழக்கு ஐரோப்பாவின் வட பகுதி நாடுகளான ஹங்கேரி, செக்கோஸ்லோவியா, போலண்ட் ஆகியனவற்றிற்கும் தென் பகுதி நாடுகளான பல்கேரியா, றோமானியா ஆகியவற்றிற்கும் இடையில் தேர்தல் பெறுபேறுகளில் நிறைய வேறுபாடு இருந்தது. வட பகுதியில் பல் முனைத் தன்மை பெற்ற, வளைந்து கொடுக்கும் குணாம்சத்தைக் கொண்ட வேலைத்திட்டங்களையுடைய பொது ஜன அமைப்புகளே வெற்றி பெற்றன.

ஹங்கேரியில் ஹங்கேரியன் ஜனநாயக முன்னணியும், செக்கோஸ்லோவியாவில் குடியியல் முன்னணியும் ( Civic Forum ), பலாத்காரத்திற்கு எதிரான பொதுஜனமும் ( Public Against Violence ), போலண்டில் சொலிடிரிரியும் ( Solidarity ) வெற்றி பெற்றன. தெற்குப் பகுதியில் பல்கேரிய சோஷலிஸ

கட்சியும், றோமானியன் தேசிய இரட்சணிய முன்னணியும் வெற்றி பெற்றன. இவை இரண்டும் தம்மை இடது, மைய - இடது ( Centre - left ) அமைப்புகள் என கூறிக் கொள்பனவை யாகும். இவ் அமைப்புகளின் வேலைத் திட்டம் மானுட சமதர்மத்தின் மூலக்கூறுகளைக் கொண்டனவாம். ( Humane Socialism)

பல்கேரியாவில் மாத்திரமே சமதர்மவாதிகள் தேர்தலில் வெற்றி பெற்றார்கள். ஏனைய நாடுகளில் மீள நிறுவப்பட்ட '' வரலாற்று பூர்வ '' சமூக - ஜனநாயக கட்சிகளும், கம்யூனிஸ்ட்களும் அவர்களின் வழித் தோன்றல்களும் - இடது சமதர்ம கட்சிகள் பெரும் தோல்வியைச் சந்தித்தார்கள்.

ஹங்கேரிய தேர்தலில் சமதர்மவாதிகள் ஆக 8.5% வாக்குகளையே எடுத்தார்கள். அதே போது அங்கு '' வரலாற்றுபூர்வ'' சமூக ஜனநாயக கட்சியும், சமதர்ம தொழிலாளர் கட்சியும் 5% வாக்குகளைக் கூடப் பெறவில்லை. அவர்கள் பாராளுமன்றத்தில் எந்த ஆசனத்தையும் பெறவில்லை. செக்கோஸ்லோவியாவில்த சோஷலிஸ்ட்ஸ் ( The Socialists ) என்ற கட்சியும் சமூக ஜனநாயக கட்சியும் பெரும் தோல்விகண்டன. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி 14% மான வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்திற்கு வந்தது.

றோமானியாவில், '' வரலாற்றுபூர்வ '' சமூக ஜனநாயக கட்சி பிரதிநிதிகள் சபையில் இரு ஆசனங்களைப் பெற்றது. ஐந்து ஆசனங்கள் மீள அமைக்கப்பட்ட சமூக ஜனநாயக கட்சிக்கு கிடைத்தது.

போலண்டில் போலண்ட் குடியரசின் சமூக ஜனநாயக கட்சி 980,000 வாக்குகள் பெற்று 1% த்திற்கும் குறைவான ஆசனங்களையே கைப்பற்றியது. ஜேர்மன் ஜனநாயக குடியரசிலும் இதே நிலைதான். இங்கு மீள அமைக்கப்பட்ட சமூக ஜனநாயக கட்சி தனியாகவும் இடது சமூக ஜனநாயக கட்சியும், ஜனநாயக சோஷலிஸக் கட்சியும் கூட்டுச் சேர்ந்தும் போட்டியிட்டன. ஆனால் இவை கிறிஸ்துவ ஜனநாயக யூனியனையும் விட குறைவான வாக்குகளையும் ஆசனங்களையுமே பெற்றன.

இவ் 'இடது' கட்சிகள் அனைத்தும் முன்னைய பொதுவுடமைக் கட்சிகளின் பரிமாற்றங்களேயாகும். புதிய சூழலுக்கு ஏற்ப கட்சிகள் தம்மை சீர் செய்து கொண்டன. இந்நிகழ்ச்சியின் போது பல கட்சிகள் தோற்றம் பெற்றதுடன் கட்சி அங்கத்துவத்தின் எண்ணிக்கையிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது.



உதாரணத்திற்கு, போலண்டில் கட்சி அங்கத்தவர்களின் முன்னைய எண்ணிக்கை சுமார் 20 லட்சமாகும், ஆனால் தற்போது அங்குள்ள இரு சமூக ஜனநாயக கட்சிகளினதும் அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 53,000 மாகும். அதேபோல் ஜேர்மன் ஜனநாயக குடியரசில் சோஷலிஸ் யுனிட்டி கட்சி 20 லட்சத்து 30 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்டதாய் இருந்தது. இன்று அதன் புதுவடிவமான ஜனநாயக சமதர்மக் கட்சியின் அங்கத்துவம் 4 லட்சத்து 50 ஆயிரம் மாத்திரமே யாகும். சுமார் $\frac{1}{4}$ பங்காகக் குறைந்துள்ளது. முன்னைய ஹங்கேரியன் சமதர்மத் தொழிலாளர் கட்சியின் அங்கத்துவ பலம் 850,000 ஆகும். ஆனால் இன்று அதன் இரு வழித்தோன்றல்களான ஹங்கேரியன் சமதர்ம கட்சியினதும், சீர்செய்யப்பட்ட சமதர்ம தொழிலாளர் கட்சியினதும் பலம் முறையே 50,000 மும், 82,000 முமாகும்.

பல்கேரியாவின் நிலைமை சற்று வேறுபட்டது. பல கட்சி முறையின் முன் பல்கேரியாவை ஆட்சி புரிந்தது பல்கேரியன் பொதுவுடமைக் கட்சியேயாகும். இதன் அங்கத்தவராக இருந்து விலத்தப்பட்டவரே தற்போதைய பல்கேரியன் ஜனாதிபதியாகும். இவர் பல்கேரியன் எதிர்ப்பியக்கமான 'ஜனநாயக அணியினரின் யூனியன்' என்ற அமைப்புக்குத் தலைமை தாங்கினார். ஜனநாயகத் தேர்தல் மூலம் பல்கேரிய ஜனாதிபதியானார். பல்கேரிய பொதுவுடமைக் கட்சி புனருத்தாரணம் பெற்று இவரின் தலைமையில் பல்கேரிய சமதர்மக் கட்சி அமைக்கப்பட்டது. இதன் அங்கத்துவத்தில் பாரிய மாற்றம் ஏற்படவில்லை.

இப் புனருத்தாரணம் எவ்விதமானதாக இருந்திருக்கக் கூடும் என்பதை ஊகித்தறிவதற்கு ஒருசான்று உள்ளது. பல்கேரிய தற்போதைய ஜனாதிபதி எதிரணித் தலைவராக இருக்கும் போது 'பாஸிஸம்' என்ற தலைப்பில் எழுதிய ஒரு நூலே அச்சான்றாகும். இந் நூலின் சில பகுதிகளை இதே வெளியீட்டில் தந்துள்ளோம்.

## ஏன் இந்த நிலைமாற்றம்

கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட இந்தத் திடீர் 'சமதர்ம' எதிர்ப்பு அலைக்கான காரணம் என்ன?

சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்ட பெறிஸ்ரோறிக்கா இயக்கத்தின் வீச்சு இங்கும் அலைமோதியது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அது '' மக்கள் இயக்கத்தை '' தோற்று வித்தது.

பெறிஸ்ரோறிக்காவின் மூலநாயகனும் குறிப்பிட்ட கட்டம் வரை அதன் தலைமை முன்னெடுப்பாளனுமான மிக்கேல் கொர்பச்சேவ் பெறிஸ்ரோறிக்காவை இன்றைய லெனின் எனவேகருதினரர். ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சோவியத் ஒன்றியத்திலும் பெரும்பான்மையோரால் அது அவ்விதம் கருதப்படவில்லை. அவர்கள் பெறிஸ்ரோறிக்காவை அதிகாரத்துவ முற்றுமுழு ஆதிக்க ( Authoratian - Totalitarian regime ) ராச்சியத்திற்கு எதிரானதொரு அரசியல் இயக்கமாகவே கருதினார்கள். இவ்வியக்கத்தின் விளைவாக எவ்விதமான அரசுஅமைக்கப்பட வேண்டும் என்பதையும் விட, அதிகாரத்துவ- முற்றுமுழு ஆதிக்கவாத ராச்சியம் எவ்விதப் பட்டும், என்ன விலை கொடுத்தும் வீழ்த்தப்பட வேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்தப்பட்டது. சமதர்மமே அதற்கான விலையாகத் தரப்பட்டது.

இக் கிழக்கு ஐரோப்பிய சமதர்ம அரசுகள் சோவியத் ஒன்றியத்தின் ஒரு நவீனவகை நவ காலனியாகவே வைக்கப் பட்டிருந்தன. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய தன்னாதிக்கமுடைய தேசங்களாகவே இவை இருந்தன. ஆட்சியில் இருந்த பொதுவுடமைக் கட்சியோ "சமதர்ம தந்தை நாட்டு நலனுக்காக சிறிய சமதர்ம நாடுகள் தமது நலனைத் தியாகம் செய்வதே பாட்டாளிவர்க்க சர்வதேசியம்" என்ற பிரஷ்நோவின் கோட்பாட்டிற்கு கட்டுப்பட்டு மட்டுப் படுத்தப்பட்ட தேசிய தன்னாதிக்கத்தை நியாயப்படுத்தி வந்தன. இதனால் மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த பூரண தேசிய தன்னாட்சிக்கான இயக்கம் பொதுவுடமை அதிகாரத்துக்கு எதிரானதாகவும், பொதுவுடமைக் கட்சியில் இருந்து அந்நியப்பட்டதாகவும் இருந்தது. பொதுவுடமை எதிர்ப்புக் கருத்துக்கள் தேசிய இயக்கத்துள் வளர்வதற்கு இது சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது. சமதர்மத்தை ஒருவகை நவ - காலனியலிஸமாகவே கிழக்கு ஐரோப்பிய மக்கள் புரிந்து கொண்டிருந்தார்கள்.

அடுத்த விடயம், உக்கிரமடைந்து வந்து கொண்டிருந்த பனிப்போரின் கூர்மையான போர் முனையாக ஐரோப்பா மாறிவருவதை ஐரோப்பிய நாடுகள் அனைத்துமே புரிந்து கொண்டிருந்தன. 1வது உலக யுத்தத்தையும், 2 வது உலக யுத்தத்தையும் போல் மூன்றாவது உலக யுத்தத்தினாலும் அநேகமாக பாதிக்கப்படப்போவது ஐரோப்பாவாகத்தான் இருக்குமோ என்றபயம் அனைத்துஐரோப்பிய நாடுகளையும் கவ்விக் கொண்டது, வார்ச்சோ, நேட்டோ இருபெரும் இராணுவ கூட்டும் ஐரோப்பாவையே பாதிக்கும் என்பதை எவர்தான் உணரமாட்டார்கள்? அமெரிக்காவிற்கும் ருஷ்யாவுக்குமாக ஐரோப்பியர்கள் தமக்குள் அடிபட்டுக்கொள்ள விரும்பவில்லை. இதனால் ஐக்கியப்பட்ட ஐரோப்பா என்ற அரசியல் உணர்வு கிழக்கிலும், மேற்கிலும் ஐரோப்பிய மக்களிடையே வளர்ந்துவந்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சமாதான இயக்கம்( Peace Movement )ஒரு சக்தி பெற்ற அரசியல் இயக்கமாக வளர்ந்து வந்ததை எல்லோரும் அறிவர்.

ஆனால் கிழக்கு ஐரோப்பிய பொதுவுடமைக் கட்சி ஐரோப்பிய மக்களின் இந்த உணர்வை மதிக்கவோ குறைந்தது புரிந்து கொள்ளவோ கூட இல்லை. சோவியத் ஒன்றியத்தின் வல்லாதிக்க வாதம் பேணப்படுவதுதான் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்துவம் என்ற கோட்பாட்டை இறுக பின்பற்றினார்கள். ஐரோப்பிய ஐக்கியத்திற்கும், ஐரோப்பிய சமாதானத்திற்குமான தடைக்கற்களாகவே கிழக்கு ஐரோப்பிய பொதுவுடமைக் கட்சிகள் நோக்கப்பட்டன. பொதுவுடமைக் கட்சிகளின் மேல் கிழக்கு ஐரோப்பிய மக்களின் வெறுப்பு வளர்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சோவியத் ஒன்றியம் வார்ச்சோ ஒப்பந்தத்தை தானே முன்வந்து கலைத்ததுவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சுயமான செயற்பாட்டின்மேல் இருந்த தடைகளை தானே முன்வந்து நீக்கியமையும் கிழக்கு ஐரோப்பிய மக்கள் மத்தியில் சோவியத் ஒன்றியத்தின் மேல் ஒரு நன்மதிப்பைத் தோற்றுவித்தது. இந் நிகழ்வுக்கு காரணமான பெறிஸ்ரோறிக்காவை கிழக்கு ஐரோப்பிய மக்களும் ஆதரித்தார்கள். அதன் செல்வாக்கிற்கு உட்பட்டார்கள். முழு ஐரோப்பிய மக்கள் மத்தியிலும் கொர்பச்சேவ் பண்பட்ட ஒரு தலைவராக மதிக்கப்பட்டார்.

ஆனால் துரதிஷ்டவசமாக கொர்பச்சேவைத் தான், மக்கள் மதித்தார்களேதவிர, கிழக்கு ஐரோப்பிய பொதுவுடமைக் கட்சிகளை கிழக்கு ஐரோப்பிய மக்கள் மதிக்கவில்லை. சோவியத் பொதுவுடமைக் கட்சி றோமானியா தவிர்ந்த ஏனைய கிழக்கு ஐரோப்பிய கட்சிகளின் மீது ஆதிக்கம் செலுத்திவந்தது. எஜமானகட்சியை மதித்த மக்கள் எதற்காக சீஷ்ய கட்சிகளைமதிக்கவில்லை.வார்ச்சோ ஒப்பந்த நாடுகள் சம்பந்தமான கொர்பச்சேவின் முடிவு சோவியத் பொதுவுட

மைக் கட்சியின் முழுமையான முடிவல்ல, கட்சி அந்த முடிவை பல புறநிலை நிர்ப்பந்தத்தால் ஏற்றுக் கொண்டாலுங்கூட கட்சிக்குள் இது தொடர்பாக பாரிய முரண்பாடுகள் நிலவியது. கொர்பச்சேவ் அமெரிக்காவிற்கு அடிபணிந்து விட்டார் என்ற கருத்தும் நிலவியது. இதை கிழக்கு ஐரோப்பிய மக்கள் நன்கு தெரிந்து கொண்டிருந்தார்கள்.

கிழக்கு ஐரோப்பிய பொதுவுடமைக் கட்சிகள் (றோமானியா விதிவிலக்கு) இந்த முடிவை தாமாக முன்வைக்கவில்லை. இம் முடிவின் பின்னால் இழுபடுபவர்களாகவே இருந்தார்கள். இம்முடிவை எதிர்க்கவும் கூட செய்தார்கள். கட்சியை புனருத்தாரணம் செய்ய முன்வந்தோர் காலங்கடந்தே இதைப் புரிந்து கொண்டார்கள். ஆகையால்தான் அவர்களின் புனருத்தாரண முயற்சியும் பயனளிக்கவில்லை.

வார்ச்சோ ஒப்பந்தம் தொடர்பான பிரச்சனைதான் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பிரத்தியேகமான பிரச்சனையாகும். அதிகாரத்துவ முற்றுமுழு ஆதிக்கவாத ராச்சியம் சம்பந்தப்பட்ட பிரச்சனை சீனா உட்பட அனைத்து நாடுகளுக்கும் பொதுவான பிரச்சனையாகும். இதை பிறிதோர் இடத்தில் விளக்குவோம்.

ஏ. ஜி. கே.



# கம்யூனிஸத்தின் தோல்விக்கான அடிக்கட்டுமான காரணம் - ஓர்நோக்கு

கம்யூனிஸத்தின் தோல்விக்கான காரணம் சம்பந்தமான மற்றோர் அணுகுமுறையை இங்கு தருகிறோம். இது அடிக்கட்டுமாணத்தில் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமான கோணத்தில் இருந்து அணுகப்படுகின்றது.

சமூகபுரட்சியின் இறுதி சாராம்சம் அரசியல் அதிகாரம் சம்பந்தப்பட்டதேயாகும். சோஷலிஸ சமூகத்தில் நடக்கும் சமூக புரட்சியின் நோக்கம் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை செழுமைமிக்கதாகவும், ஸ்திரமானதாகவும் ஆக்க வேண்டியதாக இருக்கவேண்டுமே தவிர அதை மேலும் பலவீனப் படுத்துவதாகவும், அதிகாரத்தில் இருந்து அவ்வர்க்கத்தை முற்றாக அப்புறப்படுத்துவதாக இருக்கக் கூடாது. பெறிஸ்ரோறிக்கா போன்ற சமூக, புரட்சி சோஷலிஸ சமூக அமைப்புக்கு அவசியமானதே. இப் புரட்சி சமூகத்தில் மறைந்திருக்கும் அனைத்துவகை எதிர்புரட்சிகர கருத்துக்களையும் வெளிக்கொணர்வது மிகவும் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும். இதுவரை நடந்ததுபோல் கருத்துக்களை அடக்கி நசுக்காமல் அவற்றை வெளிவரவிட்டு திறந்த விவாதத்தின் மூலம்

அவற்றைத் தோற்கடிப்பதே சிறந்த வழிமுறையாகும். ஏனெனில் சோஷலிஸ நாடுகளில் ஏராளமானளவில் தோன்றிவரும் நடுத்தர வர்க்கத்தினரே இக் கருத்துக்களின் காரண கர்த்தாக்களாக உள்ளார்கள். நடுத்தர வர்க்கத்தினர் அதுவும் குறிப்பாக புத்திஜீவிகள்தான் இன்று சோஷலிஸ நாடுகளின் எதிர்புரட்சிகர இயக்கங்களின் வெகுஜனங்களாக உள்ளார்கள். இவர்களுடன் ஐக்கியமுறுவதிலும், இவர்களைத் தமது தலைமையில் கொண்டுவருவதிலும் சோஷலிஸ நாடுகளின் பாட்டாளிவர்க்கம் தோல்வி கண்டுவிட்டது.

இவர்களின் இவ்வித கருத்துக்கள் தோன்றுவதற்கான காரணிகள் (யதார்த்தமானவை. அவ் யதார்த்தத்திற்கு ஒப்ப பொருத்தப்பாடான கோட்பாடுகளையும், வேலைத்திட்டத்தையும் வகுத்துக்கொள்வதே அந்நாடுகளின் மாக்ஸிஸ்ட் லெனினிஸ்டுகளின் முன்னால் உள்ள கடமையாகும்.

தொழில் நுட்ப புரட்சியால்ஏற்பட்ட புதிய நிலைமை எந்த நாட்டிலும் பூர்ஷ்வா (முதலாளித்துவ) கட்சிகளின் இருத்தலையும் அதன் தலைமையையும் சாத்தியமற்றதாக்கிவிடவில்லை. ஆனால் இவ் ஆசிரியரின் கூற்றுப்படி கம்யூனிஸ்ட் கட்சியின் இருத்தல் மட்டும் சாத்தியமற்றதாகி விடுகிறதாம். ஆனாலும் இக்கட்டுரை யதார்த்த நிலைமைகளை புரிந்து கொள்ள உதவுவதனால் அதை வாசகர்களுக்கு தரவிரும்புகிறோம்,

1980களின் பிற்பகுதியில் ஒரு அரசாங்க வடிவம் என்ற முறையிலும், பொருளாதார அமைப்பு என்ற முறையிலும் மாக்ஸிஸம் - லெனினிஸம் பாரிய தோல்வியைச் சந்தித்துள்ளது இதனால், எமது காலத்தில், இரண்டாந்தர தொழில் நுட்ப அடித்தளத்தில் இருந்து பிரகாசமான ஒரு சித்தாந்தத்தை எதிர்பார்க்கமுடியாது. கவரும் தன்மை பெற்று விளங்கிய கிழக்கு ஐரோப்பிய சித்தாந்த முனையும் சிதறிவிட்டது.

பத்து வருடங்களுக்கு முன்னர் மிக நேர்த்தியான முறையில் ஸ்திரத்தன்மை பெற்றதாக தோற்றமளித்த கம்யூனிஸ்ட் மேடைகள் துரிதமாக சரிந்து விட்டன. இவ்விதமான திடீர் (வரலாற்றுரீதியில்) சரிவால் உலக அரங்கில் பிரமாண்டமான அரசியல், பொருளாதார தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இவைகளால் திகைப்புக்குள்ளாகி ஈர்க்கப்பட்ட அனைத்திடங்களிலுமான ஆய்வாளர்கள் இந்தப் பிரச்சினையில் தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளார்கள்.



ஆரம்பத்தில் கம்யூனிஸத்தின் தோல்வி பின்வரும் காரணிகளால் ஏற்பட்டவை என்றே கூறப்பட்டன, ஊழல், அதிகார துஸ்பிரயோகம், பாதுகாப்பு படையினரின் அடக்குமுறைகள், உணவுத்தட்டுப்பாடு, பொருளாதார அபிவிருத்தி பற்றிய பெரும் பொய்கள், உறவினர்களுக்கான சலுகைகள் போன்றவையே அவையாகும். சோவியத் யூனியனினதும் கிழக்கு ஐரோப்பாவினதும் பொருளாதாரம் அதன் அளவிலும் வளர்ச்சி வேகத்திலும் மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இதனால் போட்டி அணிகளான கிழக்கு, மேற்கு ஐரோப்பாக்கள் ஏமாற்றப்பட்டுள்ளன என்பதை இப்போதுதான் காணக்கூடியதாய் உள்ளது.

சோவியத்துக்களுக்கு பிரமாண்டமான பொருளாதார அடித்தளமிருப்பதாகவும் அவற்றின் வளர்ச்சி வேகம் ஐக்கிய அமெரிக்காவினதையும் விட உயர்வானது என்றும் சி. ஐ. எ. கூட கணிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பித்தன. கிழக்கு ஐரோப்பிய அணி முழுமையாகவே முன்னேறுவதாகக் கூறப்பட்டது. மேற்கு ஜேர்மனியின் தலாவருமானம் 10,220 ஸ்ரேலிங் பவுணாக இருக்க கிழக்குஜேர்மனியின் தலாவருமானம் 10,440 டொலராக இருப்பதாக கூறி கிழக்கு ஜேர்மனி ஒரு காட்சி அலுமாரியாக்கப்பட்டது.

அமெரிக்கா தனது பிரமாண்டமான பாதுகாப்பு செலவீனத்தை நியாயப்படுத்துவதற்காக திட்டமிட்டே கட்டிவிட்ட இந்த மிகைப்படுத்தல்கள் எத்தனை வீதமானது என்பது இங்கு அவசியமில்லாதது.

கம்யூனிஸம் ஏன் தோற்றது என்பதைக் கண்டறிய நாம் அமைப்புக் கட்டுமாண காரணங்களுக்குள் சென்றாக வேண்டும்; இவ்விதமானதொரு அறிவியல் ஆய்வு எமக்கு மிகஅவசியமானது அதுதான் எமக்கு எதிர்காலத்தைப் பற்றியதொரு கணிப்பீட்டையும் தரக்கூடியது எனது கருத்து, கம்யூனிஸ அரசுகளின் பொருளாதார கஸ்டங்களின்மூலகாரணம் உள்ளூர அமைந்துள்ள பொருளாதார பொறிமுறையைச் சார்ந்ததல்ல. மாறாக, இது உலக பொருளாதார அமைப்புடனும் அறிவியல் தொழில் நுட்ப புரட்சியுடன் குறிப்பாக மேற்கில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றுடனும் அவற்றிற்குள்ள அமைப்புரீதியான பொருத்தப்பாட்டைச் சார்ந்ததேயாகும்.

எதைக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் குறிப்பாக புறக்கணித்தார்களோ, எதை மேற்கத்தைய ஆய்வாளர்கள் குறைத்து மதிப்பிட்டார்களோ அது தான் உலக பொருளாதாரத்தின் அடிப்படை நிபந்தனையாகவுள்ளது. உலக பொருளாதாரம் என்பது ஒரு அதிகார அடுக்கு அமைப்பாகும். இதில் மேற்கத்தைய முதலாளித்துவமே ஆணையிடும் நிலையைப் பிடித்துள்ளது. இதனால் உலகச்சந்தையின் செயற்படு விதிகளை அதுவே ஆட்சிசெய்கிறது. குறைந்த அபிவிருத்தி நாடுகளில் தோற்றம் பெற்ற கம்யூனிஸ அரசுகள் உலக அமைப்பில் ஒரு விளிம்படுத்த பங்கினையே வகித்துவருகின்றன

இன்னும் ஆழ்ந்து கிண்டிப் பார்ப்போமானால், சோஷலிஸ சமூக அமைப்பைப் பற்றிய தத்துவம் மாத்திரமல்ல எதிர்கால கம்யூனிஸ அமைப்பைப்பற்றிய தத்துவமும் கூட வரலாற்று ரீதியில் முதலாளித்துவ காலகட்டத்துடன் தொடர்புபட்ட கைத்தொழில் அமைப்புகளின் கட்டுமாண எல்லைகளுக்குள் புரிந்து கொள்ளப்பட்டதொன்றாகவே உள்ளது. கைத்தொழில் மயமாக்கல்தான் சோஷலிஸத்தின் இலச்சியம் என ஸ்ராலினால் முன்வைக்கப்பட்ட காலத்தில் இருந்தே இவை எல்லாம் ஆரம்பமாகின்றன உண்மையிலேயே கைத்தொழில் மயமாக்கல்தான் ஆகப்பெரும் முதலாளித்துவ நடவடிக்கையாகும். பூர்ஷ்வா பொருளியலாளர்கள் இதற்கான கோட்பாடுகளை ஆக்கினார்கள், முதலாளித்துவ வாதிகள் இதையடைவதற்கான வழிவகைகளையும் சாதனங்களையும் கண்டு பிடித்தார்கள். கம்யூனிஸ்ட் தலைவர்கள், கைத்தொழில் முதலீடுகளுக்கான உபரியை ஆக்குவதற்காக மூலதனதிரட்சியை விரும்பி அணுகுவதன்மூலம் வேறுவழி எதுவும் இன்றி இந்த பூர்ஷ்வா போதனைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றினார்கள்.

இன்னொரு வார்த்தையில் சொல்வதானால் கைத்தொழில் மயமாக்கல் ஒரு சோஷலிஸ சமூக அமைப்பின் மிகச்சிறந்த ஒரு களமாக அமையலாம். ஆனால் அது சோஷலிஸத்தின் இலட்சியமாக அமையமுடியாது. ஆகவே, ஆரம்பத்தில் இருந்தே கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளித்துவ பொருளாதாரத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளாமலே முதலாளித்துவ பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள், இதனால் அதை எவ்விதம் செய்வது என்பதையும் தெரியாதுள்ளார்கள்.



லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கை (N. E. P) 1920 களின் ஆரம்பத்தில் நிலைநிறுத்தப்பட்டது - சந்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தலையும் தனக்குள் உள்ளடக்கியிருந்தது இக்கொள்கை குறிப்பிட்ட சில காலத்திற்கு மேற்கூறிய ஒழுங்கிற்கு விதிவிலக்காக இருந்தது. இந் நிலைமை மிகச்சிறிய காலமே நீடித்தது. ஆனால் ஸ்ராலின் இதை விரைவில் கொன்றுவிட்டு உலகத்துக்கு புறம்போக்கான ஒரு பொருளாதார அமைப்பைத் தோற்றுவித்தார். சோஷலிஸத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையேயான தேர்வு என்பது எப்போதுமே ஒரு பொய்மை விவகாரமாகவே இருந்துள்ளது, இதுபற்றி எழுதப்பட்ட பல்லாயிரக்கணக்கான தொகுப்புகளும் ஒப்பந்தங்களும் நிலவாத ஒரு விவகாரத்தைப் பற்றி நடந்த மிக வளமிகுந்த விவகாரங்களாக வரலாற்றால் புறக்கணிக்கப்பட்டுவிடும்.

யுத்த காலத்தின் போது, குறிப்பாக 2 வது உலக யுத்தத்தின்போது பொருளாதார காரணியையும்விட அரசியல் இராணுவ காரணியே தலைமைத்துவத்தைப் பெற்றதானது இந்த விவகாரத்தை மேலும் குழப்பமாக்கிவிட்டது. எவ்விதமிருந்தாலும், அரசியல் இராணுவ அரங்கில், ஹிர்லரிஸ ஜேர்மனியைத் தோற்கடிப்பதற்கான தீர்மானகரமான பாத்திரத்தை வகித்தது சோவியத்யூனியனேயாகும். யுத்தத்தின் பின்பு சோவியத் ருஷ்யாவும், அதன் நேசநாடுகளும் ஒரு தனிசக்தியாக மாறின. இச் சக்தியானது, அவர்கள் சுயாட்சியாக அமைவதற்கு வழிவகுத்ததுடன் சர்வதேச அரசியல் சூழலை மாற்றுவதில் அரசியல்ரீதியிலும், இராணுவரீதியிலும் வல்லமைபெற்ற முன்னணிப் பாத்திரம் வகிப்பதையும் சாத்தியப்படுத்தியது. ஆனால் உலகச்சந்தையில் சோவியத் ருஷ்யாவால் இவ்விதமான தொன்றையும் செய்யமுடியவில்லை அங்கு ருஷ்யாவின் நடவடிக்கைகள் தகவமைத்துக் கொள்வதொன்றாக இருந்ததேயல்லாமல் பிளவு படுத்தும் தன்மை கொண்டதொன்றாக இருக்கவில்லை

கம்யூனிஸத்தின் வீழ்ச்சியை ஏற்படுத்திய இரண்டாவது அமைப்புக் கட்டுமாண உந்துவிசைக்காரணி அறிவியல் பூர்வ-தொழில்நுட்ப புரட்சியாகும். எமது காலத்தின் அனைத்து சமூக, தேசிய புரட்சிகளிலும்விட மிக ஆழமாக சமுதாயத்தின் அடித்தளத்தையும் மனிதவாழ்வின் அனைத்து பரிமாணங்களையும் தழுவிய புரட்சி இதுவேயாகும்

இந்தப் புரட்சிக்கு முன்பாக, கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான போட்டி கைத்தொழிலாக்கத்தின் அளவைப் பொறுத்ததாகவே இருந்தது; அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெற்று வந்தன. சோஷலிஸ நாடுகள் அவை குறைந்த அபிவிருத்தி பெற்றிருந்த போதிலுங்கூட உயர்ந்த வளர்ச்சி வீதத்தை கொண்டனவாய் இருந்ததுடன் உயர் கைத்தொழில் நாடுகளை மெதுவாக ஆனால் நிச்சயமாக எட்டிப்பிடிப்பனவையாகவும் இருந்தன. தொழில் நுட்ப புரட்சி இவை அனைத்தையும் கெடுத்துவிட்டது. மேற்கில், பிரமாண்டமானளவில் புதிய தொழில் நுட்பம் பிரயோகிக்கப்பட்டது. இதனால் உற்பத்தி சக்திகளின் பிரமாண்டமான அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டது.

கிழக்கிலோ, ருஷ்யா ஒரு பின்தங்கிய விவசாய நாடாக இருந்தபடியாலும், இந்நிலமையை ஐந்து தசாப்தங்களாக பிடிவாதமாக பாதுகாத்து வந்தமையாலும், புதிய தொழில் நுட்பங்களை நிராகரித்து வந்தமையாலும், பொருளாதார அமைப்பு பின்வரிசையில் இழுபட்டது. இதன் காரணத்தால் அனைத்து சோஷலிஸ நாடுகளினது வளர்ச்சிவேக விகிதம் பாரிய வீழ்ச்சிக்குள்ளானது; 1960 களில் 10% இருந்தது 1980 களில் 3 விகிதமாய் தேய்ந்தது.

பொருளாதார திட்டமிடல் அமைப்பு முறைமை மாத்திரம் பழமைப்பட்டுப் போனதொன்றாகி விடவில்லை; கணனிகள், தகவல்கள், தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடன் மோதல்களைச் சந்தித்த சர்வாதிபத்திய அரசியல் அமைப்பு முறைமையும் பழமைப்பட்டுப்போனது. அதுமாத்திரமல்ல "உண்மையான சோஷலிஸத்தை" தன்மேல் தக்கவைத்துக் கொண்டிருந்ததாக கருதப்படும் சமூக அபிவிருத்தி சம்பந்தமான அடிப்படை கணிப்பீடுகளே கூட பழமைப்பட்டுப்போனது

ஒத்த சமூக தன்மையுள்ள ஒரு சமூகத்திற்குப் பதிலாக, அரசியல் பல்லினத்தன்மையை கட்டாயப்படுத்தியிருப்பதான புதிய நிலைமை தோன்றியுள்ளது. வெவ்வேறுபட்ட நலன் கொண்ட சமூக-தொழிற் குழுக்களாக (Socio - Occupational -group) தொழிலாளி வர்க்கம் சிதறுண்டுவிட்டது. இன்னும் சொல்வதானால், சந்தைப் பொருளாதாரமானது கிழக்கு ஐரோப்பிய சமூதாயங்களில் பெருமளவான மத்தியவர்க்கத்தை உருவாக்குவதுடன் அதை அவசியப்படுத்தியும் வருகிறது. இது சுருக்கமாகச் சொல்லப்போனால், மார்க்ஸை தலைகீழாக்குவதாகும்.

சில்லியு புறுகன்
பு(B)ச்சா(CH) றெஸ்ட், றோமானிய,
நியு ரைம்ஸ்
(மொ-ர் - ஏஜிகே)



86414

# லெனின் மீளவும் போல்ஷ்விக் ஆவாரா?

ருஷ்ய புரட்சியின் முன், ருஷ்ய பொதுவுடமைக் கட்சியைக் கட்டி வளர்ப்பதில் லெனினே பிரதான தலைமைப்பாத்திரத்தை வகித்தார், தனக்கு முன்னிருந்த பல தலைவர்களுடன் (1) தத்துவார்த்த போராட்டம் நடத்தியே லெனின் ருஷ்ய சூழலுக்கு ஒப்ப மாக்ஸிஸ லெனினிஸத்தைப் பாதுகாத்தார். அவரின்முன் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட கட்சியிலேயே அவரும், அவரது ஆதரவாளர்களும் சிறுபான்மையினர் (2) ஆனார்கள்.

நெருக்கடிக்குள்ளான லெனின் தொடர்ந்து போராடினார். அவரின் கட்சி போல்ஷ்விக் கட்சி எனப்பெயர் பெற்றது. அக்கட்சியே பின்னர் ருஷ்ய பொதுவுடமைக் கட்சியெனவும், பின்னர் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி எனவும் பெயர் பெற்றது. புரட்சியின் பின் ஏனைய அனைத்துக் கட்சிகளும் தோற்கடிக்கப்பட்டன. (3) ருஷ்யப் புரட்சியின் வெற்றிக்கான அடிப்படைக் காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

தேசிய நூலகப் பிரிவு

(1.) தொழிலாளர்களையும் விவசாயிகளையும் நெருக்கமாக ஐக்கியப்படுத்தியது. விவசாயிகளை புரட்சியின் பக்கம் வென்றெடுத்தது.

(2.) பல்வேறு இனக்குழுமங்களின் (4) சிறைக் கூடமாக இருந்த ருஷ்யாவில், ருஷ்ய பெருந்தேசிய வாதத்தை தோற்கடித்தது, மாக்ஸிஸ-லெனினிஸகொள்கையின் அடிப்படையில் அனைத்து இனக்குழுமங்களின் தொழிலாளிவர்க்கத்தையும் தனி ஒரு அரசியல் அணியாக அணிதிரட்டியது. இந்த அரசியல் கட்சியின் தலைமையில் அனைத்து இனக் குழுமங்களையும் ஐக்கியப் படுத்தியது.

(3.) தொழிலாளி - விவசாயி ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை ருஷ்ய நிலப்பரப்பில் நிலவியது.

(4). இச் சர்வாதிகாரத்தை செயற்படுத்தக் கூடிய ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியது. இந்த நாலாவது விடயந்தான் லெனினின் முதலாவதும், அடிப் படையானதுமான சாதனையாகும்.

இந்த நான்கு மந்திரக் கோல்களில் எந்த ஒன்று இல்லாவிட்டாலும் ஐக்கிய சோவியத்துக்களின் சோஷலிஷ குடியரசை உலகம் கண்டிருக்க மாட்டாது. இந்நான்கையும் உருவாக்குவதிலும் இந்நான்கையும் முறையாக பயன்படுத்துவதிலுமே லெனினின் மேதாவிலாசம் வெளிப்பட்டது.

ருஷ்ய மாக்ஸிஸ்டுகளிடையே சிறுபான்மையாக்கப்பட்ட லெனின் மீண்டும் பெரும்பான்மை பலங்கொண்டு எழுந்தார். சோஷலிஸ அரசை நிறுவினார்.

லெனின் இளம் வயதிலேயே மரணமானார். குண்டு துளைக்கப்பட்ட நிலையில் அங்கங்கள் செயல்படாத நிலையில் கட்டிலுடன் அசையாது கிடக்க நிர்ப்பந்திக்கப்பட்ட லெனின் தான் மெள்ள, மெள்ள மீண்டும் சிறுபான்மையாக்கப்படுவதை உணர ஆரம்பித்தார்.

படுத்த படுக்கையாக இருந்து லெனின் சொல்லச் சொல்ல அவரின் துணைவியார் குரூப்ஸ்கயாவினாலும் அவரின் செயலாளரினாலும் எழுதப்பட்ட அவரின் கடைசி நூல்கள் இதற்குச்



சான்று பகரும். படுக்கையில் இருந்தபடியே அவர் ஸ்ராலினுடன் ஒரு கடுமையான உட்கட்சிப் போராட்டத்தை நடத்தினார்.

எந்தப் பிரச்சினைக்காக லெனின் ஸ்ராலினை முதன் முதலில் வியந்து கூறினாரோ, அதே பிரச்சினையை இட்டே லெனின் தனது மரணத்தறுவாயில் ஸ்ராலினுடன் மோதிக் கொண்டார். தேசிய இனங்களின் பிரச்சினை தொடர்பாகவே லெனினும் ஸ்ராலினும் முரண்பட்டுக்கொண்டார்கள். சிறுபான்மைத் தேசியங்களின் எதிர்கிளர்ச்சியை ஸ்ராலின் பலவந்தமாக அடக்கியதும், கூடிய உரிமை கேட்ட கொசாக்கிய, ஜோர்ஜிய கட்சிக்கிளைகளை ஸ்ராலின் தண்டித்ததுமே லெனினின் ஆத்திரத்துக்கான காரணமாகும். லெனினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு அங்கத்தவர் ஒருவரை லெனினின் ஆதரவாளர் ஒருவர் கை நீட்டி அடித்ததும், குரூப்ஸ்கயாவுடன் ஸ்ராலின் கடுமையாக நடந்து கொண்டதும் அப்போதைய நிகழ்வுகளாகும்

விடயம் இதுதான், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைகள தொடர்புபட்ட விடயத்தில் ஸ்ராலின் பெருந்தேச அகங்காரவாதம் கொண்டவர் என்பதுவும், முரட்டுத்தனமான அதிகாரப் போக்கு உள்ளவர் என்பதுவுமே ஸ்ராலின் பற்றிய லெனினின் கணிப்பீடாகும்.

ருஷ்யா சிதறிப் போய்விடுமோ என்ற பயமே லெனினின் மரணத்துக்கான உடனடி காரணம் எனவும் சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஸ்ராலினின் பின்னைய நடவடிக்கைகள் லெனினின் சிந்தனை முறைக்கு எதிரானதாகவே இருந்தது. லெனினால் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட நான்கு மந்திரக்கோல்களும் படிப்படியாக தமது சக்தியை இழக்க ஆரம்பித்தன.

1920ல் லெனினால் அறிமுகப்படுத்தப்பட்டு, பிரயோகமான புதிய பொருளாதாரக் கொள்கையை (5) 1930களில் ஸ்ராலின் எதுவித விமர்சனமும் இன்றி தூக்கியெறிந்தார். விவசாயிகளையும் ஏனைய சிறு உற்பத்தியாளர்களையும் பகைத்துக் கொள்ளாத முறையில் சோஷலிஸ பொருளாதாரத்துடன் அவர்களை இணைப்பது எவ்விதம் என்பதே புதிய பொருளாதாரக் கொள்கையின் இலட்சியங்களில் ஒன்றாக இருந்தது. ஜார் மன்னனை தூக்கி எறிவதற்கு மாத்திரமல்ல சோஷலிஸ

பொருளாதாரமும் தொழிலாளி விவசாயி ஐக்கியத்திலேயே உருவாக்கப்பட வேண்டும் என்பதுவே லெனினின் திடமான நம்பிக்கையாகும். ஆனால் ஸ்ராலினோ அரச மூலதன திரட்சியை சாத்தியப்படுத்துவதற்கான ஒரு மக்கள் கூட்டமே விவசாயிகளும், சிறு உற்பத்தியாளர்களும் எனக் கருதினார். சோஷலிஸ நிர்மாணத்தின் தேவைகள் விவசாயிகள் மேல் திணிக்கப்பட்டன. விவசாயிகளுக்கும் சோஷலிஸ நிர்மாணத்துக்கும் இடையேயான முரண்பாடுகள் படிப்படியாக வளர்ந்து வந்தது. விவசாயிகள் கம்யூனிஸ்ட் அதிகாரத்தை புதுவகை குலாக்குகளாக (நிலவுடமையாளர்களுக்கான ருஷ்யசொல்) நோக்க ஆரம்பித்தார்கள். புரட்சியில் ஈடுபட்ட பரம்பரையினர் கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்க்க மனமொப்பா விட்டாலும் புதிய பரம்பரையினர் கட்சியை எதிர்க்க புறப்பட்டார்கள். சிறுமுதலாளித்துவ சிந்தனாமுறை அவர்கள் மத்தியில் உள்ளூர இரகசியமாக சக்தியுடன் வளர ஆரம்பித்தது.

சோவியத் யூனியனை முழுமையாக எடுத்துக்கொண்டால் அது ஒரு விவசாய நாடேயாகும். சோவியத் யூனியனின் ஆசிய பகுதி குறிப்பாக மத்திய ஆசிய பகுதி மிகப் பின்தங்கிய விவசாய பிரதேசமேயாகும். இதனால் விவசாயிகள் மத்தியில் தோன்றிய அபிவிருத்தியானது பல இனக்குழுமங்களின் அதிருப்தியாகவே பரிணாமம் பெற்றது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக ஸ்ராலின் கடைப்பிடித்த கொள்கைகள் முரண்பாட்டை மேலும் வளர்த்தது - போல்டிக் குடியரசுகளை இரண்டாவது தடவையாகவும் ருஷ்யா தன்னுடன் சேர்த்துக் கொண்டதை போல்டிக் மக்கள் விரும்பவே இல்லை. 1956 ல் ஹங்கேரியில் ருஷ்யாவிற்கு எதிராக தோன்றிய எதிர்ப்புரட்சியை ருஷ்ய செம்படை அடக்கிய முறை அனைத்துக் குடியரசுகளையும் விழிப்படைய வைத்தது.

ஸ்ராலின் காலத்தில் சோவியத் பொருளாதாரம் தனது வளர் நிலையில் இருந்ததன் காரணத்தாலும், 2ம் உலக யுத்தத்தின் பின் சகல ஏகாதிபத்தியங்களும் தமது உள்நாட்டு பிரச்சினைகளிலேயே அதிகம் மூழ்கி இருந்ததாலும் ருஷ்யாவின் உள் முரண்பாடுகள் முடங்கிப் போயிருந்தன.

2ம் உலக யுத்தத்தின்போது, ருஷ்ய குடியரசில் இருந்த சிறுபான்மை இனக்குழுமங்களிலும் ருஷ்ய இனக்குழுமத்திலும் இருந்து ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்த்த இராணுவம் தோன்றியிருந்தது. ருஷ்ய தேசிய மக்கள் இராணுவம் (RNPA), ருஷ்ய விடுதலை மக்கள் இராணுவம் (RLPA), ருஷ்ய விடுதலை இராணுவம் (RLA) ஆகியவையே இவையாகும். இவற்றில் RLA இடம் விமானப்படை கூட இருந்துள்ளது. இதைவிட கொசாக்கியர்கள் தமக்கென்று ஒரு தனியான படைப்பிரிவையும், எஸ்ரோனியாவில் மூன்று படைப்பிரிவுகளும், லத்வியனில் இரண்டு படைப்பிரிவுகளும் செயற்பட்டன. இவர்கள் ஹிட்லரின் படையுடன் நட்பைப் பேணிக் கொண்டாலும் தனித்தனி படைப்பிரிவுகளாகவே செயற்பட்டன. இப்படைகளின் தளபதிகளில் அநேகர் முன்னைய செப்படை தளபதிகளாக இருந்தவர்களாகும். இதில் RNPA மாத்திரம் 4 லட்சத்துக்கும் 6 லட்சத்துக்கும் இடைப்பட்ட தொண்டர்களைக் கொண்டதாக இருந்துள்ளது. தோற்கடிக்கப்பட்ட வர்க்கங்களும், கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாட்டுடன் முரண்பட்ட மக்களுமே இவ்விதமான படையணியாக திரண்டுள்ளார்கள். கம்யூனிஸ்ட் ஆட்சி வீழ்த்தப்பட்டபின் ஜேர்மனியின் ஆதரவுடன் ஆட்சி அமைப்பதற்கான தயாரிப்புகளும் இவர்களிடம் இருந்தது.

வெளிவந்த எதிர்ப்புகள் அடக்கப்பட்டன. யுத்தம் முடிந்து இப்படைகள் தோற்கடிக்கப்பட்டு கலைக்கப்பட்ட பின்பும் நாடு எங்கணும் ஜேர்மனிய ஒற்றர்களுக்கு எதிரான களையெடுப்பை ஸ்ராலின் கொண்டு நடத்தினார். கட்சிக்குள்ளும் இது நடைபெற்றது. ஸ்ராலினால் முன்வைக்கப்பட்ட சகல உற்பத்திசாதனங்களையும் அரசு உடமையாக்கல், நடுவிய திட்டமிடல், பாரிய கைத்தொழிலுக்கே முதன்மை, அரசியல்- இராணுவ அமைப்பைப் பலப்படுத்தலையே முதன்மையாக கொள்ளல் போன்ற ஸ்ராலினின் கொள்கையுடன் முரண்பட்டவர்களுங்கூட ஜேர்மனிய ஒற்றர்களாக்கப்பட்டார்கள்.

ஜேர்மனியைத் துண்டாடல் - இதன் சூத்திரதாரி ஸ்ராலினேதான் என்பது தற்போது நிருபணமாகியுள்ளது - போல்டிக் குடியரசுகளை கட்டாயமாக இணைத்தல், இழக்கு ஐரோப்பிய நாடுகளை சோவியத்தின் காவலரண்களாக மாற்றல், மொஸ்கோவை ஒரு அனைத்து வல்லமைமிக்க கேந்திரமாக உருவாக்குவதன் மூலம் அனைத்து குடியரசுகளும் மொஸ்கோவில் தங்கியிருத்தல் போன்ற தேசிய இன உரிமைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் பொறுமையுடன் சகித்

துக் கொள்ளப்பட்டன. சகித்துக் கொள்ளப் பழக்கப்படாதவர்கள் குற்றவாளிகளாக காணப்பட்டார்கள்.

இந்நிலைமைகளின் காரணத்தால் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இயல்பான தலைவன் என்ற பாத்திரத்தை இழந்தது ஓய்வொழிச்சலற்ற சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் லெனினால் வளர்க்கப்பட்ட கட்சிக்குள் சித்தாந்தப் போராட்டமே சீல் வைக்கப்பட்டது. லெனினுக்கும், ஸ்ராலினுக்கும் துதிபாடுவதும் மத்திய கமிட்டி என்ற பெயரால் ஸ்ராலினால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்களை அப்படியே ஏற்றுக் கொள்வதுமே கட்சி அங்கத்தவர்களின் செயற்படு முறையாகியது.

இரண்டாவது சர்வதேசியத்தின் (இன்ரநாஷனலின்) தலைவன் என்ற முறையில் ஸ்ராலின் தனது விருப்பை ஏனைய கட்சிகள் மீதும் செலுத்தினார்.

கட்சி - கே. ஜி. பி. - உயர் அதிகாரிகள் ஆகிய மூவரும் இணைந்த ஒரு முக்கூட்டு அதிகாரத்துவம் தோற்றுவிக்கப்பட்டது. கட்சி அங்கத்தவர்களையே கே. ஜி. பி. உளவுபார்க்கும் பரிதாபகரமான நிலைமை தோன்றியது.

அனைத்து வழிகளிலும் சோவியத் யூனியனின் வெற்றி கொடிகட்டிப் பறந்ததாலும், ஏகாதிபத்தியம் தனது வாலை முடக்கிக்கொண்டு இருக்கவேண்டிய நிலை தோன்றிய படியாலும் சோவியத் யூனியனுள் வளர்ந்து வந்த இந்த தீயபூதங்களை யாருமே கண்டு கொள்ளவில்லை அவ்விதம் கண்டு கொண்டவர்களாலும் கூட இதை எதிர்த்து எதுவுமே செய்ய முடியவில்லை. பல புத்திஜீவிகள் அப்போதைய நிலைமை சம்பந்தமாக முன்வைத்த விமர்சனங்களும், மதிப்பீடுகளும் பிற்காலத்தில் நிறையவே உதவியாக அமைந்துள்ளன.

1960 களுடன் இராணுவ மேலாதிக்கத்தையும், விண்வெளி நடவடிக்கைகளையும் தவிர்ந்த ஏனைய அனைத்து வழிகளிலும் சோவியத் யூனியன் கிடுகிடுவென சரிய ஆரம்பித்தது. 30 க்கும் குறைவான வருடங்களில் அனைத்து அடைவுகளும் வெற்றிகளும் தவிடு பொடியாகிப் போகுமோ என்று கருதும் அளவிற்கு வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது.

இன்று சோவியத் யூனியனில் லெனின் மீளவும் மிகச் சிறுபான்மையாகிவிட்டார். அதாவது போல்ஷ்விக் ஆகிவிட்



டார். இது இரண்டாவது தடவையா அல்லது மூன்றாவது தடவையா என்பதே ஒரு கேள்வியாகும். ஸ்ராலினையும் கொர்பச்சேவையும் பொறுத்த முடிவுகளே இதற்கான பதிலைத்தரும். இதைப் பொறுத்தே போல்ஷ்லிக் லெனின் மீளவும் ஆட்சி அமைப்பாரா என்பதையும் கணக்கிட முடியும்.

ஸ்ராலின் பற்றிய மதிப்பீடு

ஸ்ராலின் உயிருடன் இருக்கும் காலத்திலேயே ஸ்ராலின் பற்றிய வாதவிவாதங்கள் உலகின் அனைத்து நாடுகளிலும் முனைப்பாக நடைபெற்றன. ஆனால் அவர் உயிரோடிருந்த காலத்தில் அவரின் நடவடிக்கைகள் அடிப்படையில் சரியானவை என ஏற்றுக் கொண்டதன் பின்னரே விவாதங்கள் நடை பெற்றது. 2ம் உலக யுத்தத்திற்கு முன்னர் முதலாளித்துவ உலகம் அவரைத் தூற்றுவதிலும் அவரின் நடவடிக்கைகளை பாதக கண்ணோட்டத்துடனும், அவநம்பிக்கை நோக்குடனும் (Negative attitude) விமர்சிப்பதிலுமே காலங்கடத்தினர். சோவியத் யூனியனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஜேர்மனியும், இத்தாலியும் பாஸிஸ அரசுகளாக வளர்வதை வரவேற்றனர். ஆனால் இந்நாடுகளின் வளர்ச்சி தமக்கே ஆபத்தானது என்பதை தெரிந்து கொண்ட பிறகு நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. ஜேர்மனிக்கு எதிராக ருஷ்யாவுடன் நட்புக் கொண்டார்கள். ஸ்ராலினைப் பற்றி வெளிப்படையாகத் தூற்றுவதை நிறுத்தினார்கள். பல ஏகாதிபத்திய நாடுகளின் மக்கள் மத்தியில் ஸ்ராலின் பற்றிய நல்லெண்ணம் தோன்ற ஆரம்பித்தது.

ஸ்ராலின் ஒரு தனிநபரல்ல. அவர் என்றுமே ஒரு தனிநபர் தலைவராக இருந்தவருமல்ல. அவர் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அமைப்பு ரீதியான தலைவராகும். 1வது உலக யுத்தத்தில் இருந்து 1960ம் ஆண்டுகள் வரை சோஷலிஸம் தனது வளரும் திசையிலும் ஏகாதிபத்தியம் தனது வீழ்ச்சித் திசையிலும் இருந்தது. உலகின் பல நாடுகளிலும் கம்யூனிஸ இயக்கம் வீறுடன் வளர்ந்து வரும் நிலையில் இருந்தன. பல வெற்றிகளையும் சாதித்தது. சீன கம்யூனிஸ்ட் கட்சி, வியட்நாம் தொழிலாளர் கட்சி, இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள், துருக்கிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இதற்கு சில உதாரணங்களாகும். 1ம் உலக யுத்தத்துடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பலவீனமடைந்து விட்டாலும் அதற்கு முன்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் சக்திமிக்கதாகவே திகழ்ந்தது.

1ம் உலக யுத்தத்துடன் தேசிய இயக்கங்களும் வீறு பெற்று எழுந்தன. பெரும்பான்மையான லத்தீன் அமெரிக்க நாடுகளைத் தவிர உலகின் ஏனைய அனைத்து நாடுகளும் கம்யூனிஸ்ட் கட்சியினதோ, அல்லது தேசிய இயக்கங்களினதோ அல்லது இரண்டினதுமோ செல்வாக்கு மிகுந்ததாகவே இருந்தது. சோவியத் யூனியனும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான ஸ்ராலினும் உலகில் உள்ள அனைத்து மக்களாலும் நேசிக்கப்பட்டார்கள். ஏகாதிபத்தியங்கள் எங்கும் அவமானப்பட்டு நின்றன. அதுவும் குறிப்பாக பாஸிஸத்திற்கு எதிரான யுத்தத்தின் போது உலக மக்கள் சோவியத் யூனியன் பக்கமே நின்றார்கள். இதனால் ஏகாதிபத்தியங்களும் விட்டு விலக முடியாமல், தவிர்க்க முடியாமல் சோவியத் யூனியன் பக்கமே நின்றன. பொருளாதார ரீதியில் சோவியத் யூனியன் ஈட்டிய வெற்றிகளும், இராணுவ ரீதியில் சோவியத் யூனியன் வெளிப்படுத்திய வீரமும் விவேகமும் மிக்க பங்களிப்புகளும் முதலாளித்துவத்தையே வாயடைக்கப் பண்ணின. சோவியத் யூனியனின் வெற்றி உலக மக்களினதும் குறிப்பாக சோவியத் மக்களினதும் வீரத்தினதும், தியாகத்தினதும் வெற்றியே யாகும்.

ஸ்ராலின் இந்த வெற்றிகளை துஸ்பிரயோகம் செய்து விட்டாரா? தன்னிச்சைப் போக்கில் நடந்து சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோஷலிஸ நிர்மாணத்தின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவித்து விட்டாரா? ஆம் என்றே பதில் கூறவேண்டியுள்ளது.

இதுபற்றி முன்பே அவதானித்தோம், கம்யூனிஸ்ட் கட்சிக்குள் கருத்துவேறுபாடு வளர்வதையும், அரசியல் கருத்துப் போராட்டம் நடைபெறுவதையும் ஸ்ராலின் தடுத்துவிட்டார். தனது கருத்தை எதிர்க் கேள்வியின்றி எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற பாணியில் நடந்து கொண்டார். சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுள் தோன்றும் எதிர்க்கருத்தை அடக்கினார். அவ்விதமானவர்கள் எதிர் புரட்சியாளர்கள் என முத்திரை குத்தப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டார்கள் அல்லது உழைப்பு முகாம்களில் அடைக்கப்பட்டார்கள், சில வேளைகளில் மரண தண்டனையும் விதிக்கப்பட்டார்கள். உட்கட்சிப் போராட்டத்திற்கு பதிலாக கட்சிக்குள் களை எடுப்புகளே அடிக்கடி நடை பெற்றன.



வெளிநாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் முரண்பட்ட கருத்துகளையிட்டு மௌனம் சாதித்தார். கம்யூனிஸ்ட் இன்ரநாஷனலிற்குள் இது தொடர்பான வாதவிவாதம் வருவதை தடுத்து நிறுத்தினார்; பூசிமூடினார். சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாட்டை இதற்கோர் உதாரணமாகக் கூறலாம்.

சீன முதலாளித்துவ கட்சியான சியாங்கேசெக்கின் தலைமையிலான கொமின்ராங்குடன் ஒரு மிதவாத உறவைப் பேண வேண்டும் என்றோர் அணியை சீனக்கம்யூனிஸ்ட்கட்சிக்குள் வளர்த்தார். மாசே துங் தலைமையிலான அணி இவ் அணியைத் தூக்கி எறிந்தது. இவ் வழி தவறானது என்பதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சித்து நிராகரித்தது. இது சீனப்புரட்சி தொடர்பான ஸ்ராலினின் மார்க்கத்துக்கு கிடைத்த தோல்வியாகும். ஸ்ராலின் தனது நிலைப்பாட்டையிட்டு சுயவிமர்சனம் செய்யவும் இல்லை. சீனகம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒரு தத்துவார்த்த விவாதத்தை நடத்தவும் இல்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்ராலினின் இக் கருத்து தவறு என்பதை நடைமுறையில் நிரூபித்துக் காட்டியது. ஆனால் ஸ்ராலின் தனது கருத்தைத் திருத்திக் கொள்ளவில்லை. ''தேசிய முதலாளித்துவம்'' பற்றிய ஸ்ராலினின் இந்த தவறான கருத்துத்தான் இந்திய, இந்தோனேசிய-மலேசிய, கிரேக்க, எகிப்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது. அதேபோல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வீழ்ச்சிக்கும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வீழ்ச்சிக்குமான காரணமும் இதுதான். 1965ன் பின்புதான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்முயற்சியினால் இது தொடர்பான பகிரங்க விவாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இன்னோர் உதாரணம் 1930 களிலேயே மா-சே-துங் இயக்கவியல் தொடர்பான ஸ்ராலினின் கருத்துக்கள் இயக்கவியல் வகைப்படாதது என ஓரளவு பகிரங்கமாகவே விமர்சித்தார். 'முரண்பாடுகள் பற்றி', 'நடை முறையற்ற' என்ற மா-சே-துங்கின் மெய்யியல் படைப்புக்கள் ஸ்ராலினின் கருத்து தொடர்பான விமர்சனமேயாகும். ஸ்ராலின் இந்த விடயத்தை அப்படியே அடக்கிவிட்டார். 30 வருடங்கள் கழித்தே உலக கம்யூனிஸ இயக்கம் இந்த விடயத்தை அறிந்து கொண்டது.

வேறோர் உதாரணம், யுக்கோஸ்லோவியாக்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்ராலினிய சோஷலிஸ நிர்மாணபாதையை விமர்சித்தது, அப்பாதையுடன் முரண்பட்டது, தமது சொந்த

நாட்டில் அவ்வழியை பின்பற்ற தயங்கியது. ஸ்ராலின் அப்பிரச்சினையை விவசதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. யுக்கோஸ்லோவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கு எதிராக சதிசெய்தார். கொமின்ரேணின் - கம்யூனிஸ்ட் இன்ரநாஷனல் தலைமைப் பதவி தன்னிடம் உள்ளதை வாய்ப்பாகப் பயன்படுத்தி வெறுமனே மத்திய கமிட்டி அங்கத்தவராய் இருந்த டிட்டோவை கட்சியின் தலைவராக நியமித்தார். கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பாஸிஸ ஏஜென்டுகள் என்ற பெயரில் சிறைக்கனுப்பப்பட்டனர். எவ்விதமும் கட்சி ஸ்ராலினின் பாதையை ஏற்காதபடியால் அதே டிட்டோ பின்பு ஸ்ராலினுடன் முரண்பட்டார். பொருளாதார வடிவமைப்பு சம்பந்தமான புதிய ஒருவடிவத்தை தனது நாட்டில் அமுல் படுத்தினார்.

மற்றோர் உதாரணம் ஹங்கேரி தொடர்பு பட்டதாகும். 1949-ல் ஹங்கேரியன் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்துக்கு வந்தது. 1956-ல் ஹங்கேரியன் அரசிற்கு எதிரான ஒரு பரந்த கிளர்ச்சி ஏற்பட்டது. சோவியத் செம்படையால் இக் கிளர்ச்சி அடக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஹங்கேரிய விவசாயிகள் அரசாங்க நிலங்களில் வேலை செய்ய மறுத்தார்கள். இக் கிளர்ச்சிக்கு சில வருடங்கள் முன்னதாகவே ஹங்கேரியன் புத்திஜீவிகள் லெனினின் புதிய பொருளாதார கொள்கையைத் தழுவிய ஒரு பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்தார்கள். ஆனால் ஸ்ராலின் இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அன்று ஹங்கேரியன் பிரச்சினையை சரியாக ஆராய்ந்து படித்திருந்தால் இன்று சோவியத் யூனியனில் எதிர்புரட்சி தோன்றுவது தடுக்கப்பட்டிருக்க வாய்ப்புக்கள் உண்டு. இராணுவ அடக்கு முறை மூலம் மிகச் சுலபமாகத் தீர்க்கப்பட்ட பிரச்சினை இன்று பூதாகரமாக வெடித்து விட்டது.

ஸ்ராலினின் தலைமையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி-பாட்டாளிவர்க்க கட்சிக்குரிய தன்மையை இழந்து அரச அமைப்பின் உச்சத்தில் இருக்கும் ஒரு அதிகார அமைப்பாக மாறியிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் அரசியல் மயப்படுத்தலின் மூலம் தமது ஆணையை செல்லுபடியானதாக்கும் ஆற்றலை இழந்து காணப்பட்டார்கள். அதிகாரத்துவ கட்டளைகள் பிறப்பிப்பதன் மூலமும் நிர்வாக ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் மட்டுமே தமது காரியங்களை நிறைவேற்ற கூடியவர்களாக பலவீனப்பட்டு விட்டார்கள். கே.ஜி.பீ. இல்லாமல் கட்சியால் உயிர் வாழ முடியாது என்ற நிலை தோன்றியிருந்தது.



ஆனாலும் கட்சி இன்னும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாகவே இருந்தது. தனது தவறுகளை திருத்திக் கொள்ளும் ஆற்றல் கட்சிக்குள் காணப்பட்டது. ஸ்ராலின் ஒரு எதிர்புரட்சியாளனல்ல, ஒரு மாக்ஸிய எதிர்ப்பாளனுமல்ல. கட்சி பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை என்பதை தவறாக புரிந்து கொண்ட ஒரு மாக்ஸிஸ்ட் - லெனினிஸ்டாவார். சர்வ வல்லமை பெற்ற ஒரு முன்னணிப் படையால் வரலாற்றை கம்யூனிஸம் வரை இழுத்துச் செல்ல முடியும் என்றும், தானே அச் சர்வ வல்லமைபெற்ற முன்னணிப் படையின் கேள்விக்கிடமற்ற தலைவன் என்றும் நம்பினார். ஆனால் தனக்கே உரிய இயல்பான விதிப்படி இயங்கி அவரையும், அவரின் உயிருக்குயிரான லட்சியத்தையும், அவரை நம்பியவர்களையும் தண்டித்துவிட்டது. தண்டனை பாரதூரமானளவு கூடித்தான் விட்டது. என்ன செய்வது அதுதான் வரலாறு.

சோவியத் யூனியன் வீழ்ச்சிக்கான மற்றோர் காரணம் அதிகரித்து வந்துள்ள அதன் இராணுவ செலவீனமாகும். உலகளாவிய நிலையில் தாக்குதல் தகமைபெற்ற அமெரிக்காவுக்கு சமதையான ஒரு இராணுவ தாக்குதல் வடிவமைப்பை உருவாக்கியிருந்தது இதற்கான காரணமும் ஸ்ராலின் மீதே சுமத்தப்படுகின்றது, ஸ்ராலின் காலத்தில் அமெரிக்க - சோவியத் பனிப்போர் யுத்த நிலைமை இருக்கவில்லை. ஆனால் ருஷ்யாவை தாக்குவதிலும், கம்யூனிஸத்தை எதிர்ப்பதிலும் முதலாளித்துவ நாடுகள் அக்கறை செலுத்தி வந்தன, இதற்காக இராணுவ ரீதியில் தம்மைத் தயார்படுத்தி வந்தன. இந்த நிலையில் பாரிய தற்பாதுகாப்பு வடிவமைப்பு ஒன்று சோவியத் யூனியனுக்கு அவசியப்பட்டது வாஸ்தவமானதே ஸ்ராலின் அந்தப் பங்கைச் சரியாகச் செய்துள்ளார். ஆனால் ஸ்ராலினுக்கு பின்பே இந்த தற்பாதுகாப்பு தாக்குதல் வடிவமைப்பாக வளர்ச்சி பெற்றது என்பது உண்மையானாலும் இதற்கான மார்க்கத்தையிட்டது ஸ்ராலினேயாகும். சோவியத் யூனியன்தான் உலக புரட்சிகர இயக்கத்தின் முன்னணி பாதுகாவலன் என்றும், சோவியத் யூனியனின் நலன்தான் சர்வதேசிய பாட்டாளிவர்க்க நலன் என்றும், சிந்திக்கும் அத்திவாரம் ஸ்ராலின் காலத்திலேயே ஆரம்பித்து விட்டது. ஸ்ராலினே இக்கேடுகெட்ட நடைமுறையின் தந்தையாகவும் இருந்துள்ளார். போல்டிக் குடியரசுகளை கட்டாயமாக இணைத்துக் கொண்டது, கிழக்கு ஐரோப்பிய நாடுகளை சோஷலிஸ நாடுகளாக புகையூட்டி பழுக்க வைத்தது, ஜேர்மனியை இரண்டாகப் பிரிப்பதற்கு துணைபோனது, இஸ்ரவேலின் தோற்றத்திற்கு விட்டுக் கொடுத்தது போன்றவற்றை சில

உதாரணங்களாக குறிப்பிடலாம். சோவியத் யூனியன் 60களில்
சமூக ஏகாதிபத்தியம் என்ற நிலைக்கு வளர்ந்து வருவதில்
ஸ்ராலினின் நடவடிக்கைகளே கால்கோளாக அமைந்தன என்
றால் அது ஒன்றும் தப்பாக மாட்டாது.

சோவியத் யூனியனின் இராணுவ கட்டமைப்பு பூதாகர
மாக வளர்ச்சியடைந்ததற்கு புறநிலைமைகள் மட்டும் காரண
மல்ல. அதற்கான அகநிலைக் காரணமே அடிப்படையானதா
கும். சோவியத் யூனியனுள் கட்சி - இராணுவ அரச இணைக்
கூட்டு ஆதிகாரத்துவம் ஒன்று துரிதமாக வளர்ச்சி பெற்றது.
கட்சியின் மத்திய கமிட்டியே - 1930களில் ஸ்ராலின் மாத்திரம்
தனியாக — இவ் அதிகாரத்துவத்தின் நடுவ சக்தியாகவும்,
கே. ஜி பி. யே. இதன் பிரதான கைப்பிரம்பாகவும் இருந்
தது. சோவியத் பிரஜைகளே கண்டு அஞ்சும் அளவிற்கு கே.
ஜி. பி. யின் செயற்பாடுகள் வளர்ச்சியுற்றன. மக்கள் மேல்,
குறிப்பாக புத்திஜீவிகள் மேல் சுமத்தப்படுவதற்கு ஜேர்மனிய
ஒற்றர்கள், குலாக்குகளின் ஆதரவாளர்கள், எதிர்ப் புரட்சியா
ளர்கள் முதலாளித்துவ மீட்பாளர்கள், குறுந்தேசிய வாதிகள்,
சிறு முதலாளித்துவ மனிதாபிமானிகள் போன்ற பல்வேறு குற்
றச் சாட்டுகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

மக்களை ஸ்தாபனப்படுத்துவதன் மூலம் இரு பெரும் புரட்
சிகளையும், பல யுத்தங்களையும் நடத்தி முடித்த சோவியத்
யூனியனில் எதிரிகளுக்கு எதிராக மக்கள் விழிப்பூட்டப்பட
வில்லை. எதிரிகளை இனங்கண்டு அவர்களைக் கண்காணிக்
கும் நிலைக்கு மக்கள் வளர்த்தெடுக்கப்படவில்லை. மாறாக
மக்கள் ஒதுக்கப்பட்டார்கள். அவர்களே சந்தேகக் கண்
கொண்டு நோக்கப்பட்டார்கள்.

முதலாளித்துவ மீட்பாளர்களை இனங்காண்பதில் அபார
வெற்றிகளைப் பெற்ற சீனாவின் மகத்தான கலாச்
சாரப் புரட்சியை கே. ஜி. பி யின் நடவடிக்கையுடன் ஒப்
பிட்டுப் பார்ப்பது இந்த இடத்தில் அவசியமானது. கலாச்
சாரப் புரட்சி சீனாவில் இருந்த முன்னைய வர்க்க விரோ
திகளின் மிதமிச்சங்களையும், சீனப் புத்திஜீவிகள் மத்தியில்
தோன்றிய முதலாளித்துவ மீட்பாளர்களையும் சீன சமூகத்
தில் இருந்தே களைபிடுங்குவதற்காக நடத்தப்பட்ட ஒரு வெகு
ஜன இயக்கமாகும். கட்டாய வேலை முகாம்களும், இரகசிய
மூளைச் சலவைகளும், இரும்புத்திரை விசாரணைகளும் இங்கு
நடைபெறவில்லை. கலாச்சார புரட்சி பல குறைபாடுகளைக்



கொண்டிருந்தாலும் சீனாவில் அதிகாரத்துவம் வளர்வதைத்
தடுப்பதில் அது கணிசமான பங்கு வகித்துள்ளது.

ஸ்ராலினின் நோக்கம் நல்லதாக இருக்கலாம், அவர்
காலத்தில் அவர் அடைந்த அடைவுகள் மகத்தானவையாக
இருக்கலாம் ஆனால் இவற்றை அடைவதற்காக அவர் உரு
வாக்கிய சமூக நிறுவனங்களும், வேலைப்பாணிகளும் சிந்தனா
முறைகளும் சோஷலிஸத்தை எதிர்க்கும் அணியினரின் வளர்ச்
சிக்கே உதவி புரிந்தன.

ஸ்ராலின் லெனினை சிறுபான்மையினன் ஆக்கவில்லை.
ஸ்ராலினின் தவறுகள் மாக்ஸிஸ - லெனினிஸ விலகல்களா
கவே இருந்தன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவி
யத் மக்களும் - குறிப்பாக ருஷ்ய தொழிலாளர்களும் - லெனினை
சிறுபான்மையினன் ஆக்கும் போக்கை எதிர்த்தார்கள்.

ஆனால், ஸ்ராலின் மறைய குருஷ்சேவ் அதிகாரத்திற்கு
வந்ததுடன் லெனினை சிறுபான்மையினன் ஆக்கும் போக்கு
உத்தியோக பூர்வமாக ஒரு அரசியல் போக்காக ஆரம்பித்து
வைக்கப்பட்டது. பிரஷ்நோவின் அதிகாரத்தில் லெனின்
சிறுபான்மையினன் ஆக்கப்பட்டுவிட்டார். அந்த வரலாற்றுச்
சோகம் பிரஷ்நோவின் காலத்திலேயே நடந்தேறிவிட்டது.
அப்படியிருந்துங்கூட வெளிப்படையாக லெனினுக்கு எதிராக
போர்க்கொடி தூக்க முடியவில்லை லெனினின் புரட்சிகர
அம்சங்களை நீக்கிவிட்டு லெனின் ஒரு ''நல்ல கதாநாயக
னாக,'' ''நவீன கடவுளாக'' ஆக்கப்பட்டார். லெனினின்
துதிபாடல்கள் தாராளமாகவே நடக்க ஆரம்பித்தன, இதை
நோக்கமாகக்கொண்டு ஏராளமான நூல்கள் புற்றீசல்போல்
வெளிவந்தன. லெனினைத் துதிபாடிய வண்ணமே லெனினி
ஸத்திற்கு எதிரான போக்குகள் வளர்ச்சி பெற்றன.

ருஷ்ய பேரகங்காரவாதம் சோவியத் யூனியனில் அரசகட்
டில் ஏறியது ருஷ்யா மீண்டும் தேசிய இனங்களின் நவீன
சிறைக் கூடமாக மாற்றம் பெற ஆரம்பித்தது. மொஸ்
கோவை மையப்படுத்தி உருவாகியிருந்த அதிகார அடுக்கு
இதற்கு துணை நின்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கியூபா,
அங்கோலா, வியட்நாம், கம்பூச்சியா போன்ற நாடுகள் ருஷ்
யாவின் ந.. - சோஷலிஸ' காலனியாக மாற்றமுற்றன.
சோவியத் யூனியனின் விவசாயிகள் சுரண்டப்பட்டார்கள்.
அவர்கள் மீ.. அடக்கு முறைகள் மேலும் ஏவிவிடப்பட்டது.

ருஷ்ய அதிகாரத்துவ அடுக்கு புதியதோர் சுரண்டும் வர்க்க
மாக மாறியது தொழிலாளர்களின் உபரி உழைப்பை தனி
நபர்கள் என்ற முறையில் நேரடியாக அபகரிப்பதுதான் அங்கு
தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால், சோஷலிஸத்தின் பெய
ரால் அரசால் சுவீகரிக்கப்பட்ட உபரி உழைப்பை அதிகாரி
கள் சுகமாக அனுபவித்தார்கள். மீளவும் ஒரு புரட்சியின்
றேல் இந்த அதிகாரத்துவ படையை தூக்கி எறிவது சாத்
தியமில்லை என்றோர் நிலை தோன்றியிருந்தது

குருஷ்சேவ் ஸ்ராலினுக்கு எதிராக நடத்திய போராட்டத்
தின் போது இந்த அதிகார அடுக்கு தூக்கி எறியப்பட
வில்லையா?

நிச்சயமாக இல்லை என்றே கூறவேண்டும். ஸ்ராலினின்
அதிகாரத்துவ போக்கையும், கட்சிக்குள்ளான அவரின் எதேச்
சதிகாரத்தையும் குருஷ்சேவ் சடுமையாக சாடினார். கட்சிக்களை
யெடுப்பு என்ற பேரிலும், எதிர்ப் புரட்சியை அடக்கல் என்ற
பெயரிலும் ஸ்ராலினால் மேற்கொள்ளப்பட்ட மனித வதை
களை புட்டுக்காட்டினார். ஸ்ராலினின் நடவடிக்கைகளைத்தான்
இவர் எதிர்த்தாரே தவிர, ஸ்ராலினால் உருவாக்கப்பட்ட முற்று
முழு ஆதிக்க அரச கட்டுமாணத்தை விமர்சிக்கவில்லை. அதே
முற்றுமுழு ஆதிக்கவாத யந்திரத்தை தான் இயக்க ஆரம்பித்
தார். உட்கட்சிப் போராட்டத்திற்கு பதிலாக ஸ்ராலினால்
அறிமுகப்படுத்தப்பட்ட "களை எடுத்தல்" நடவடிக்கையை
தானும் தொடர்ந்தார்.

ஸ்ராலினின் ஆதரவாளர்கள் "களையெடுக்கப்பட்டார்
கள்", கட்சி தூய்மைப்படுத்தப்பட்டது. ஸ்ராலின் சோவியத்
யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியானதுபாட்டாளிவர்க்க கட்சி என்
பதில் மிக அழுத்தமாக இருந்தார், குருஷ்சேவ் சோவியத்
கம்யூனிஸ்ட் கட்சி இனியும் பாட்டாளிவர்க்க கட்சியாக இருக்க
வேண்டிய அவசியமில்லை என்ற வாதத்தை முன்வைத்தார்.
சோவியத் யூனியனில் வர்க்கங்கள் மறைந்தொழிந்து விட்
டன, ஆகவே இனியும் பாட்டாளிவர்க்க கட்சியொன்று அவ
சியமில்லை என்பதே குருஷ்சேவின் கருத்தாக இருந்தது.
அதாவது குருஷ்சேவ் கம்யூனிஸ்ட் கட்சியை சோவியத் 'தொழி
லாளிவர்க்கத்திடம் இருந்து பிரித்தெடுக்கமுயன்றார் "முழு மக்
களின் கட்சி" அமைப்பது என்ற பெயரில் அதிகாரத்துவ வாதி
களின் கட்சியை கட்டி வளர்க்கும் முயற்சியில் முனைப்புடன்
ஈடுபட்டார். ஸ்ராலின் காலத்தில் மாக்ஸிஸ - லெனினிஸ வில



கல் தவறாக இருந்த செயற்பாடுகள் குருஷ்சேவின் காலத்தில்
மாக்ஸிஸ - லெனினிஸ விரோதத்தன்மை கொண்ட செயல்பாடு
களாக மாற்றமடைந்தது. இதைச் செய்யவேண்டுமானால்
குருஷ்சேவ் ஸ்ராலினையும், ஸ்ராலின் ஆதரவாளர்களையும்
தூக்கி எறிய வேண்டியிருந்தது. இதைச் செய்வதன் மூலம்
குருஷ்சேவ் மாக்ஸிஸ - லெனினிஸத்தையே சோவியத் கம்யூ
னிஸ்ட் கட்சியில் இருந்து தூக்கி எறிய முற்பட்டார்.

குருஷ்சேவ் தனது இலட்சியத்தில் கணிசமானளவு வெற்றி
யீட்டினார் குருஷ்சேவின் தலைமையில் ஒரு ஆழ்ந்த செல்வாக்கு
மிக்க எதிர்ப்புரட்சி ஒன்றுக்கான பலமான அடித்தளம் இடப்
பட்டது. சோஷலிஸ நிர்மாணத்தின் தலையாய அடிப்படை
யான அம்சமாய் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளேயே
அந்த எதிர்ப் புரட்சி இடம் [பெற்றது, கட்சிக்குள் லெனின்
இரண்டாவது தடவையாகவும் போல்ஷ்லிக் ஆனார்.

குருஷ்சேவ் ஆரம்பித்து வைத்த முயற்சியை யெல்ஸ்ரின்
முடித்து வைத்துள்ளார்.

குருஷ்சேவ்வில் இருந்து யெல்ஸ்ரின் வரையான சுமார் 25
வருடகால அரசியல் காலகட்டத்தை ருஷ்யாவின் எதிர்ப் புரட்
சிகர காலகட்டம் என அழைக்கலாம். இந்த காலகட்டத்தில்
ருஷ்யாவினுள் நிலவிய அரசியல் முரண்பாடுகள் யாவை? என்
னென்ன வகைப்பட்ட அரசியல் அணிகள் அங்கு செயற்பட்
டன? இக் காலகட்டத்தில் நிலவிய அரசியல் ஏற்ற இறக்கங்
கள் எவை? இவ் எதிர்ப்புரட்சி, இவ்வளவு காலம் நீடித்ததற்
கான காரணம் என்ன? இவ் எதிர்ப் புரட்சியில் கொர்பச்சேவின்
பங்கு எவ்விதமானது என்பவை ஆராயப்பட வேண்டிய
விடயங்களாகும்.

# சீனாவின் அரசியல் நிலைமைபற்றி சிலீபெங்

"சண் ஒப்வ் மெக்சிக்கோ" என்ற மெக்சிக்கன் செய்திப்பத்திரிகைக்கு 1991 - மே - 30ல் வழங்கிய பேட்டியின் சில பகுதிகள்:-

**புதிய தலைமை நிலையானதாகவே உள்ளது.**

**கேள்வி:-** சில மேற்கத்தைய தொடர்புசாதனங்கள் நிலைமை பற்றிய முரண்பாடான அறிக்கைகளைத் தருகின்றன. இது தொடர்பாக உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:-** நீங்கள் சீனாவில் ஒரு நீண்ட காலத்திற்கு இருப்பீர்களானால் உங்களால் உங்கள் சொந்த முடிவிற்கு வந்து சேரமுடியும் சீனாவின் அரசியல் நிலைமை நிலை தழம்பாததாகவே உள்ளது. சீனாசமதர்மத்தை நடைமுறைப் படுத்துவதைச் சீனாவின் அரசியல் யாப்பு வலியுறுத்துகிறது சீனப் பொதுவுடமைக் கட்சிதான் சீனாவின் அபிவிருத்தியின் தலைமைச் சக்தியாகவும் தலைமை உட் கருவாகவும் விளங்குகின்றது. சீனாவின் அரசியல் நிலையான தன்மை என்பது அடிப்படையில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையானதன்மை என்றே அர்த்தப்படும்; இன்னும் முக்கியமானது என்னவென்றால் தலைமைத்துவத்தின் நிலையரான தன்மையும் குறிப்பாக தலைமையின் மூலக் கூறின் நிலையான தன்மையும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

சீனப் புரட்சியின் போதும் சீன நிர்மாணத்தின் போதுமான காலகட்டத்தில் மூன்று தலைமுறைத் தலைமைகள் இருந்து வந்துள்ளன முதலாவது தலைமுறைத் தலைமை தலைவர் மாசேதுங்கால் தலைமை தாங்கப் பட்டது, இரண்டாவது தலைமுறையின் தலைமைத்துவ உட்கரு டெங்சியோபிங் காகும்.

1989 யூனின் பிற்பாடு பொதுச் செயலாளர் ஜியங் சீ (ஜ) மின்னை உட்கருவாகக் கொண்ட புதிய பொதுவுடமைக் கட்சித் தலைமை உருவாக்கப்பட்டது. இது கட்சியின் பதின் மூன்றாவது மத்திய குழுவின் நாலாவது கூட்டத்தொடரின் போது உருவாக்கப் பட்டது. ஜியாங் பல்வேறு துறைகளில் அனுபவச் செழுமை மிக்க மிகக் கற்ற மனிதராகும். இவர்விடுதலைக்கு முன்பு கொமின்ராங்கின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தலைமறைவு வேலைகளில் ஈடுபட்டார். மாணவ இயக்கங்களை அணி திரட்டினார். அவரின் கடந்த இரண்டு வருட வேலைகளினூடாக அவர்தான் தனது முக்கியத்துவம் பெற்ற இடத்திற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்க முடியாத அளவிற்கு தகமை பெற்றவரென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. புதிய தலைமைத்துவம் உருவானதன் பின்னர் அது பல கஸ்டங்களுக்கு முகம் கொடுத்து அவற்றைத் தீர்த்துமுள்ளது. இதன் மூலம் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்துமுள்ளது புதிய தலைமையானது நாட்டின் நல் எதிர்காலத்திற்காக உழைப்பதில் வெற்றிகளை ஈட்டக் கூடிய முறையில் சீன மக்களை வழி நடத்தும் தகமை பெற்றது எனவும் நீண்ட கால கட்டத்திற்குப் புதிய தலைமை நிலை தழும்பாமல் நிற்குமெனவும் நான் நம்புகிறேன்.

வெவ்வேறுபட்ட மூலங்களில் இருந்து தோன்றியதாலும் வெவ்வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதாலும் மேற்கத்தைய தொடர்பு சாதனங்கள் சீனாவைப் பற்றிய பல முரண்பாடுகளையுடைய தகவல்களை தருவது நடைபெறக் கூடியதேயாகும். சிலர் சீனாவிற்கெதிரான காழ்புணர்ச்சியுடனும் உள்ளார்கள் அத்துடன் சீனாவில் ஒரு நிலையான நிலைமையை காணவிரும்பாத சிலரும் இருக்கவே செய்கிறார்கள்.

**பல - கட்சி அமைப்பு முறை சீனாவில் என்றுமே ஏற்படாது**

**கேள்வி:-** முன்னர் சோஷலிஸத்தை கடைப்பிடித்த நாடுகளில் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இன்று பல - கட்சி அமைப்பை கடைப் பிடிக்கிறார்கள் சீனா கடைப்பிடிக்கும் அரசியல் அமைப்பு எவ்விதமானது? சீனா பல — கட்சி அமைப்பை நோக்கி மாற்றமுறுமா?

**பதில்:-** கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலான மாற்றங்களைப் பற்றி நான் ஒன்றுமே சொல்ல விரும்பவில்லை. கிழக்கு ஐரோப்பிய மக்களின் தீர்வை நாம் மதிக்கிறோம். ஆனால் நிச்சயமாக, சீனா என்றைக்குமே பல - கட்சி ஆட்சி முறையை பின்பற்ற மாட்டாது. சீன பொதுவுடமைக் கட்சியின் தலைமையின் கீழ் பல — கட்சி கூட்டுறவே சீனாவின் இன்றைய அரசியல் அமைப்பாகும். தொழிலாளர்களினதும், விவசாயிகளினதும், புத்திஜீவிகளினதும் அதாவது பரந்துபட்ட, வெகு ஜனங்களினது பரந்துபட்ட அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சீனப் பொதுவுடமைக் கட்சிதான் தலைமையின் உட்கருவாகும் இதற்கு மேலதிகமாக, சீனாவில் எட்டு ஜனநாயகக் கட்சிகள் உண்டு; இவை வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறுபட்ட சமூக தட்டுகளின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. சீன பொதுவுடமைக் கட்சிக்கும் ஏனைய ஜனநாயக கட்சிகளுக்கும் இடையே பல தசாப்தங்களான கூட்டுறவுகள் இருந்து வந்துள்ளன. இந்த ஜனநாயக கட்சிகள் எதிர் கட்சிகளல்ல மாறாக இவை அரசாங்க அரசியல் விவகாரங்களில் பங்குபற்றும் கட்சிகளாகும். சீனா மேற்கத்தைய பாணியிலான பல - கட்சி.



அமைப்பைப் பின்பற்றுமானால், சீனா எல்லையற்ற குளங்களுள் ஆழ்த்தப்படும். அதன் பொருளாதாரம் கீழ் நோக்கிய சரிவிற்கு முகங் கொடுக்கும் சீன மக்கள் தமது துன்பகரமான வாழ்க்கையை மீளவும் அனுபவிக்க வேண்டி ஏற்படும். ஆகவே இந்த பல-கட்சி அரசியல் அமைப்பு முறை சீன மக்களின் அபிலாசைக்குப் பொருத்தமான தொன்றல்ல.

சில நாடுகளின் பாராளுமன்ற ஜனநாயக முறை நல்லதோ கூடாதோ என்பதுபற்றி நாம் எதுவும் கூற விரும்பவில்லை. அதேபோல் எமது அமைப்பு முறை தான் உலகிலேயே சிறந்தது என்றும் நாம் கூறவில்லை. ஆனால், சீனாவின் தேசிய நிலைமைகளை கணக்கில் கொண்டு நோக்கும் போது சீன பொதுவுடமைக் கட்சியின் தலைமையின் கீழான பல-கட்சி கூட்டுறவு அமைப்பு முறையே சீனாவிற்கு மிகச் சரியாகப் பொருந்தியது என்பது சந்தேகத்திற்கிடமற்றதாகும்.

**அரசியல் மறுசீரமைப்பும் பொருளாதார மறுசீரமைப்பும்;**

**கேள்வி:-** தயவு செய்து சீனாவால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பற்றி சற்றுக் கூறுவீர்களா?

**பதில்:-** பொருளாதார மறசீரமைப்பை முன்னெடுத்துச் செல்லும் அதே வேளையில் சீனா அரசியல் மறுசீரமைப்பையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் ஆணித்தரமாகவுள்ளோம். இரு சீரமைப்புகளும் ஒரு கூட்டிணைந்த அடிப்படையிலேயே முன்கொண்டு செல்லப்பட வேண்டும்.

சீனா பொருளாதார மறுசீரமைப்பை மாத்திரமே முன்னெடுக்கிறது. அரசியல் மறுசீரமைப்பை அது புறக்கணிக்கிறது என்று சொல்வது புறநிலை உண்மையுடன் ஒத்துப் போகாத தொன்றாகும் அரசியல் மறுசீரமைப்பைப் பொறுத்தவரையில், மக்கள் காங்கிரஸ் அமைப்புமுறை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். அது நாட்டின் அரசியல் வாழ்வில் மேலும் சுறுசுறுப்பான பங்கு வகிக்கும் ஒன்றாக மாறவேண்

டும். இதனுடன் சேர்த்து, ஜனநாயக கலந்தாலோசனை அமைப்பு முறை சீன அரசியலில் மேலும் செல்வாக்கு மிக்கதாக மாறவேண்டும். மக்களும் பொதுஜன அபிப்பிராயங்களும் அரசாங்கத்தை மேற்பார்வை செய்வதில் அதி உயர் பங்களிப்புகளை வகிக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல, ஜனநாயகமும் நீதிபரிபாலன அமைப்புகளும் கூட மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

(மொ—ர்; ஏஜிகே)



# சீன நிலைப்பாடு பற்றி லிபெங்

1991, செப்ரெம்பர் மாதம் 9ம் திகதி சீன அரச சபையின் பிரதமர் லி பெங் அவர்கள், இத்தாலிய வார இதழான 'எபோகா' விற்கு வழங்கிய பேட்டியின் சில பகுதிகள்.

**கேள்வி:-** 45 வருடங்களாக கட்டி உருவாக்கப் பட்ட கிழக்கு ஐரோப்பிய சமதர்ம அமைப்பு ஏற்கனவே மங்கி மழுங்கிப் போனதாகத் தெரிகிறது. இது சீனாவில் என்ன விளைவை ஏற்படுத்தியுள்ளது?

**பதில்:-** ஒரு தவிர்க்கவொண்ணா நியதியாக எந்த சமூக அமைப்பாயினும் சரி அது நிறுவப்பட்டதன் பின் பல பின்னடைவுகளுக்கு முகங் கொடுப்பது இயல்பான தேயாகும். அடிமைச் சமுதாயம் நில பிரபுத்துவ சமுதாயமாக மாறியபோதும், நிலப்பிரபுத்துவ சமுதாயம் முதலாளித்துவ சமுதாயமாக மாறியபோதும் தொடர்ச்சியான பின்னடைவுகளுக்கு முகங் கொடுத்ததை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். அதைப் போலவே, சமதர்ம சமுதாயமும் நிலைநிறுத்தப் படும் போதும் அபிவிருத்தியடையும் போதும் சில பின்னடைவுகளுக்கு உள்ளாவது ஒரு இயல்பான நிகழ்ச்சிப் போக்கேயாகும். சீனப் பொதுவுடமை

வாதிகள் என்ற முறையில், நாம் எமது நம்பிக்கையில் உறுதியாகவுள்ளோம்; சீன குடிமக்கள் என்ற முறையில் எமது மண்ணில் சீன குணாம்சத்தைக் கொண்ட ஒரு சமதர்மத்தை நிறுவ முடியும் என்று நாம் உறுதியுடன் நம்புகிறோம்.

அந்நிய சக்திகளின் ஆக்கிரமிப்புக்கும் அவமதிப்புக்கும் உள்ளாகி துன்பப்பட்டிருந்த காலத்தில் சீனாவிற்கு ஒரு நீண்ட கால காலனியல் அரை-காலனியல் வரலாறு ஒன்று இருந்தது. ஆனால் இன்றோ, சீனா ஒரு சுதந்திர தேசமாகவும், பிரமாண்டமான ஜனத்தொகையுடன் கூடிய ஒரு வளர்ந்துவரும் சக்தியாகவும் உள்ளது. தேசத்தை நவீன மயப்படுத்தவும், தேசிய வளங்களை தகுந்த முறையில் பகிரவும் பயன்படுத்தவும் தேசிய செல்வங்களை நியாயமான முறையில் பங்கீடு செய்யவுமான ஒரேவழி சீன குணாம்சத்துடன் கூடிய சமதர்மத்தை கட்டிவளர்ப்பதல்லாமல் வேறொன்றும் இல்லை. இது சீன மக்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது மாத்திரமல்ல நூறுவருடத்திற்கு மேற்பட்ட தமது அனுபவத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதுமாகும். ஆகவே சீனாவில் சமதர்மத்தை உயர்த்திப் பிடிப்பதி[illegible] நாம் மிகுந்த நம்பிக்கை உள்ளவர்களாகவே உ[illegible]ம். அதே வேளையில், முதலாளித்துவ நாடுகளையும் உள்ளடக்கி சீனாவினதையும் விட மாறுபட்ட சமூக அமைப்புக் கொண்ட அனைத்து நாடுகளுடனும் சமாதானமாகவும் வாழ்வோம்.

கேள்வி:- ஐரோப்பாவில் பொதுவுடமையின் ''சரிந்து வீழலை'' நீங்கள் முன்கூட்டியே உணர்ந்திருந்தீர்களா அல்லது இதையிட்டு நீங்கள் அதிர்ச்சிக்குள்ளானீர்களா?

பதில்:- ''சரிந்து வீழல்'' என்ற பதம் இங்கு பொருத்தப்பாடானதல்ல. சமதர்மம், நடைமுறையில் இருந்த பல ஐரோப்பிய நாடுகளில் பாரி[illegible] மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உள்ளூர், சர்வதேசிய காரணிகள் இம் மாற்றங்களுக்கான அடிப்படையாக அமைந்துள்ளன. இந்த மாற்றங்கள் இந்த தேசங்களுக்கு



சுபீட்சத்தையும் அபிவிருத்தியையும் கொண்டுவருமா என்பதுவும் இந்த மக்களுக்கு இன்பத்தையும் வளர்ச்சிபெற்ற வாழ்க்கைத் தரத்தையும் கொண்டுவருமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆகையினால், நான் உங்களுக்கு சொல்லக் கூடியதெல்லாம் நாம் சீனாவில் சீன குணாம்சங்களுடன் கூடிய சமதர்மத்தை நிர்மாணிப்பதை தொடர்வோம் என்பதேயாகும். இந்த அமைப்பு சீனமக்களுக்கு சுபீட்சத்தையும், இன்பத்தையும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் ஏற்படுத்துவதுடன் சீன தேசத்தின் பலத்தையும் அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

கேள்வி:- 2000 ஆண்டளவில் சீனாவில் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்? அரசியல் மறுசீரமைப்பு இல்லாமல் பொருளாதார மறுசீரமைப்பு வெற்றிபெறும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? (மறுசீரமைப்பு என்பதன் ருஷ்ய பதந்தான் பெறிஸ்ரோறிக்கா வாகும்.)

பதில்:- எதிர்கால திட்ட வரைவுபற்றிய சில கருத்துக்களை மாத்திரமே நாம் கொண்டிருக்க முடியும். வரப்போகும் சில தசாப்தங்களில் என்ன நடைபெறுமென்பதை முன் கூட்டியே சரியாக வருவது கூறல் யதார்த்தத்திற்கு ஒவ்வாததாகும்.

கடந்த நாற்பது வருடங்களில் சீனா தனது மக்களின் உணவு, ஆடை ஆகிய வகைப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டது. உலகின் ஏழு வீதமான பயிர்ச்செய்கைக் காணியையும் கிட்டத்தட்ட உலகின் சனத்தொகையின் கால் பங்கையும் கொண்டுள்ள சீனாவிற்கு இது எவ்விதமும் சாதாரணமானதொன்றல்ல.

இனி வரும் தசாப்தத்தின் அல்லது சீனாவின் நவீன மயமாக்கலின் இரண்டாவது படியின் குறிக்கோளாவது, இரண்டாயிரமாவது வருடத்தில் எமது நாடு தனது மொத்தத் தேசிய உற்பத்தியை 1980ம் ஆண்டிலிருந்ததைவிட நான்கு மடங்காக அதிகரிப்

பதையும் வருடாந்த அதிகரிப்பை ஆறு வீதத்தில் நிலையாக வைத்திருப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளது. இதன் மூலம் மக்களின் வாழ் நிலை மட்டத்தை மிகச் சிறந்த கட்டத்திற்கு உயர்த்த முடியுமென எதிர்பார்க்கிறது.

2030 அல்லது 2050 வாக்கில் மூலோபாயக் குறிக்கோளின் மூன்றாவது படியை அடைவோம். அப்போது சீனா அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சராசரி மட்டத்தை அடைந்திருக்கும். அந்த நேரத்தில் சீனாவின் குடிசனத்தொகை 150 கோடியாக அதிகரித்து இருக்கும்; தேசத்தின் ஒட்டு மொத்தப் பலம் மிக உயர்வானதாகவிருக்கும்.

மூன்று கட்டத்தையுடைய இவ்மூலோபாயக் குறிக்கோளை நிறை வேற்றுவதன் மூலம் சீனா தனது நிரந்தர முன்னேற்றத்தை நிரூபிப்பதுடன் சீனக் குணாம்சமோடு கூடிய சமதர்மத்தை நிர்மாணிக்கும் பாதையின் வெற்றியையும் நிரூபிக்கும். இந்த நிலையிலும் கூட சீனா எவரையும் தூக்கி எறியவோ எந்தரக மேலாதிக்கத்திற்கும் முயற்சிக்கவோ மாட்டாது. உலகத்திலுள்ள அனைத்துத் தேசங்களுடனும் சமாதானமாக வாழ்வதையே நாம் விரும்புகின்றோம்.

சீனாவின் பொருளாதார மறுசீரமைப்புக்கும் அரசியல் மறுசீரமைப்புக்கும் இடையேயான உறவைப் பொறுத்த வரையில் இவைகள் இரண்டும் பரஸ்பரம் ஒன்றுக்கு ஒன்று கீழ்ப்பட்டதாகவும் ஒன்றுடனொன்று கை கோர்த்து முன் செல்வதாகவுமே அமைந்துள்ளது. அரசியல் மறுசீரமைப்பு இல்லையானால் பொருளாதார மறுசீரமைப்பு ஆழப்படுத்தப்படுமென்பது எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும்.

சீனாவின் அரசியல் மறுசீரமைப்பின் மூன்று அங்கங்களாவன:- (1) அனைத்து மட்டத்திலுமுள்ள மக்கள் காங்கிரஸ்களின் பங்களிப்புக்களை முழு அளவிற்கு முன்கொணரல்; (2) நாட்டின் அரசியல் வாழ்வில் சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்படும் பல கட்சிக் கூட்டுறவினதும் அரசியல் ஆலோசனை அமைப்பினதும் பங்களிப்புக்களை உறுதிப் படுத்துதல்; இத்துடன் (3) அரசாங்க வேலைகளில் மக்கள் மேற்பார்வையினதும் மக்களின் விமர்சனம் ஆலோசனை ஆகியவற்றினதும் பங்களிப்புக்களை மேலும் வளர்த்தெடுத்தல்.



அரசியல் மறுசீரமைப்பின் பொது வழிகாட்டு மார்க்கம் யாதெனில் ஜனநாயகத்தை முன்னெடுப்பதும் நீதிபரிபாலன அமைப்பை சரிப்படுத்துவதுமேயாகும். சீனா சமதர்ம அமைப்பை நடைமுறைப்படுத்துகிறது. சீன மக்களே அந்நாட்டின் எஜமானர்களாகும். இக்கடமைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசியல் நிலைதழம்பாத் தன்மையும் சமூக நிலைதழம்பாத் தன்மையும் அவசியமானது.

**கேள்வி:-** எதிர்காலத்தில் ஜனநாயகம் ஓர் உயர்ந்த கட்டத்திற்கு வளர்ச்சியடைந்த பின்பும் கூட சீனா ஒரு பல-கட்சி அமைப்பை நடைமுறைப் படுத்துமா?

**பதில்:-** இல்லை, மேற்கத்தைய பலகட்சி அமைப்பு சீனாவின் யதார்த்தத்திற்குப் பொருந்தாது. ஆனாலும் நான் முன்பு கூறியது போல் சீனாவில் பல கட்சிகள் உள்ளன. ஆனால் இக்கட்சிகள் அரசாங்கத்தில் பங்கேற்பதுடன் அரச செயற்பாடுகளைக் கலந்தாலோசிக்கவும் சீனப் பொதுவுடமைக் கட்சியுடன் ஒத்துழைக்கவும் செய்கின்றன. இவ்விதமான ஒத்துழைப்பு அமைப்பு தொடரும்.

**கேள்வி:-** சோவியத் ஒன்றியத்தின் சீர்குலைவும் புதிய சுதந்திர நாடுகளை உருவாக்கலும் சீனாவில், அதுவும் விசேடமாகச்சீனாவின் சிறுபான்மைத் தேசிய இனங்களினதும் வட எல்லையோரப் பகுதிகளினதும் விவகாரங்களில் ஏதாவது செல்வாக்குச் செலுத்தியுள்ளதா?

**பதில்:-** நான் முதலில் சீன-சோவியத் உறவைப் பற்றிப் பேச விரும்புகிறேன். சீனாவும் சோவியத் யூனியனும் ஏழாயிரம் கிலோ மீற்றருக்கு அதிகமான பொது

வான எல்லையைக் கொண்டுள்ளது. சோவியத் ஒன்றியத்திலேயோ உலகிலேயோ என்னவிதமான மாற்றங்கள் ஏற்பட்டாலும் சரி, சமாதான சகஜீவனத்தின் ஐந்து கோட்பாடுகளினடிப்படையில் சீனா நல்ல அண்டைய உறவுக்கொள்கைகளையும் நட்பையும் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்கும்.

சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சீனாவைச் சில வழிகளில் பாதிக்கவே செய்யும். ஆனால் இந்தப் பாதிப்பு பெரிய அளவினதாக அமையமாட்டாது. ஏனெனில் சீனா சீனக் குணாம்சங்களுடைய சமதர்மத்தையே அமுல்ப்படுத்துகிறது. இவ்விரு நாடுகளுக்கிடையில் பல விடயங்களில் பாரிய வேறுபாடுகள் உண்டு. இதே வேளையில் சீனா தற்போது அரசியல் நிலைதழம்பாத் தன்மையும் பொருளாதார அபிவிருத்தியும் உடையதாகவும் தனது பல்வேறு தேசிய இனங்களிடையே ஐக்கியத்தை உடையதாகவும் திகழ்கிறது. எமது நாட்டின் மொத்த சனத்தொகையின் எட்டு வீதத்தையே ஆக்கும் சீனாவின் ஐம்பத்தைந்து (55) சிறுபான்மைத் தேசிய இனங்கள் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சம உரிமைகளை அனுபவிப்பதுடன் அரசியல்யாப்பு ரீதியான சுயாட்சியையும் அனுபவிக்கிறார்கள். சீனாவின் அனைத்து இன வழிக் குழுமங்களும் நல் உறவுகளை கொண்டிருப்பதுடன் சமாதானமாகவும் வாழ்கிறார்கள். ரஷ்சிய சமஷ்டிக் குடியரசையும் உள்ளடக்கிய சில சோவியத் குடியரசுகள் சீனாவின் வடகீழ் எல்லையிலும் சிங்ஜியாங், உய்குர் சுயாட்சிப் பிரதேச எல்லையிலும் அமைந்துள்ளன. இந்தச் சோவியத் குடியரசுகளும் அண்டைய சீனப் பிரதேசங்களும் நீண்ட காலமாகவே வர்த்தகம், சுற்றுலாத்துறை ஏனைய துறைகள் ஆகியவற்றில் நட்புடன் கூடிய சகஜமான தொடர்புகளை அனுபவித்து வந்துள்ளதுடன் இப்பிராந்திய மக்கள் தமக்குள் நல்லுறவு கொண்டவர்களாகவும் இருந்து வந்துள்ளார்கள் இரு பக்கங்களும் நல் அண்டைய உறவும் நட்புறவும் கொண்டவர்களாகத் தொடர்ந்தும் இருப்பார்கள் என நான் நம்புகின்றேன். சோவியத் ஒன்றியத்தில் எந்தவிதமான மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும்



அவை சீனாவின் எல்லைப்பிராந்தியத்திலுள்ள நிலையான தன்மையைப் பாதிக்கமாட்டாது.

கடந்த செப்ரெம்பர் மாதம் சீனாவையும் சோவியத் ருஷ்யாவையும் இணைக்கும் புகையிரதப்பாதையின் 460 கி. மீ. பாதை சீனாவுள் போடப்பட்டுள்ளது. மத்திய ஆசியாவையும் சீனாவையும் அல்மா கடவையின் ஊடாக இணைக்கும் இவ் இரும்புப்பாதையே இரண்டாவது ஐரோப்பிய ஆசிய கண்டவழித் தொடர்பாக மாறுகின்றது. இது எல்லைப்பகுதிகளில் சீன - சோவியத் உறவின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. இவ் இரும்புப்பாதை சீனாவின் கடற்கரையில் இருந்து புறப்பட்டு சோவியத் ஒன்றியத்தின் ஊடாக ஐரோப்பாவை அடைகின்றது. முதலாவது ஐரோப்பிய ஆசிய கண்ட இணைவுடன் ஒப்பிடும் போது இது சிறியதுதான். இந்த இணைப்பின் மூலம் இத்தாலி தனது நுகர்வுப் பொருட்களை போக்குவரத்துச் செய்வது எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் ஒன்றென எதிர்பார்க்கலாம்.

பீஜிங் றிவி

(மொ-ர் ஏஜிகே)

## அட்டவணை 1

### சோவியத் ஒன்றியத்தின் மொத்த தேசிய வருமானத்தின் வருடாந்த சராசரி அதிகரிப்பு

| ஐந்து வருட காலம் | வருடாந்த சராசரி வளர்ச்சி விகிதம் |
|---|---|
| 1951 — 1955 | 5.5 |
| 1956 — 1960 | 5.9 |
| 1961 — 1965 | 5.0 |
| 1966 — 1970 | 5.2 |
| 1971 — 1975 | 3.7 |
| 1976 — 1980 | 2.7 |

மூலம்; U.S. Congress, Joint Economic Committee. USSR: measures of Economic Growth, 1950 - 1980 (Washington, D.C ; GPO, 1982), P,15.



## அட்டவணை 2

### சோவியத் தானிய அறுவடையும் ஏற்றுமதி இறக்குமதியும்

(10 லட்சம் மெட்றிக் தொன்கள்)

| வருடம் | அறுவடை | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|---|
| 1950 | 81 | 2.9 | 0.2 |
| 1955 | 104 | 3.7 | 0.3 |
| 1956 | 125 | 3.2 | 0.5 |
| 1957 | 103 | 7 4 | 0.2 |
| 1958 | 135 | 5 1 | 0.8 |
| 1959 | 120 | 7.0 | 0.3 |
| 1960 | 126 | 6.8 | 0.2 |
| 1961 | 131 | 7.5 | 0.7 |
| 1962 | 140 | 7.8 | — |
| 1963 | 108 | 6.3 | 3.1 |
| 1964 | 152 | 3.5 | 7.3 |
| 1965 | 121 | 4.3 | 6 4 |
| 1966 | 171 | 3.6 | 7.7 |
| 1967 | 148 | 6.2 | 2.2 |
| 1968 | 170 | 5.4 | 1.6 |
| 1969 | 162 | 7.2 | 0.6 |
| 1970 | 187 | 5.7 | 2.2 |
| 1971 | 181 | 8 6 | 3.5 |
| 1972 | 168 | 4.6 | 15.5 |
| 1973 | 223 | 4.9 | 23.9 |
| 1974 | 196 | 7.0 | 7.1 |
| 1975 | 140 | 3 6 | 15.9 |
| 1976 | 224 | 1.5 | 20.6 |
| 1977 | 196 | 2.3 | 18.9 |
| 1978 | 237 | 2.8 | 15.6 |
| 1979 | 179 | 0.8 | 31.0 |
| 1980 | 189 | 0.5 | 34.8 |
| 1981 | 158 | 0.5 | 46.0 |
| 1982 | 187 | 0.5 | 32.5 |
| 1983 | 192 | 0 5 | [illegible] |
| 1984 | 173 | 1.0 | 55.5 |
| 1985 | 192 | 1 0 | 29.0 |
| 1986 | 210 | 1.0 | 30.0 |

மூலம்; Gorbachev's Challange. Marshall 1. Goldman பக்கம்3-3,

## அட்டவணை 3

### வருடாந்த சோவியத் உற்பத்தி அதிகரிப்பு

| | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மின்சாரம் (Kwh கோடிகள்) | 63 | 73 | 39 | 52 | 37 | 57 | 30 | 31 |
| பெற்றோலியம் (10 லட்சம் தொன்கள்) | 32 | 29 | 26 | 26 | 14 | 17 | 06 | 04 |
| வாயு (கோடி $m^3$ கள்) | 28 | 32 | 25 | 26 | 35 | 28 | 30 | 36 |
| கரி (10 லட்சம் தொன்கள்) | 16 | 11 | 10 | 02 | —05 | —02 | 12 | 14 |
| உருக்கு (10 லட்சம் தொன்கள்) | 05 | 04 | 02 | 03 | —02 | —02 | 01 | —02 |
| உலோகம் வெட்டும் இயந்திர கருவிகள் (ஆயிரங்களில்) | 06 | 01 | 05 | 00 | —08 | —14 | —11 | —10 |
| மோட்டார் வாகனங்கள் (ஆயிரங்களில்) | 82 | 28 | 41 | 32 | 02 | 13 | —03 | —17 |
| தானியங்கள் (10 லட்சம் தொன்கள்) | —56 | 84 | —28 | 41 | —58 | 10 | —31 | 29 |

மூலம்: Gorbachev's Challange, by - Marshall I. Goldman.

## பின்னிணைப்பு.

## லெனின் மீளவும் போல்ஷ்விக் ஆவாரா?

### கட்டுரையின் பதிப்பாளர் குறிப்புகள்

1. கி. ல. பிளெஹானவ்:- ருஷ்ய அனைத்துலக தொழிலாளி வர்க்கத்தின் தலைசிறந்த பிரமுகர்களில் ஒருவர். ருஷ்யாவில் மார்க்ஸிஸத்தை முதன் முதலில் பரப்பியவர். ருஷ்ய மார்க்ஸிஸக் கழகமான "உழைப்பு விடுதலைக் குழுவை" 1833 ல் ஜெனிவாவில் நிறுவியவர். 20ம் நூற்றாண்டின் ஆரம்பநாட்களில ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்துக்கு காரணமாய் இருந்த "இஸ்க்ரா" பத்திரிகை ஆசிரியர் குழுவில் இவரும் ஒருவர். ஆனால் பிற்பகுதியில் இவர் (முதலாவது உலகப்போரின்போது) சமூக தேசிய வெறி நிலைகளுக்கு மாறிவிட்டார். லெனினுக்கு மூத்த இவரை எதிர்த்து லெனின் கடுமையாகப் போராடினார். இவரின் காலம் (1856-1918).

எருவார்டு பெர்ன்ஷ்டைன்:- (1850-1932) இவர் ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியின் சந்தர்ப்பவாதப் பகுதியின் தலைவர். சீர்திருத்தவாதம், திருத்தல்வாதம் இவற்றின் தத்துவவாதி, லெனின் இவரை எதிர்த்து கடுமையான போராட்டம்நடத்தினார்.

கார்ல் காவுத்ஸ்கி:- (1854-1938) ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியின், இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர்; தமது அரசியல் வாழ்க்கையின் தொடக்கப்பகுதியில் மார்க்ஸிஸ

வாதியாய் இருந்தவர். பிற்பாடு மார்க்ஸிஸத்தைக் காட்டிக் கொடுத்தவர். இவர் மிக ஆற்றல் மிக்க பிற்போக்குவாத தத்து வார்த்தவாதியாகும். லெனின் இவருடன் கடுமையாகப் போராட வேண்டி இருந்தது.

மி. அ. பக்கூனின்:- (1814-1876) நரோதியம், அராஜகவாதம் இவற்றின் சித்தாந்த வாதிகளில் ஒருவர். முதலாவது அகிலத்தின் உறுப்பினராய் இருந்தாலும் மார்க்ஸிஸத்தின் கடும் எதிர்ப்பாளராய் இருந்தார். ருஷ்யராகிய இவர் ருஷ்யாவை விட்டு சென்றிருந்தாலும் இவரின் கருத் துக்கு எதிராக லெனின் நீண்டபோராட்டத்தை நடத்தி னார். நி. க. மிகைலோவ்ஸ்கியும் இவ் வகையைச் சேர்ந்தவரே.

சோஷலிஸ்ட் புரட்சியாளர் கட்சி:- ருஷ்யாவில் 1901 இறு தியிலும் 1902 துவக்கத்திலும் பல்வேறு நரோத்னிக் கோஸ்டி களையும் இணைத்து நிறுவப்பட்ட குட்டி முதலாளித்துவ கட்சி. இவர்கள் தமது அழிவுவரை லெனினினதும், அவரின் தலைமையில் அமைக்கப்பட்ட கட்சியினதும் எதிரிகளாகவே இருந்தனர்.

2. 1903 ஆகஸ்டு மாதம்:- ருஷ்யாவின் சமூக-ஜனநாயக கட்சி யின் 2வது காங்கிரஸ் நடைபெற்றது. இதுதான் லெனின் அங்கம் வகித்த கட்சியாகும். இக்காங்கிரஸில் லெனின் தலைமை யிலான புரட்சிகர சமூக ஜனநாயகவாதிகள் மத்திய உறுப்புக் களுக்கு நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை வாக்குக்களைப் பெறுகின்றனர். இதனால் இவர்கள் போல்ஷ்விக்குகள் என அழைக்கப்படுகின்றனர். சிறுபான்மை வாக்குகளைப் பெற்ற பகுதி யினர் மென்ஷ்விக்குகள் எனப்படுகின்றனர்.

ஆனாலும், லெனின் கட்சிக்குள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தார். சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சி போல்ஷ் விக் கட்சியாகின்றது.

லெனினின் முன்முயற்சியால் தொடக்கப்பட்டு, அவரே ஆசிரியராகவும் நிர்வாகியாகவும் இருந்து நடத்தப்பட்டதே ''இஸ்க்ரா'' பத்திரிகையாகும். இது 1900 டிசம்பரில் வெளிவந்து 1904 வரை நீடித்தது. கட்சியின் சக்திகளை ஒன்றுபடுத்து வதில் இப்பத்திரிகை மையமாக இருந்தது. விவாதத்திற்கான நகல் கட்சி வேலைத்திட்டமும் ''இஸ்க்ரா'' மூலமே முன்வைக்கப் பட்டது. இரண்டாவது காங்கிரஸ்(1903)''இஸ்க்ராவை'' கட்சியின்



மத்தியப் பத்திரிகையாகப் பிரகடனப்படுத்தியது. ஆனால் காங் கிரஸ் முடிந்தபின் லெனின் ஆசிரியர் குழுவில் இருந்து விலகி னார். ''இஸ்க்ரா'' மென்ஷ்விக்குகளின் கைக்குச் சென்றது.

3 கான்ஸ்டிட்யூஷனல் டெமோகிறட்டிக்கட்சி:- இதன் அங் கத்தவர்கள் கடேட்டுகள் எனப்படுவர். இது 1905 ஒக்டோபரில் நிறு வப்பட்டது. முதலாளிவர்க்கத்தினர், நிலச் சொந்தக்காரர்கள், முதலாளித்துவ போக்குள்ள படிப்பாளி பகுதியினர் ஆகியோரின் பிரதிநிதிகள் இருந்தனர். புரட்சிக்கு பின் இது மடிந்து விட்டது.

பெஸாகிளாவ்ட்ஸி:- ருஷ்ய முதலாளி வர்க்கப்படிப்பாளிப் பகுதியினரிடையே இருந்த ஒரு அரை-கடேட்டு அரை-மென்ஷ்விக் குழு. 1905 - 1907ம் ஆண்டுகளில் நிறுவப்பெற்றது. முதலாளித் துவ மிதவாத சந்தர்ப்பவாதப் போக்கை பிரதிநிதித்துவப் படுத் தினார்கள். புரட்சியின் பின் இக்கட்சியும் இல்லை.

மென்ஷ்விக்குகள்:- லெனின் வெளியேறிய பின்னர் ருஷ்ய சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் மீதப் பகுதியி னர் 1917ல் நடைபெற்ற (பெப்ரவரி) முதலாளித்துவ - ஜனநா யக புரட்சியைத் தொடர்ந்து மென்ஷ்விக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்க உறுப்பினர்களாகினார்கள். பின்னர் சோஷ லிஸப் புரட்சிக்குப் பிறகு எதிர் புரட்சிகர குழுவாகி அழிந்தே போனார்கள்.

சட்டபூர்வமான மார்க்ஸிஸ வாதிகள்:- இவர்கள் பெரன்ஷ டைன் வாதத்தைப் பின் பற்றியவர்கள். பல்கலைக் கழக பீடங்களில் மையங் கொண்டிருந்தனர். விமர்சன சுதந்திரம் என்று கூறிக்கொண்டு ''மார்க்ஸிஸத்தை திருத்த வேண் டும்'' என்று கோரினர். புரட்சியின் பின் இவ் அமைப்பும் இல் லாது போய்விட்டது.

நரோத்தையா வோல்யா (மக்கள் சித்தம்) ஆதரவாளர் கள்:- இது நரோத்னிக் தீவிரவாதிகளின் புரட்சிகரமான இரகசிய அமைப்பு. 1899ல் நிறுவப்பட்டது.

ஏதேச்சாதிகாரத்தை தூக்கி எறிந்து ஒரு ஜனநாயக குடி யரசை நிறுவுவதற்கு ஒரு அரசியல் போராட்டத்தின் அவசியம் பற்றிய பிரச்சினையை கிளப்பினார்கள். வீரமும் தன்னலமின்மை யும் இருந்தது. ஆனால் தவறான தத்துவமும் தவறான போர்த் தந்திரங்களும், மக்களோடு விரிந்து பரந்த தொடர்புகள் இன்மை யும் இவ் அமைப்பு முறிந்து போக காரணமாயிற்று. புரட்சிக்கு முன்னரே இதன் சரித்திரம் முடிந்து விட்டது.

லெனினும், பிளெஹானவும் இதனுடன் ஒரு நீண்ட சித்தாந்த போர் நடத்தினார்கள்.

**சோஷலிஸ்ட் — புரட்சியாளர் கட்சி:-** இது ருஷ்யாவில் 1902ல் நிறுவப்பட்ட ஒரு குட்டி முதலாளித்துவ கட்சியாகும். இது முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவி ஏற்றது 1917 அக்டோபர் எழுச்சியின் போது இது பகிரங்கமாகவே எதிர்ப்புரட்சி முதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்து கொண்டு, முதலாளித்துவ ஆட்சியை ஆதரித்தது. 1917 நவம்பரில் இக்கட்சியின் இடதுசாரியினர் சுயேச்சைக் கட்சி ஒன்றை நிறுவிக் கொண்டனர். போல்ஷ்விக்குகளுடன் ஒப்பந்தம் செய்தனர். ஆனால் சிறிது காலம் செல்ல சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போராட புறப்பட்டுவிட்டனர்.

பின்பு தோற்றும் போயினர். இவற்றை விட வேறும் பல கட்சிகள் இருந்தன. இவை எல்லாம் அழிந்தே போயின.

4. **1917 அக்டோபர்:-** புரட்சிக்கு முன்னைய ருஷ்யாவில் ருஷ்யர்களே ஆளும் இனக்குழுமமாக இருந்தார்கள். ஏனைய அனைத்துவகை இனக் குழுமங்களும் அடக்கப்பட்டன. தேசிய இன ஒடுக்கு முறை நிலவியது. இவ் அடக்கு முறையானது அன்று மாருஷ்ய பெருந்தேசஅகங்காரம் என்றே அழைக்கப்பட்டது.

5. **புதிய பொருளாதார கொள்கை:- (New Economic Policy) (N. E. P.)** 1921ம் ஆண்டு லெனினால் முன்வைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டமாகும். 1917ம் ஆண்டு அதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் முன்னதாகவே சோவியத் விவசாயிகள் தமது நிலபிரபுக்களின் (குலாக்குகள்) நிலங்களை அபகரித்தார்கள். 1921ல் லெனினால் அறிமுகப்படுத்தப்பட்ட N.E.P ஐ அவர் ஆர்வமுடன் பின்பற்றினார்கள் இது நிலம் விவசாயிகளின் தனிப்பட்ட பாவனையின் கீழ் இருப்பதை உறுதிப்படுத்தியது. சந்தைப் பொருளாதாரத்தையும் சில கட்டுப்பாடுகளுடன் அனுமதித்தது. மொத்த வருமானமும் தலாவருமானமும் அதிகரித்தது.

ஆனால் ஸ்ராலின்தலைமை 1920களிலேயே N.E.P.ஐ கைவிட்டது. நிலம் கூட்டுறவு மயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டது.

கொர்பச்சேவ் தனது மறுசீரமைப்பை (பெரிஸ்ரோறிக்கா) "N.E.P க்கு மீண்டும் திரும்புவது" எனவும் அர்த்தப்படுத்தினார்.



# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | தவறாக பதிந்துள்ள சொல் | சரியான சொல் |
|---|---|---|---|---|
| 15 | 2 | 16 | Toraliraian | Totalirarian |
| 16 | 1 | 14 | சோவியத் ஒன்றியத்தில் | சோவியத் ஒன்றியம் |
| 22 | 8 | 8 | அரசு கொள்வனவு | அரசகொள்வனவு |
| 34 | 1 | 9 | விளிம்படுத்த | விழிம்புநிலை |
| 37 | - | தலையங்கம் | போல்ஷ்லிக் | போல்ஷ்விக் |
| 41 | 2 | 6 | தழுவிய | நாடுதழுவிய |
| 44 | 2 | 1 | துஸ்பிரயோகம் | துஷ்பிரயோகம் |
| 48 | 2 | 5 | ஆதிகாரத்துவம் | அதிகாரத்துவம் |
| 48 | 4 | 6 | மிதமிச்சங்கள் | மீதமிச்சங்கள் |
| 49 | 4 | 3 | உத்தியோக பூர்வமாக | உத்தியோக பூர்வமான |
| 51 | 2 | 7 | யோல்ஷ்லிக் | மென்ஷ்விக் |
| 55 | 1 | 2 | குளங்களுள் | குழப்பங்களுள் |
| 59 | 5 | 5 | காப்பங்கையும் | கால்ப்பங்கையும் |
| 63 | 2 | 1 | செப்ரெம்பர். | செப்ரம்பர் |

86414

## தமிழ்த்தாய் பதிப்பக வெளியீடுகள்

- "ஒருவேள்வி நடக்கிறது" — புதுவை அன்பன்.
- "குவேனி" (நாவல்) — செங்கை ஆழியான்.
- "தமிழரின் தாகம்" (கவிதைத் தொகுதி) — மு. வே. யோ. வாஞ்சிநாதன்.
- "இன்குலாப் கவிதைகள்" — கவிஞர் இன்குலாப்.
- " மணலாறு " — மணலாறு விஜயன்.
- "இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்" — மு. திருநாவுக்கரசு.

தமிழ்த்தாய் பதிப்பகம்,
யாழ்ப்பாணம்.